பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 22 செவ்வாய்க்கிழமை (08.12.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 012

# ஜனாதிபதித் தேர்தல்: 2 தரப்புகளும் தமிழ்க் கூட்டமைப்புக்கு வலைவீச்சு

## பஸில் சுரேஸுடன்; சரத் சம்பந்தனுடன் பேச்சு

கொழும்பு, டிசெம்பர் 8

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஆதரவு வழங்குமாறு கோரி இரு பிரதான வேட்பாளர்களின் தரப்புகளில் இருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தொடர்ந்து வலை வீசப்பட்டு வருகின்றது.

நேற்றுமுன்தினம் இரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனுடன் எதிரணியின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவும், அதே வேளை கூட்டமைப்பின் மற்றொரு சிரேஷ்ட தலைவரான சுரேஷ் பிரேமச்சந்திரனுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரதம ஆலோசகரும் சகோதரருமான பஸில் ராஜபக்ஷ எம்.பியும் பேச்சு நடத்தியிருக்கின்றனர்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

உள்ளே

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான வணிகக்கல்வியும் கணக்கீடும் I, II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## மஹிந்த சார்பில் நேற்று தேர்தல் கட்டுப்பணம்

கொழும்பு, டிசெ. 08

ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் வேட்பாளராக எதிர்வரும் ஜனாதிபதி

(20ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்ட நீடிப்புக்காக இன்று கூடும் சபையை ஒரு மாதத்துக்கு இடைநிறுத்தி வைக்க அரசு தீர்மானம்

கொழும்பு, டிசெ.8

நாடாளுமன்ற நடவடிக்கைகளை அரச ஒரு மாதத்திற்கு தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதற்கு தீர்மானித்துள்ளது எனத் தெரியவருகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகவே நாடாளுமன்ற நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக [illegible]ன அறியவருகிறது. ஜனாதிபதி தேர்த[illegible]க்கான அறிவிப்பு வெளியாகி, திகதி குறிப்பிடப்பட்டதன் பின்னர் நாடாளுமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கூடவிருக்கின்றது.

அவசரகாலத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதம் நடத்தப்படும். அவசரகாலச் சட்டத்தை நீடித்துக்கொண்டதன் பின்னர் ஜனவரி இரண்டாம் வாரம் வரையில் நாடாளுமன்ற நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் இறுதித் தீர்மானத்தை எட்டுவதற்கு அரசு

(20ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் சிறுவர் போராளிகளை பார்வையிட்டார் ஐ.நாவின் பிரதிநிதி

கொழும்பு, டிசெ.8

சிறுவர்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பான ஐ.நா. ஆணையாளரின் விசேட பிரதிநிதியாக இலங்கைக்கு வருகை தந்திருக்கும் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பற்றிக் கமேயற் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன் னாள் சிறுவர் போராளிகளுக்குக் கொழும் பில் புனர்வாழ்வு வழங்கப்படுகின்ற மையை நேற்றுக்காலை நேரில் சென்று பார்வையிட்டார்.

அவர் இரத்மலானை இந்துக்கல்லூரிக்கு விஜயம்செய்து அங்கு புனர்வாழ்வு பெற்றுவரும் 300பேர் வரையிலான முன்னாள் சிறுவர் போராளிகளைச் சந்தித்து உரையாடினார் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் கோர்டன் வெய்ஸ் தெரிவித்தார்.

பற்றிக் கமேயற் பின்னர் மட்டக்களப்புக்கும், வவுனியாவுக்கும் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## வங்கிக் கிளைகளால் நிரம்புகிறது வடக்கு!

### வாரம் ஒரு புதிய கிளை திறப்பு

கொழும்பு, டிச. 08

வடமாகாணத்தில் அறுபதுக்கும் மேற்பட்ட வங்கிக் கிளைகளை ஆரம்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவராட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு வாரமும் ஒரு புதிய கிளை அங்கு ஆரம்பிக்கப்படுகின்றது என்று 'இந்துஸ்தான் டைம்ஸ்' நாளிதழுக்கு அளித்துள்ள பேட்டியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

''வடமாகாணத்தில் அறுபதுக்கும் மேற்பட்ட வங்கிக் கிளைகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## நலன்புரி முகாம்களில் மிகுதியுள்ள மக்களும் ஜனவரியில் மீளக்குடியமர்த்தப்பட்டு விடுவர்

### யாழ்.செயலகத்தில் வைத்து ஆளுநர் நேற்றுத் தகவல்



யாழ்ப்பாணம்,டிசெ.08.

இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த 2 லட்சத்து 72 ஆயிரத்து 751 மக்களில் ஒரு லட்சத்து 44 ஆயிரத்து 846 பேர் இதுவரை மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர். நலன்புரி முகாம்களில் எஞ்சியுள்ள ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 905 பேரும் ஜனவரி மாத இறுதிக்குள் மீளக்குடியமர்த்தப்படுவார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண ஆளுநர் மேஜர். ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி.

நேற்றுக்காலை யாழ்.செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ஆளுநர் இத்தகவலை வெளியிட்டார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் யாழ். அரச அதிபர் கே.கணேஷும் கலந்து கொண்டார்.

ஆளுநர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

64 ஆயிரத்து 196 இடம்பெயர்ந்த மக்கள் யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய், பாண்டியன்குளம் பகுதிகளி

(19ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை தினத்தை முன்னிட்டு நகரில் வியாழனன்று மக்கள் பேரணி

### ஒரே மேடையில் தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.8

மனித உரிமைகள் இல்லத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை ஒட்டி மக்கள் பேரணி, தீபமேற்றல் ஆகிய நிகழ்வுகள் நாளை மறுதினம் வியா

(20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நாளை பாடநூல் பகிர்ந்தளிக்கும் தேசிய வைபவம்

### கல்வி அமைச்சர் தலைமையில் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.8

பாடசாலைப் பாடநூல் பகிர்ந்தளிக்கும் தேசிய வைபவம் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிறேமஜயந்த தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷ, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கல்விச் சேவைகள் அமைச்சர் நிர்மல கொத்தலாவல, பிரதிக் கல்வி அமைச்சர் எம். சச்சிதானந்தன், கல்வி அமைச்சின் செயலாளர் எம்.எம்.என்.டி. பண்டார ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுவர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் பக்கத்துக்குத் தாவினார் எஸ்.பி. திஸாநாயக்கா; மஹிந்தவின் வெற்றியை எவராலும் தடுக்க முடியாதாம்

கொழும்பு, டிச. 08

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக ஜெனரல் சரத் பொன்சேகாவை நிறுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி உடன்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், மத்திய மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவருமான எஸ்.பி.திஸாநாயக்க இதுவரைத் தாம் கட்சியில் வகித்து வந்த அனைத்துப் பதவிகளையும், மாகாண சபை உறுப்பினர் பதவியையும் இராஜிநாமாச் செய்துவிட்டு நிபந்தனைகள் எவற்றையும் விதிக்காது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தாம் இணைகிறார் என்று நேற்று அறிவித்தார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இளைஞர், யுவதிகளின் மேம்பாட்டுக்காக இலங்கை வங்கியின் ஏற்பாட்டில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 8

யாழ்.மாவட்ட இளைஞர், யுவதிகளின் மேம்பாட்டிற்காகவும் இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் இலவச கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும் நடத்த இலங்கை வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு வைபவரீதியாக யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. பயிற்சிப் பட்டறையும், கருத்தரங்கும் இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் கரியாலய வளாகத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் பொது முகாமையாளர், பி.ஏ.சி.பெர்னாண்டோ, பிரதிப் பொது முகாமையாளர் (கிளைகள்) ஐ.டீ.வீரசேன ஆகியோருடன் நிபுணத்துவவாளர்களும் கொழும்பு தலைமைக் காரியாலயத்திலிருந்து பங்கு பற்றுவதற்கு வருகை தரவுள்ளனர்.

இவர்களுடன் யாழ்.மாவட்ட அரச அதிபரும், யாழ்.மாநகர முதல்வரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஏற்கனவே எம்மால் பத்திரிகை மூலம் கொடுக்கப்பட்ட விளம்பரத்திற்கு ஏற்ப இதுவரை விண்ணப்பிக்காத இளம் தொழில் முயற்சியாளர்கள் உடனடியாக தமது விண்ணப்பங்களை மேற்கொள்ளுமாறு இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரத்தினம் கேட்டுள்ளார். (1)

## நவாலி வயல் வெளியில் பெண்ணின் சடலம் மீட்பு; சந்தேகத்தில் மானிப்பாயில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,டிசெ.08

நவாலி வயல் வெளிப் பகுதியில் கடந்த வாரம் பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸ்நிலைய பொறுப் பதிகாரி எஸ்.ஜெயவீர தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நேற்று முன்தினம் மல்லாகம் மாவட்டநீதிபதி ரி.பிரபாகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

இவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.ஜெயவீர மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த முதலாம் திகதி நவாலி வயல் வெளியில் கழுத்து நெரிக்கப்பட்டு கொலையுண்டதாகக் கருதப்படும் பெண் ஒருவரின் சடலம் மானிப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்ட துரித விசாரணையை அடுத்து சந்தேகநபர் ஒருவர் மானிப்பாய் மருதடி வீதியில் உள்ள வீடொன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

காரைநகரைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் தற்காலிகமாக மானிப்பாய் மருதடி வீதியில் வசித்து வருகிறார். அவரது மனைவி, பிள்ளைகள் வவுனியாவில் வசித்து வருவதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கொலையுண்ட பெண் தனது குடும்பத்தினரை விட்டுப்பிரிந்து பல மாதங்களாக மானிப்பாயில் வசித்து வந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொலை செய்யப்பட்ட பெண் அணிந்திருந்ததாகக் கருதப்படும் தங்க நகைகள் சந்தேக நபரிடமிருந்து மீட்கப்பட்டன - என்றார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(50-9-93)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் கணேசன் (கெங்கன் கணேசன்)

வாரிவளவு, காரைநகரைச் சேர்ந்த பொன்னம்பலம் கணேசன் நேற்று (07.12.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வாரிவளவு,*
*காரைநகர்.* (A)

தகவல்:
பிள்ளைகள்.

## திருமதி சின்னையா சிவகாமி

தையிட்டியை பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவகாமி 06.12.2009 ஞாயிற்றுக் கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற சதாசிவப்பிள்ளை சின்னையாவின் அன்பு மனைவியும் நாகலிங்கம் கணேசபிள்ளையின் (ஓய்வு பெற்ற உப அதிபர்) அன்புச் சகோதரியும் திருமதி வை.கணேசபிள்ளையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மைத்துனியும் க.சசிகுமாரனின் (நிகழ்ச்சித் திட்டமிடல் உதவியாளர். ச.வை.மா. திணைக்களம், திருகோணமலை) அன்பு மாமியாரும் சதாசிவப்பிள்ளை, குணரத்தினம், கமலாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.12.2009) திங்கட்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*'சத்தியகிரி',*
*இணுவில்.*

தகவல்:
நா.கணேசபிள்ளை
ஆசிரியர் (சகோதரர்).

## திருமதி இராமநாதன் சரஸ்வதி

பருத்தித்துறை பிரதான வீதி, புலோலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமநாதன் சரஸ்வதி நேற்று (07.12.2009) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை - தங்கமுத்து தம்பதியினரின் அருமை மருமகளும், காலஞ்சென்ற இராமநாதனின் அன்பு மனைவியும், சிறீதர் (பிராந்திய முகாமையாளர், LIC திருகோணமலை), ஆனந்தி (சுவீடன்), இந்துமதி (ஆசிரியை, யா/தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராஜஇராஜேஸ்வரி, இராஜநாயகம் ஆகியோரின் மாமியாரும், உமாஜினி, பிரணவன், புருசோத்தமன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2009) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரதான வீதி,*
*பருத்தித்துறை.*
*077 6678481* (90983)

தகவல்:
இ.சிறீதர் (மகன்).

## Dr.சின்னத்தம்பி ஆறுமுகம்

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும்கொண்ட ஓய்வுபெற்ற பதிவு வைத்திய அதிகாரி சின்னத்தம்பி ஆறுமுகம் நேற்று (07.12.2009) திங்கட் கிழமை காலை லண்டன் (Middlesex) இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - இலட்சுமிப் பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், நிர்மலா சிவலோகநாதன், தெய்வேந்திரம், ஜயேந்திரன், மல்லிகா சிவரூபன், உமாவேந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவலோகநாதன், சிவகலா, கலா, சிவரூபன், நிர்மலா ஆகியோரின் மாமனாரும், வினோதினி, ரமணன், தமயந்தி, Dr.சிவன்சங்கர், பிறேமினி, மணிவண்ணன், பிரணவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*லட்சுமி தியேட்டர் ஒழுங்கை,* தகவல்: ஆ. தெய்வேந்திரம் (மகன்)
*நெல்லியடி, கரவெட்டி.* (நூலகர், பிரதேச சபை, பருத்தித்துறை) (90986)

## நலன்புரி நிலைய மாணவர் சாதாரணதரப் பரீட்சை அனுமதிப் பத்திர விநியோகம்

சாவகச்சேரி, டிசெ.8

கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்துடன் இணைந்திருந்த நலன்புரி நிலையப் பாடசாலை மூலம் ஜீ. சீ. ஈ சாதாரணதர பரீட்சைக்கு விண்ணப்பித்த சகல மாணவர்களையும் இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 9 மணிக்கு அங்கு சமுகமளிக்குமாறு பாடசாலை இணைப்பாளர் அறிவித்துள்ளார். பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்படவுள்ளன. தபால் அடையாள அட்டையும் கொண்டு வருமாறு மாணவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ-51)

கல்வியங்காடு 3ம் கட்டை, பருத்தித்துறை வீதியிலிருந்து 25 m தூரத்தில் கலைமணி வீதியில் சுற்றிலும் மதிலால் சூழப்பட்ட 4 அறைகளைக் கொண்டதும் நவீன வசதிகளுடனும் (மோட்டார் மைல்லைன், கராஜ்) பயன்தரு மரங்கள் சூழ்ந்ததுமான 3/4 பரப்பிலமைந்த பெரிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு 0776624500, 0776660400

விற்பனைக்கு
JR XXXX இலக்கமுடைய CD 100 SS மோட்டார்சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்புகட்கு: 0776519594

பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம்
A/L DAY CLASS
<= தமிழ் =>
திரு.N. சத்தியவேந்தன் B.A (Hons) M. Phil (Jaffna)
பிரிவு I தீங், செவ், புத, வியா, வெள் காலை 8 - 10 வரை
பிரிவு II சனி, ஞாயிறு பிற்பகல் 2 - 4 வரை
* முழுப்பாடத்திட்டமும் பூர்த்தி செய்யப்படும்
* கடந்த 10 வருட வினாக்களும் மீட்டல் செய்யப்படும்
* மாதாந்தம் பரீட்சைகள் நடைபெறும்

# தற்காலிகமாக இணைப்புப் பெற்றுள்ள ஆசிரியரின் பிரச்சினை பற்றி ஆராய்வு

## நாளை விசேட கூட்டம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 8

குடாநாட்டுப்பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்கள் ஒன்றியத்தின் விசேட கூட்டம் நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரியகுளம் உயர்கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

ஆசிரியர்கள் 2010 ஆம் ஆண்டு எதிர்நோக்கவுள்ள பிரச்சினைகளை நேரில் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு ஆராய்ந்து தீர்க்கும் வகையில் இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எனவே அனைத்து தற்காலிக இணைப்புப் பெற்று யாழ்குடாவில் தங்கியுள்ள ஆசிரியர்களும் இச்சந்திப்பில் உரிய நேரத்தில் கலந்து கொண்டு தமது பிரச்சினைகளை நேரில் எழுத்து மூலம் சமர்ப்பிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஏனைய சாதாரண ஆசிரியர்களும், கல்விசாரா ஊழியர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். அவர்களின் எழுத்து மூல வேண்டுகை கல்வி அமைச்சிற்கு வழங்கப்படும் என்று தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ஒ-1)

## அரசாங்க அறிவித்தல் பருப்பு விற்பனை செய்வதற்கான கூறுவிலை கோரல்

நாவற்குழி அரச உணவுக்களஞ்சியத்தில் விற்பனை செய்வதற்காக தரமான பருப்பு காணப்படுகின்றது. இப்பருப்பினை விற்பனை செய்வதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கூறு விலைகள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றன. இப்பருப்பினை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவத்தினை புனர்வாழ்வு கிளையில் பெற்று தபால் உறையின் மேல் மூலையில் "பருப்பு விற்பனை செய்வதற்கான கூறுவிலை" என குறிப்பிட்டு 16.12.2009ம் திகதி மு.ப. 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு புனர்வாழ்வுப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் சீல் (Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள். இதன் மேலதிக விவரங்களை மாவட்டச் செயலக புனர்வாழ்வு கிளையுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

கூறுவிலைகள் 16.12.2009ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் பிரதிநிதி உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் சமுகமளிக்க முடியும்.

**கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.**

க.கணேஷ்
அரசாங்க அதிபரும்/ மாவட்ட செயலாளரும்
யாழ்.மாவட்டம். (சி/563007)

# மரண அறிவித்தல்கள்

## ஜெயரஞ்சன் பீடில்



தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயரஞ்சன் பீடில் நேற்று (07.12.2009) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவசிவாயம் பீடில் - ஜெயலஷ்மி (பவளம்) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பூதத்தம்பி குலராஜசிங்கம் மற்றும் மேபிள் கண்மணியின் அன்பு மருமகனும் இராஜியின் அன்புக் கணவரும் அகலியா (கனடா), நிரோஜன் (டுபாய்), மிதுலா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குமரன் (கனடா), மனாசே (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சங்கீத், சஞ்ஜே, அபிகே ஆகியோரின் அன்புப் பேரனும், நவரஞ்சினி (அவுஸ்திரேலியா), ராயு பீடில் (அவுஸ்திரேலியா), ரதினி (லண்டன்)ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தபாற்கந்தோர் வீதி,*
*சாவகச்சேரி. 0773944486* (சி/563008)

தகவல்:
ராஜி (மனைவி).

## முருகன் யோகநாதன் (சாரதி)



பளையைப் பிறப்பிடமாகவும் 17, பூங்கா வீதி, குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் யோகநாதன் நேற்று (07.12.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் முருகன் - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் லூர்த்து தம்பதியினரின் மருமகனும், அரியமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற றஜீஸ் மற்றும் மொறிஸ், சுரேஸ், கிளி (லண்டன்), ராதிகா (லண்டன்) ஆகியோரின் தந்தையும் ரஜனி, சுதா, சுபா, ஈசன்(லண்டன்), சபேஸ் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், செல்லம், காலஞ்சென்ற துரைராசா மற்றும் சண்முகம், தியாகராசா, ஜெயராசா (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும், அந்தோனிப்பிள்ளை, பத்திமா, லவேந்திரன், அருளம்மா, உதயன் ஆகியோரின் மைத்துனரும், துசைந்தன், பிராங்கா, ஷாரு, ஜெபான்சி, திவான், சபீனா, அர்ச்சயா, கரீஸ் (லண்டன்), தருஷ்ணவி (லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (09.12.2009) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*10/12, மத்தியூஸ் வீதி,* (92953)
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் இரு தரப்புகளினதும் நிலைப்பாடு என்ன?

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெளிவுபடுத்த வேண்டும் என ஜே.வி.பி. பகிரங்கமாகக் கோரியிருக்கின்றது.

அரசுத் தரப்பின் கூட்டமைப்பில் உள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான விடயத்தில் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கும் அப்பால் செல்ல ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு முன்வரவேண்டும் என்று கூறியுள்ளமையை ஒட்டியே இந்த விடயத்தை ஜே.வி.பி. இப்போது கிளப்பியிருக்கின்றது.

அரசில் இடம்பெற்றுள்ள முக்கிய தமிழ்க் கட்சி அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று அதிகாரத்தைப் பகிரவேண்டும் என வற்புறுத்துகின்றமையால், இவ்விடயத்தில் அரசுத் தலைவரின் நிலைப்பாடு என்ன என்று ஜே.வி.பி. கேட்பதில் நியாயம் உண்டுதான். ஆனாலும் அதற்கு அப்பாலும் இவ்விவகாரத்தில் சில முக்கிய விடயங்கள் பொதிந்திருக்கின்றமை சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

ஜே.வி.பிக்கு முன்னரே இந்த விடயத்தை ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் எழுப்பியிருந்தார் என்பது கவனிக்கத்தக்கது.

''அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆளும் கட்சிகளுக்கு இடையில் பலத்த முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஈ.பி.டி.பியின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரான கிழக்கு மாகாண முதலமைச்சர் சந்திரகாந்தன் (பிள்ளையான்) ஆகியோர் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்கிறார்கள். ஆனால் அரசுடன் இருக்கும் ஹெல உறுமயவைச் சேர்ந்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ ஆகியோர் அந்த முயற்சியைப் பகிரங்கமாக எதிர்க்கின்றனர். எனவே, இது தொடர்பாக அரசுத் தலைமை தனது உறுதியான நிலைப்பாடு என்னவென்பதை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.'' - என்று கோரியிருந்தார் மனோ கணேசன்.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்துவிட்டோம் என இந்த ஆட்சித் தலைமை மார்தட்டியபோது அதையடுத்து இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்கும்படி சர்வதேசத்தால் வலியுறுத்தப்பட்டது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்தி மக்கள் அனுமதியை - அங்கீகாரத்தை - பெற்றுக்கொண்டு தீர்வுத் திட்டத்தை முன்வைப்பேன் என்று அறிவித்தார் ஆட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

ஆக, இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தாம் முன்வைப்பதற்கான அங்கீகாரத்தைக் கோரி இந்தத் தேர்தலை முற்கூட்டியே நடத்த முற்படுகிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்று கருதுவதில் - அர்த்தப்படுத்துவதில் - தப்பில்லை.

இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தாம் முன்னெடுப்பதற்கான அனுமதியைப் பெறும் நோக்கில் இந்தத் தேர்தலை அணுகுகின்றமையால் இனப்பிரச்சினைத் தீர்வை ஒட்டிய விடயங்களில் - அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் போன்ற முக்கிய அம்சங்களில் - அவரின் கருத்து நிலைப்பாட்டைப் பகிரங்கப்படுத்துமாறு எதிரணிக்கட்சிகள் கோருவதில் நியாயமுண்டு. அதேபோல, அந்த விடயங்கள் தொடர்பில் தமது நிலைப்பாட்டை மக்களுக்குப் பகிரங்கப்படுத்தவேண்டிய கடப்பாடும், பொறுப்பும் அவருக்கு உள்ளது என்பதும் மறுக்கற்பாலதல்ல. அதனை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்விடயத்தில் தமது பதிலை - விளக்கத்தை - நிலைப்பாட்டை - அவர் வெளியிட்டுத் தெளிவுபடுத்தியே ஆகவேண்டும்.

அதேசமயம், இவ்விடயத்தில் ஜே.வி.பி. போன்ற பிரதான எதிர்க்கட்சிகளுக்கும் சில பொறுப்புகள் உள்ளன என்பதும் மறுக்கக் கூடியதல்ல.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. போன்ற எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து இந்தத் தேர்தலில் பொது வேட்பாளராக ஜெனரல் சரத் பொன்சேகாவை நிறுத்தியுள்ளன. அவர் கூட கண்டியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில், ஆரம்பத்தில் அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துகின்றமையை முற்றும் முழுதாக எதிர்த்த ஜே.வி.பி., இனித் தனது நிலையை மாற்றிக்கொண்டு அதற்கு ஒத்துழைக்கும் எனத் தாம் நம்புகின்றார் எனக் குறிப்பிட்டிருந்தார்.

எனவே, அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் அரசுத் தலைமையின் நிலைப்பாட்டைப் பகிரங்கப்படுத்தக் கோரும் ஜே.வி.பி., இதே விடயம் தொடர்பில் தமதும், தாம் ஆதரிக்கும் எதிர்க்கட்சிப் பொது வேட்பாளரினதும், அவரை ஆதரிப்பது தொடர்பில் தன்னோடு தோள் கொடுத்து நிற்கும் ஐக்கிய தேசிய முன்னணி உட்பட்ட எதிரணியினதும் கருத்துகளை முதலில் வெளிப்படையாகப் பேச வைப்பது முக்கியமாகும். அதைச் செய்விக்குமா ஜே.வி.பி.? அதன்பின்னரே அது தனது எதிர்த்தரப்பில் உள்ள அரசுத் தலைமையிடம் இந்த விடயத்தைத் தெளிவுபடுத்துமாறு கோரவேண்டும். அதுவே சரியான நடைமுறையாகும்.

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் முதலில் எதிர்க்கட்சிகளின் பக்கத்தில் உள்ள தரப்புகள் தங்களின் நிலையைத் தெளிவுபடுத்திவிட்டுப் பின்னர் அரசுத் தரப்பின் கருத்தை எதிர்பார்ப்பதுதான் பொருத்தமானதாக இருக்கும்.

# மீளக்குடியமர்ந்த விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுங்கள்

## வடமாகாண ஆளுநரிடம் மகஜர் கையளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.8

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்.மாவட்டத்தில் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்ட விவசாயிகள் அனைத்து உடைமைகளையும் இழந்த நிலையில் உள்ளனர். எனவே அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

இவ்வாறு வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள விவசாயிகள் சார்பில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மீள்குடியமர்த்தப்பட்ட விவசாயிகளுக்கான நீரிறைக்கும் இயந்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் தலைமையில் திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

வீட்டு வசதி, மலசலகூடம் அமைத்துத் தரவேண்டும். கிணறுகளைத் திருத்தம் செய்ய வேண்டும்.

நிலம் பண்படுத்துவதற்கு தேவையான விவசாய உபகரணங்கள் வழங்கப்படவேண்டும். வேலி இல்லாத நிலையில் உள்ள தோட்டங்களை சுற்றி வேலி அடைப்பதற்கான கம்பி, தூண் ஆகிய உதவிகளை வழங்க வேண்டும்.

விவாசாய உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனை செய்வதற்கான நிர்ணய விலையினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மீளக்குடியேறிய விவசாயிகளுக்கான அலுவலகம் ஒன்றினை அமைத்து அவர்களுடைய பிரச்சினைகளையும், தேவைகளையும் அறிந்து உதவிகள் வழங்க வேண்டும்.

வெற்றிலை, திராட்சை, வாழை ஆகியவற்றின் செய்கையை மீள ஊக்குவித்தலுக்கான உதவிகளை வழங்கவேண்டும். உற்பத்தி செய்யப்படும் விளைபொருள்களை சேமித்து வைத்து விற்பனை செய்வதற்கான களஞ்சிய கட்டடம் அமைக்கப்பட வேண்டும்.

மேட்டு நிலப்பயிர்களுக்கான மானிய உரம் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகளைச் செய்வதுடன் இரண்டு சில்லு உழவு இயந்திரம் மானிய அடிப்படையில் வழங்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கான வங்கிக்கடன் வசதிகளை பெற்றுக் கொள்ள வசதிசெய்வதுடன் பயிர்ச் செய்கைக்கான எரிபொருள் மானிய அடிப்படையில் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீளக்குடியேறிய விவசாயிகளில் இதுவரை நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கப்படாத விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரம், விதைகள், நாற்றுக்கள் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஆடு, ஒரு மாடு வழங்க வேண்டும்-என்றுள்ளது. (50-14-23)

# யாழ். மாநகரசபையில் கலாசாரப் பிரிவை அமைப்பதற்கு வடமாகாண ஆளுநர் அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ,08

யாழ்.மாநகரசபையில் கலாசாரத்துக்கென தனியான பிரிவை அமைப்பதற்கு வடமாகாண ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளார். அதற்கான நிதி கிடைத்ததும் கலாசாரபிரிவுக்கு ஆள் சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் பட்டதாரிகளிடமிருந்து கோரப்பட வுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.மாநகரசபையில் இதுவரை காலமும் கலாசாரத்துக்கென தனிப் பிரிவு அமைக்கப்படவில்லை. இதனால் கலாசார விழுமியங்களைப் பேணிப்பாதுகாக்கும் செயற்றிட்டங்களை முன்னெடுப்பதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இத்தகைய நிலையினைக் கருத்திற் கொண்டு யாழ்.மாநகரசபையில் கலாசாரத்துக்கு தனிப்பிரிவு ஒன்று அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியிடம் முன்வைத்தோம்.

எமது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஆளுநர் கலாசாரப்பிரிவினை அமைப்பதற்கான அனுமதியினை வழங்கியுள்ளார். அப்பிரிவினை தனியாக அமைத்து செயற்படுத்துவதற்கான நிதி கிடைத்ததும் ஆள்சேர்ப்புக்கான விண்ணப்பம் கோரப்படும். கலாசாரப்பிரிவுக்குபட்டதாரிகள் மட்டும் உள்வாங்கப்பட்டு சேவைக்கமர்த்தப்படுவார்கள் - என்றார் அவர். (50-9)

# புனரமைப்புச் செய்யப்பட்ட கசூரினா கடற்கரை நேற்று முன்தினம் வைபவரீதியாகத் திறந்து வைப்பு

## அமைச்சரும், ஆளுநரும் கலந்துகொண்டனர்

யாழ்ப்பாணம், டிசெ.8

வடமாகாணத்தில் பிரசித்திபெற்ற கடற்கரை சுற்றுலா மையங்களில் ஒன்றான காரைநகர் கசூரினா கடற்கரை புனரமைப்பு செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஆகியோரினால் உத்தியோகப்பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

மிக நீண்ட காலமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பிரசித்தி பெற்ற இடமாக கசூரினா கடற்கரை திகழ்ந்திருந் தது. சுற்றுலாமையமாக மட்டுமின்றி யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 'கடேற்'சாரணர்களின் பாசறை மையமாகவும் நெடுங்காலம் விளங்கியிருந்தது.ஆயினும் கடந்கால யுத்த நடவடிக்கைகள் காரணமாக அது பாதுகாப்பு பிரதேசமாக விளங்கியதுடன் அதற்கு மேலாக 2004ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின் போது மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் காரைநகர் பிரதேச சபையின் பரிபாலனத்திற்குட்பட்ட கசூரினா சுற்றுலாமையம் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமா காண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஆகியோரின் நேரடி வழிகாட்டலிலும் நிதி ஏற்பாட்டிலும் புனர மைப்பு செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கசூரினா கடற்கரை உத்தியோகபூர்வ திறப்பு நிகழ்வின் நினைவினை முன்னிட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் ஆளுநர் சந்திரசிறியும் கசூரினா மரக் கன்றுகளை கசூரினா கடற்கரையில் நட்டனர். (50)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை | 23 09.12.2009 புதன்கிழமை |
| திதி: | அட்டமி மு.இ.09.19 வரை |
| நட்சத்திரம்: | பூரம் பி.ப. 04.29 வரை |
| [illegible] | [illegible] வரை |
| [illegible] | [illegible] வரை |

# ஜீ.சீ.ஈ.சாதாரணப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.8

இவ்வருடம் ஜி.சீ.ஈ. (சா.த.) பரீட்சை எழுதும் மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்கான உபகரணங்களை வழங்க 523 ஆவது படைப்பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

523ஆவது படைப்பிரிவுக்கு உட்பட்ட சகல பாடசாலை மாணவர்களுக்கும் இந்த உபகரணங்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு இதன் பிரதான வைபவம் இடம்பெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து மட்டுவில் கமலாசினி வித்தியாசாலை, மட்டுவில் சரஸ்வதி வித்தியாசாலை, நுணாவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாசாலை, கைதடி விக்னேஸ்வரா வித்தியாசாலை, கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, நாவற்குழி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்களுக்கும் இந்த உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. பேனா, பென்சில், 'பைல்கவர்', அடிமட்டம் என்பன வழங்கப்படும் உபகரணங்களில் அடங்கியுள்ளன. (50)

# யாழ்.மாநகரசபையின் ஏற்பாட்டில் டெங்குநோய் விழிப்புணர்வு பிரசாரம்

நல்லூர், டிசெ.8

பொதுமக்களிடையே டெங்கு நோய்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு யாழ்.மாநகர சபை நகரின் அனைத்துப் பகுதிகளிலும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தவுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

இதன் முன்னோடியாக யாழ். போதனா வைத்தியசாலையுடன் இணைந்து நாவாந்துறை சென் மேரிஸ் கல்லூரியிலும், குருநகர் பகுதியிலும் கடந்த 5ஆம் திகதி முதல் டெங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடைபெற்றன. நடைபெற்ற இரு கருத்தரங்குகளிலும் குறிப்பிட்ட பகுதிகளைச் சேர்ந்த பெருமளவு மக்கள் கலந்து கொண்டு டெங்கு நோய் ஒழிப்புக்கான ஒத்துழைப்புக்களை வழங்க முன்வந்தது குறித்தும் முதல்வர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடியதாக நோய்பற்றிய தகவல்களை மக்களுக்கு உணர்த்தக்கூடிய துண்டுப் பிரசுரங்களை யாழ்.மாநகரசபையின் முன்னாள் சுகாதார வைத்திய அதிகாரி இ.தெய்வேந்திரன் அன்பளிப்பாக வழங்கியதாகவும் முதல்வர் யோகேஸ்வரி தெரிவித்தார். (50-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்கில் புதிய காவலரண்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 8

வடமராட்சி கிழக்கில் அம்பன் தொடக்கம் வலிகண்டி வரையான பிரதான வீதியின் இருமருங்கிலும் இராணுவத்தினர் காவலரண்களை அமைத்து வருகின்றனர்.

பனங்கொட்டுக்களைக் கொண்டு அமைக்கப்படும் இந்த காவலரண்களுக்கு மேல் புறத்தில் ஓடுகள் அடுக்கப்படுகின்றன. காவலரண்களைச் சுற்றி படையினர் மண் அணைகளையும் அமைத்து வருகின்றனர். (ஒ-78)

# சித்திரக் கண்காட்சி

யாழ்ப்பாணம், டிசெ - 8

சமூக விழுமியங்கள் தொடர்பான பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களில் கோட்டப்பட்ட கண்காட்சி இன்று முற்பகல் 11 மணிக்கு வேலணை மத்திய கல்லூரியில் ஆரம்பமாகும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஷ்ணனும், சிறப்பு விருந்தினராக வேலணை கோட்டக்கல்விப் பணிப்பாளர் கு.சரவணபவானந்தனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஒ - 267)

## யா/ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி
## உங்கள் உயர்வில் உவகை கொண்டோம்



முதுமாணி பட்டப்படிப்பில் அதி விசேட சித்திபெற்ற எங்கள் பிரதி அதிபர்

**இ.ஆனந்தநடராசா**



இலங்கை அதிபர் சேவை 2-II பதவி உயர்வு பெற்ற எங்கள் உப அதிபர்

**கு. விமலன்**

எங்கள் கல்லூரி வளர்ச்சியில் என்றும் உறுதுணையாயுள்ள உங்கள் உயர்வில் உள்ளம் உவகை கொண்டோம். பாராட்டுக்கள்! வாழ்த்துக்கள் !!

- கல்லூரிச்சமூகம் - (93005)

## ஆழ்ந்த அஞ்சலி

### லயனல் திலகநாயகம் போல்



இசை உலகில்
இணையிலா விற்பனர்
வட இலங்கைச் சங்கீத சபையின்
ஆட்சிக்குழு உறுப்பினர்
சுர ராக லவ விநோத சுரபி
கலைச்செம்மல் கலாபூஷணம்
சங்கீத பூஷணம்
லயன் திலகநாயகம் போல்
மறைவுக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

யாழ்.வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

வட இலங்கை சங்கீத சபை.

(இ/563003)

# CHILDREN'S WORLD

## DAYCARE CENTRE & PRESCHOOL IN ENGLISH MEDIUM

யாழ் நகரின் மத்தியில் புதியதோர் உதயம்

பாலர்பகல் பராமரிப்பு மற்றும் முன்பள்ளிகளுக்கான சர்வதேச தரத்திலான கொள்கைகள், இலங்கை அரசின் சிறுவர் செயலகத்தின் தேசிய கொள்கை என்பவற்றை உள்ளடக்கியது.

ஆரம்பம் 22.01.2010

அனுமதிகள் 09.12.2009 முதல்...



### Preschool (முன்பள்ளி)

- ☆ அமைதியான, பாதுகாப்பான சூழல்.
- ☆ நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் சேவை.
- ☆ போதுமான உள்ளக மற்றும் வெளியக விளையாட்டு உபகரணங்கள்.
- ☆ கணணி ஊடான கற்றல் நடவடிக்கைகள்.
- ☆ மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இலவச சுற்றுலா, மற்றும் மருத்துவ சேவை.
- ☆ தமிழ் மற்றும் சிங்கள மொழியூடாகவும் கற்பித்தல் நடவடிக்கைகள்.



### DAYCARE(பகல் பராமரிப்பு)

- ☆ எமது பாதுகாப்பில் இருக்கும் நேரத்தில் 100% பாதுகாப்பு உத்தரவாதம்.
- ☆ முழுநேரமும் மகிழ்ச்சியாக இருக்கக் கூடிய வகையில் விளையாட்டு வசதிகள்.
- ☆ நாளாந்த மற்றும் மாதாந்த அடிப்படையிலுமான பராமரிப்பு சேவைகள்.
- ☆ போசாக்கு உணவு.
- ☆ பிள்ளை வளர்ப்பு மற்றும் முன்பள்ளிக் கல்வி தொடர்பான பெற்றோர்களுக்கான அறிவூட்டல்கள்.
- ☆ பிள்ளை பராமரிப்புத் தொடர்பாக நன்கு பயிற்றப்பட்டவரின் சேவை.
- ☆ ஒவ்வொரு பிள்ளைக்கும் தனித்தனி பராமரிப்பாளர்கள்.



**No 16,2nd Lane,Palaly Road,Jaffna. T.P 0214900405**

## கேள்விப்பத்திரம் கோரல்

யாழ்.போதனா வைத்தியசாலையில் பின்வரும் உபகரணங்கள் பராமரிப்பு செய்வதற்கு தகுதியான வர்களிடமிருந்து போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்களையும் நிபந்தனைகளையும் மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/- செலுத்தி 21.12.2009 வரை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 23.12.2009 மு.ப. 10 மணிக்கு திறக்கப்படும். அத்தருணம் கேள்வி சமர்ப்பித்த ஒப்பந்தகாரர்கள் சமுகந்தரமுடியும்.

பராமரிக்கப்பட வேண்டிய உபகரணங்களின் விவரம்:

1. Window type Air Conditioner
2. Split type Air Conditioner
3. Package type Air Conditioner
4. Mortuary Coolers
5. Industrial Washing Machine
6. British Aid (Central) Air Conditioner

போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

ஏ.தேவநேசன் பணிப்பாளர்.

(இ/563004)

## விற்பனைக்கு

*பாவித்த நல்ல நிலையில் உள்ள*

- HISENSE 19" LCD (சுவரில் பொருத்தக் கூடிய - USB உள்ள) உத்தரவாதம் வழங்கப்படும்.
- SINGER தையல் மெஷின் (மோட்டருடன்)
- PIONEER - SD - 3 BOX
- ROBION FY15 - 110V எஞ்சின் 1500 W
- SONY 25" T.V.

தொடர்பு - 180/30, யூனியன் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0770731157

## உடன் தேவை

யாழ் நகரின் மையப் பகுதியில் காட்சியறைக்கான இடம் தேவை.
(கே.கே.எஸ் வீதி,ஸ்ரான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி. கஸ்தூரியார் வீதி)

தொடர்புகளுக்கு
R.ஜெகதீஸ்வரன்
T.P No:-0777554528

## கண்ணீர் அஞ்சலி

யாழ் பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் செல்வி பரமேஸ்வரி கணேச கம்பரின் பாசமிகு பேரன்

### இசைக்கம்பர் முத்துக்குட்டி

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இசைத்துறையினர், யாழ்.பல்கலைக்கழகம். (92949)

## கண்ணீர் அஞ்சலி

### இசைப்பேரசான் லயனல் திலகநாயகம் போல்

அவர்களின் மறைவானது இசையுலகிற்கே பேரிழப்பாகும். அன்னார் எமது இசைத்துறையில் வருகை விரிவுரையாளராகவும், வெளிவாரிப்பரீட்சகராகவும் ஆற்றிய பணியானது மிகவும் போற்றுதற்குரியது. அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இசைத்துறையினர், யாழ்.பல்கலைக்கழகம். (92949)

## மரண அறிவித்தல்கள்

### முத்தையா சிவனடியான்



கரம்பன் மேற்கைப்பிறப்பிடமாகவும் புளியங்கூடலை வசிப்பிடமாகவும் இந்தியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா சிவனடியான் இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - கற்பகம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், ரேணுகாவின் அன்புத் தந்தையும், அருட்செல்வத்தின் பாசமிகு மாமனும், கிஷானன், அபிஷானன் ஆகியோரின் அன்புப் பேரனும் சிவபாக்கியம், செல்வராசா, பரிபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நடராசா, மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (08.12.2009) செவ்வாய்க்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல். (92951) தகவல்: மா.நடராசா (manager)

### ஆறுமுகம் கனகேஸ்வரி



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், ஏழாலை கிழக்கை வாழ்விடமாகவும் தற்போது 46/1, 04 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கனகேஸ்வரி (இராசாத்தி அக்கா) நேற்று (07.12.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மருமகளும், துரைராஜா, தவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிங்காரம் மற்றும் சுந்தரம்பிள்ளை, கிருஸ்ணமூர்த்தி, பொன்னம்மா, விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற கோபாலசிங்கம் மற்றும் சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2009) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*46/1, 4 ஆம் ஒழுங்கை (சிவா மில்), பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.* (92943)

தகவல்: ம.சிவானந்தன் (சிவா - மருமகன்)

## மரண அறிவித்தல்

### திருமதி காராளசிங்கம் நாகேஸ்வரி
(ஓய்வு பெற்ற பெண் பரிசாரகர்)



மண்டைதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லோட்டன் வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காராளசிங்கம் நாகேஸ்வரி நேற்று (07.12.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - ராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காராளசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆச்சியம்மா, சிவபாக்கியம்,சின்னம்மா, லிங்கப்பப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், வினோதன், வினோதினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பராணி (காஞ்சனா), விக்ரர் (ஜேர்மனி), வேலும்மயிலும்,காலஞ்சென்ற விமலரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஏகாம்பரம், சந்தனாலஷ்மி, சச்சிதானந்தசாமி (சுவிஸ்), ஜெயானந்தராஜா (ஜேர்மனி), லிங்கநாதன் (சுவிஸ்) ஆகியோரின் சிறியதாயாரும், சதீஸ்குமார் - மீரா (கனடா), சுபாசினி - மோகனபவன் (திட்டமிடல் பணிப்பாளர் - கிளிநொச்சி), சிந்துஜா, நகோமி, றெபேக்கா, அனோஜன், சலோமி, சாருஜா (ஜேர்மனி), கார்த்திகா (சுவிஸ்), நிரோசினி (சுவிஸ்), சங்கீத் (சுவிஸ்), அஷ்வினி (சுவிஸ்), ஜெயரூபன் (பிரான்ஸ்), கலைஅரசன் (ஜேர்மனி), கலைரூபஅரசி (ஜேர்மனி), அருள்குமார், சிவகுமார், கீர்த்தனா, துவாரகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தனுஜா, யதுசா (கனடா), மதுரிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*லோட்டன் வீதி, மானிப்பாய்,*
T.P - 021222 3401 (92948)

தகவல்: கா. வினோதன் (மகன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுதேச வைத்தியத்துறையை மேம்படுத்தத் தாதியர்களை யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்து பயிற்சியளிக்க நடவடிக்கை

## அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.8

சுதேச வைத்தியத்துறையை மேம்படுத்தும் பொருட்டு அதற்குரிய தாதியர்களை யாழ்ப்பாணத்திலேயே தெரிவு செய்து -பயிற்சியளித்து- நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை சுதேச வைத்தியத்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

யாழ் 'யூரோவில்' நிறுவனத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தரமுகாமைத்துவ சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இத் தகவலைத் தெரிவித்தார்.

'யூரோவில்' நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.இராமதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் மேலும் கூறியதாவது:-

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் சுதேச வைத்தியத்துறையை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். கைதடி ஆயுள்வேத சித்த வைத்தியசாலை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் 'எங்கள் வைத்திய இல்லம்' என்ற ஐந்து வைத்திய விடுதிகளை அமைப்பதற்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் மூலிகைச் செடிகளை வளர்ப்பதற்கான காணிகளை கொள்வனவு செய்யவும் மூலிகைச் செடிகளை வளர்ப்பவர்களுக்கான உதவிகளை வழங்கவும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.



யாழ்ப்பாணத்திலுள்ள சுதேச வைத்தியசாலைகளில் நிலவும் வைத்தியர் பற்றாக் குறையை நீக்கும் பொருட்டு சித்த மற்றும் ஆயுள்வேத வைத்தியர்கள் அடுத்த வருடம் நியமனம் செய்யப்படவுள்ளனர். தாதியர் பற்றாக்குறையை நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது - என்றார். (50)

## சிறுவர் சஞ்சிகை வெளியீடும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம்,டிசெ.8

சுகவாழ்வு நிலையத்தின் சிறுவர்கள் சஞ்சிகை வெளியீடும், பரிசளிப்பு வைபவமும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ். அடைக்கல அன்னை ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சுகவாழ்வு நிலையத்தின் இயக்குநர் அருட்பணி எம்.செபமாலை பெரேரா (அ.ம.தி) தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் கலந்து கொள்வார். (50-23)

## தென்மராட்சி மாணவருக்கான இலவச பாடநூல்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.8

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் வைத்து பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன. பாடநூல்கள் மாணவர்களுக்கு நாளை ஒன்பதாம் திகதி விநியோகிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (50-207)

## அல்லைப்பிட்டி ஓலைப் பாய்களுக்கு யாழ்.நகரப் பகுதியில் கிராக்கி

### தெற்கு மக்கள் அள்ளிச் செல்வதால்

நல்லூர்,டிசெ.8

அல்லைப்பிட்டிக் கிராமத்தில் இருந்து பனை ஓலைப்பாய்கள் விற்பனைக்காக யாழ்.நகருக்கு எடுத்து வரப்படுகின்றன.

அல்லைப்பிட்டியில் மீளக்குடியமர்ந்த மக்கள் ஓரளவு வருமானத்தைப் பெறும் நோக்குடன் தற்சமயம் குறைந்த அளவில் பனை ஓலைப் பாய்களை உற்பத்தி செய்து அவற்றை விற்பனை செய்வதற்காக யாழ்.நகருக்கு எடுத்து வருகின்றனர்.

தீவுப் பகுதியில் இருந்து பெறப்படும் பனைப்பொருள் உற்பத்திகள் மிகவும் தரம் வாய்ந்தவை என்பதால் தென்பகுதியில் உள்ளவர்கள் அவற்றை அள்ளி எடுத்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (50-111)

## புலோலி பாற்பண்ணைக் கிராமத்துக்கு மலையகத்திலிருந்து பசுக்கள்!

### ஏ-9 ஊடாகக் கொண்டு வரப்பட்டன

வடமராட்சி,டிசெ.8

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் புலோலி பாற்பண்ணைக் கிராமத்திற்கென மலையகத்திலிருந்து பசுமாடுகள் கொண்டு வரப்பட்டு கால் நடை வளர்ப்போருக்கு வழங்கப்பட்டன.

பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய அதிகாரி சி.வசிகரன் தலைமையில் மலையகத்திற்குச் சென்ற கால்நடை வைத்திய அதிகாரிகள் குழு எட்டு இலட்சம் ரூபா செலவில் 20 பசுமாடுகளைக் கொள்வனவு செய்து ஏ-9 பாதை ஊடாக கொண்டு வந்து சேர்த்தனர். ஜேசி இனத்தைச் சேர்ந்த இப்பசுமாடுகள் புலோலி வடகிழக்கு, புலோலி தெற்கு , புற்றளை ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பாற்பண்ணைக் கிராம கால்நடை வளர்க்கும் பயனாளிகளுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டன.

இந்த நல்லினப் பசுக்களை மலையகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரும் செலவினங்களைக் கால்நடை அபிவிருத்தித் திணைக்களம் பொறுப்பேற்றுக் கொண்டது. இதேவேளை ஒவ்வொரு பயனாளிகளுக்கும் 23 ஆயிரத்து 750 ரூபா மானிய அடிப்படையிலேயே இப் பசுமாடுகள் விநியோகிக்கப்பட்டன.

இதே திட்டத்தின் கீழ் உடுவில் அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தாலும் மலையகத்தில் நல்லினப் பசுமாடுகள் கொள்வனவு செய்து கால்நடை வளர்ப்போருக்கு வழங்கப்படவுள்ளன. (50-236)

## பண்ணைப் பாலம் கடுமையாகச் சேதமடைந்துள்ளதால் தீவுப்பகுதிக்கான போக்குவரத்தில் பெரும் பாதிப்பு

நல்லூர், டிசெ.8

யாழ்.குடாநாட்டுடனான தீவுப்பகுதிக்கான ஒரேயொரு போக்குவரத்துக்கான வழித்தடமான பண்ணைப்பாலம் கடுமையாகச் சேதமடைந்துள்ளமையால் அதனூடாகப் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலைமை மேலும் மோசமடைந்தால் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த ஆண்டில் ஏற்பட்ட நிஷா வெள்ள அனர்த்தம் காரணமாக வீதி முற்றாகச் சேதமடைந்தது. இதனையடுத்து சேதமுற்ற பகுதிகளில் கற்கள், மண் போடப்பட்டு வாகனப் போக்குவரத்துக்காகச் சீர்செய்யப்பட்டது.

இந்த வீதியின் முக்கியத்துவம் கருதி வடக்கின் வசந்தம் திட்டத்தில் உடனடியாக பண்ணைப்பாலம், வீதி என்பன திருத்தியமைக்கப்படும் எனவும், முதலில் ஒரு கிலோ மீற்றர் தூரத்தை உடன் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

எனினும் பண்ணைப்பாலம் குறிப்பிட்டது போன்று முதலில் ஒரு கிலோமீற்றர் தூரம் வரை கூடத் திருத்தப்பணிகள் இடம்பெறவில்லை. சேதமுற்ற பகுதிகளில் கல், மண் போட்டு நிரப்பப்பட்டதுடன் இடையிடையே உள்ள குழிகள் தார்க் கலவை போடப்பட்டு மூடப்பட்டன.

இந்த வீதியால் இருசக்கரவாகனங்கள் கூட ஒழுங்காகப் போக்குவரத்துச் செய்ய முடியாதநிலை உள்ளது. பஸ் உட்பட பார ஊர்திகள் செல்வதிலும் ஒன்றையொன்று விலகி வழிவிட்டுச் செல்வதிலும் சிரமங்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது.

மழையைத் தொடர்ந்து கடல் நீர்மட்டம் உயரும்போது உடைந்துகிடக்கும் பாலத்தின் கரையோரப் பகுதிகளில் கடல்நீர் நிறைந்து காணப்படும் எனவும், இதனால் வாகனங்கள் ஒன்றையொன்று விலகி வழிவிடும்போது விபத்துக்கள் ஏற்படலாம் எனவும் வாகன ஓட்டுநர்கள் கூறுகின்றார்கள்.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டங்கள் இந்த மாதத்தில் பூர்த்தியடையும் எனக் கூறப்படும் நிலையில் குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் முதலில் செய்து முடிப்பதாகக் கூறப்பட்ட ஒரு கிலோ மீற்றர் தூரத்தைத்தானும் திருத்தியமைக்க எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையே எனப் பொதுமக்கள் விரக்திடைந்துள்ளனர். (50-111-269)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## யாழ்ப்பாணத்தில் சோளச் செய்கையை ஊக்குவிக்க 200 பயனாளிகளுக்கு மானிய விலையில் பொருள்கள்

வலி.வடக்கு,டிசெ.8

யாழ்.மாவட்டத்தில் சோளச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக 200 பயனாளிகளுக்கு சோளச் செய்கைக்கான பொருள்கள் மானியமாக வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.குடாநாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களமும் உலக விவசாய நிறுவனமும் இணைந்து இச் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பிரான்பற்று-10, பெரியவிளான்-25, மானிப்பாய் கிழக்கு -10, முள்ளானை-10 என மொத்தம் 55 பயனாளிகளுக்கும்-

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் அளவெட்டி வடக்கு-10, கட்டுவன் 10 என மொத்தம் 20 பயனாளிகளுக்கும்-

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உரும்பிராய் வடக்கு-15, ஊரெழு -20, நீர்வேலி மேற்கு-10 என மொத்தம் 45 பயனாளிகளுக்கும்,

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தொண்டைமானாறு-10, புலோலி வடமேற்கு-10 என மொத்தம் 20 பயனாளிகளுக்கும்,

சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவில் எழுதுமட்டுவாள்-10, கைதடி கிழக்கு -25, கைதடி மத்தி-25 பேருமாக மொத்தம் 60 பயனாளிகளுக்கும் இந்த மானியம் வழங்கப்படவுள்ளது.

ஒரு தனி நபருக்கு 02 கிலோக்கிராம் சோளம்விதை, 05 கிலோக்கிராம் யூரியா, 10 கிலோக்கிராம் ரி.ஸ்.எம், 05 கிலோக்கிராம் எம்.ஓ.பி உரமும் வழங்கப்படவுள்ளன. (50-86)



யாழ்.மாநகரசபை உறுப்பினர் மு.கோமகனின் ஏற்பாட்டில் ஜி.சீ.ஈ சாதாரணதர வகுப்பு மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு அண்மையில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஈ.பி.டி.பி. கட்சியின் தேசிய அமைப்பாளர் ப.ஜீவரத்தினம், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய அதிபர் எஸ்.பிரான்சிஸ், மாநகரசபை உறுப்பினர் மு.கோமகன் ஆகியோர் உரையாற்றுவதை முதல் மூன்று படங்களிலும், நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்:-நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் திருமுகம்

### மூன்று மாதம் ஆகியும் நிவாரணம் இல்லை

வவுனியா முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டு யாழ். குடாநாட்டில் வந்து தங்கியுள்ள வன்னிமக்கள் பலர் மூன்று மாதங்களாகியும் எவ்வித நிவாரண உதவிகளுமின்றிப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். குடாநாட்டின் சிலபகுதிகளில் தங்கியுள்ள சிலருக்கு உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் உலருணவுப் பொருள்கள் கடந்த ஒக்டோபர் மாதத்துக்கானது மட்டும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் பெரும் எண்ணிக்கையான மக்களுக்கு இன்னமும் அவை வழங்கப்படவில்லை. ஒரு சிலருக்கு மட்டும் ஐயாயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளதோடு மிகுதி 20 ஆயிரம் ரூபாவினை வங்கியில் வைப்பிலிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. ஆனால் பலர் குறிப்பிட்ட ஐயாயிரம் ரூபா பணம் கூடக் கிடைக்கப் பெறாத நிலையிலும், உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்படும் உலருணவு நிவாரணம் எதுவும் வழங்கப்படாத நிலையிலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உறவினர் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள மக்கள் இதனால் மிகுந்த உளவியல் தாக்கங்களுக்கும் உள்ளாகிவருகின்றனர். குறிப்பாக யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் 104ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் மக்கள் கடந்த ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி வவுனியா முகாம்களிலிருந்து அழைத்து வரப்பட்டனர். அவர்களுக்கு போரூட் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உப உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகள் ஒருமுறை மட்டும் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை வேறுவகையில் எவ்வித பணமோ, வேறெந்த நிவாரணப் பொருள்களோ அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பெருமாள் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

வி.ராஜா.

### உழைப்பை மட்டும் வாடகைக்கு கொடுக்கும் நிலை வர விடலாமா?

சில தசாப்தங்களுக்கு முன்னர் வடபகுதியில் தொழில் முயற்சிகள் ஓரளவிற்கு வளர்ச்சியடைந்து கொண்டு வந்தன. நாட்டு நிலைமையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகப் பல தொழிற்சாலைகளும் மற்றும் சிறுசிறு அளவிலான தொழில்களும் அழிந்தொழிந்து போயின. ஆயினும் சிற்சில தொழில்கள் பல இன்னல்களுக்கு மத்தியிலும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. நடந்து கொண்டிருக்கும் தொழில்களில் போதிய வசதிகளோடு சரியான முறையில் சட்டத்திற்கும் அமைவாக ஈடுபடுவதற்கு இது காலவரை வாய்ப்புகள் இருந்ததில்லை. எல்லாவற்றையும் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயமும் இருக்கவில்லை.

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் மாறுதல் விஷயங்களைச் சரியாகவும் சட்டத்திற்கு அமைவாகவும் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தப்போகிறது. காரணம் இலகுவாக யாரும் வந்து ஒரு தொழிலைத் தொடங்கக் கூடிய ஏதுநிலை தற்போது உண்டு. ஆகவே போட்டி அதிகரிக்கும் நியமங்களுக்கு அமைவாக இல்லாத தொழில் முயற்சிகள் நெருக்கடிக்குள்ளாக வேண்டிவரும்.

தனியார் தொழிற்றுறையில் எம்மவருக்கு இயல்பாகவே நாட்டமில்லாத காரணத்தால் நிர்ப்பந்தத்தின் பேரில் ஈடுபடுவது என்று ஆகிவிட்டது. சில குறிப்பிட்ட தொழில்களில் விரும்பி ஈடுபடுபவர்களும் எல்லா அம்சங்களையும் கருத்தில் எடுப்பதில்லை. இவை வெற்றி பெற்றிருந்தாலும் கூட போட்டி ஏற்படும்போது எல்லா அம்சங்களையும் கவனத்திற்கொள்ள வேண்டி வரும்.

உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மந்த நிலை காரணமாக நிறுவனங்கள் புதிய புதிய சந்தைகளையும் தொழில் நிலையங்களையும் தேட வேண்டிய தேவையுண்டு. அபிவிருத்தி என்ற ஒன்று சரியாக முன் வைக்கப்படுமானால் வசதி வாய்ப்புகள் எமது பகுதிகளில் ஒப்பீட்டு ரீதியில் அதிகரிக்கும். அதைப் பங்கு போட நிறுவனங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. நமது தொழில் முயற்சியாளர்களுக்கு ஒரு முன்னுரிமையும் கிடைக்கப் போவதில்லை. ஆகவே நாம் போட்டிக்குத் தயாராகுவதைத் தவிர வேறு வழியில்லை. தொழில் சார் அறிவிலும் நியமங்களைக் கடைப்பிடிக்கும் தன்மையிலும் நாங்கள் பல படிகளைத் தாண்ட வேண்டியுள்ளது. தொழில் முயற்சியாளர்களுக்குரிய துறைசார் திறமையில் மட்டுமல்ல சாதாரணமாக மற்றைய பிரதேசங்களில் காணப்படும் பொதுத் தகைமைகளிலும் நாம் பரிச்சயமேற்படுத்திக் கொள்ளவேண்டும். சரியான தருணத்தில் நாம் இவற்றைச் செய்யத் தவறினால் தமது உழைப்பை மட்டும் வாடகைக்குக் கொடுக்கும் நிலைக்கு நாம் படிப்படியாகத் தள்ளப்பட்டுவிடுவோம்.

கொக்குவில்.

வை.சந்திரபாலன்.

## அரச ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டனரென தெரிவிப்பது அரங்கேற்றப்பட்ட ஒரு நாடகம்

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 8

நேற்றுமுன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களால் அரச ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டனர் எனக் கூறப்படும் சம்பவம், ஐக்கிய தேசியக் கட்சியின் மீது பழிபோடுவதற்காக அரசால் திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்பட்ட ஒரு நாடகம் - என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது அரச மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்தன.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த திஸ்ஸ அத்தநாயக்க இதுதொடர்பில் மேலும் கூறியவை வருமாறு -

இந்தத் தாக்குதலுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இப்படியான ஒரு சம்பவம் நிகழ்ந்திருப்பின் அதனை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

எனினும், ஐக்கிய தேசிய கட்சியின் செய்திகளைச் சேகரிப்பதற்கு அரச ஊடகங்கள் அழைக்கப்படுவதில்லை. எவரேனும் அழைக்கப்படாமல் வந்தாலும் அவர்களை திருப்பியனுப்பமாட்டோம்.

இப்படியான ஒரு சம்பவம் நிகழ்ந்திருந்தாலும் அது மாநாடு நடைபெற்ற இடத்தில் நிகழவில்லை. எனவே, வேறு எங்கேயோ இடம்பெற்ற சம்பவத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் மீது சுமத்த அரசதரப்பினர் முயல்கிறது.

காலையில் நடைபெற்றது எனத் தெரிவிக்கப்படும் இந்தச் சம்பவம் குறித்து மாலையிலேயே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனை வைத்து நோக்கும்போது இது ஐக்கிய தேசியக் கட்சியின் மீது பழிபோடுவதற்காக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒருசம்பவம். எனவே இது அரசால் அரங்கேற்றப்பட்ட ஒரு நாடகம் - என்றார். (ர)

## ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலுக்கு ஐ.தே.கவே பொறுப்புக் கூறவேண்டும்

### ஊடக அமைச்சர் அனுர யாப்பா தெரிவிப்பு

கொழும்பு, டிச. 8

வெலிசறை நவலோக விளையாட்டரங்கில் சனிக்கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி மாநாட்டில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை தாம் வன்மையாகக் கண்டிக்கிறார் - என்று ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

சுயாதீன தொலைக்காட்சி ஊடகவியலாளர் ஐவரும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபன ஊடகவியலாளர்கள் இவரும் இத் தாக்குதலுக்குள்ளாகினர். அவர்களது படப்பிடிப்புக் கருவி, உபகரணங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

பச்சை நிறத் தொப்பியணிந்த பெரும் எண்ணிக்கையிலானவர்கள் ஊடகவியலாளர்களைச் சுற்றி வளைத்துத் தாக்கிய போது, அந்த மனிதாபிமானமற்ற நடவடிக்கையைத் தடுக்க ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியே பொறுப்புக் கூறவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறான தாக்குதல் சம்பவத்தை மேற்கொள்வதன் மூலம் ஊடக அடக்கு முறையைக் கையாள்கிறது எனவும் அவர் சொன்னார்.

வெறுக்கத்தக்க இத் தாக்குதலை ஊடக சுதந்திரத்தை மதிக்கும் அனைத்து ஊடகவியலாளர்களும், ஊடக அமைப்புகளும், பொது மக்களும் வன்மையாகக் கண்டிப்பார்களெனத் தாம் நம்புகிறார் என்றும், தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர விபத்துகள் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்றும் அவர்கள் விரைவில் குணமடையப் பிரார்த்திக்கிறார் என்றும் அவர் கூறினார்.

### கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ.8

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் இந்த ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை இந்து இளைஞர் மன்றத் தலைவர் சி.பத்மநாதன் கலந்துகொண்டு மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கவுள்ளார். (204-190)

## கண்ணீர் அஞ்சலி

மண்கும்பானைச் சேர்ந்தவரும் வேலணை ப.நோ.கூ. சங்கத்தின் கிளைமுகாமையாளருமான

**பத்மநாதன் வசந்தகுமார் (கண்ணன்)**

2009.12.06 ஞாயிற்றுக்கிழமை காலமானதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!! சாந்தி!! சாந்தி!!

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.
வேலணை ப.நோ.கூ.சங்கம்,
வேலணை.

(92941)

## மரண அறிவித்தல்

**பத்மநாதன் வசந்தகுமார் (கண்ணன்)**

(கிளை முகாமையாளர், வேலணை ப.நோ.கூ.சங்கம்)

மண்கும்பான், வேலணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வசந்தகுமார் 2009.12.06 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சாந்தினியின் அன்புக் கணவரும் கஜநிலன், தர்மிகன், பிரசாளினி, தமிழினி, கஜேந்தினி, ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலம் சென்றவர்களான சடாசிவம் -நாகலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் வசந்தகுமாரி (லண்டன்), ஆனந்தகுமார், சுகுமாரி, சிவகுமார் (லண்டன்), ஆனந்தகுமாரி ஆகியோரின் சகோதரனும் தெய்வேந்திரம், குமாரகுலசிங்கம் (லண்டன்), வினாயகமூர்த்தி (லண்டன்), சுதாகரன் ஆகியோரின் மருமகனும் லீலாவதியின் பெறாமகனும் ஜெயசீலன், காலஞ்சென்ற சத்தியசீலன் மற்றும் சிவாஜினி, அருள்சீலன், அமிழ்தினி, கமலினி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் சிவக்கொழுந்து அவர்களின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (2009.12.08) செவ்வாய்க்கிழமை மண்கும்பான் வேலணையில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வேலணை சாட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்.
மண்கும்பான். (92940)

## அரியாலை வீதியைப் புனரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.8

அரியாலை சாஸ்த்திரியார் வீதி கடந்த 40 வருடங்களுக்கு மேல் புனரமைப்புப் பணிகள் எதுவும் இன்றி குண்டும் குழியுமாக காணப்படுகின்றது.

தற்போது பெய்துவரும் மழையினால் இவ்வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதினால் அப்பகுதியில் தொற்றுநோய் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வீதியை திருத்தியமைக்க உரிய அதிகாரிகளுடன் இப்பகுதி மக்கள் நேரடியாகவும், மகஜர் மூலம் அறிவித்தும் இதுவரை எந்தவித பயனும் கிடைக்கவில்லையென அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (201-23)

**லாசன்ஸ் பெஸ்ட் கொன்ரோல் லிமிட் (ஆரம்பம் 1978)**

அழையுங்கள்

நீங்கள் எதிர்கொள்ளும் சகலவிதமான கறையான்களையும் கட்டுப்படுத்த யாழ்ப்பாணத்தில் உள்ள வீடுகளுக்கும், வர்த்தக நிறுவனங்களுக்கும் எமது சேவைகளை வழங்குகின்றோம்.

Lawsons Pest Control Ltd
Dicanda House
330, Galle Road, Colombo-04.
T.P: 2555828
(சி/562590)

**திருமண சேவை**

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுயதெரிவு முறையே, சுயதெரிவு முறைபற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த-சுயதெரிவுமுறை முன்னோடி-தனிமனித நிறுவுநர்-சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர்மாயெழு வேலமுதனுடன்தொடர்புகொள்க.
2360488, 2360694, 4873929.

**இன்று முதல்...நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு காவேரியின் மாபெரும் மலிவு விற்பனை**

அனைத்துலக புடைவைகளையும் மிக மலிவான விலையில் அள்ளிக்கொள்ள

காவேரி சில்க்ஸ்

48, பெரியகடை, யாழ்ப்பாணம்.

★ ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடை திறந்திருக்கும்.
(இ/562968)

**சுவசெத Suwasetha சுவசெத லொத்தா**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 338
சீட்டிழுப்பு திகதி: 06.12.2009

வெற்றி எழுத்து: Z   வெற்றி இலக்கங்கள்: 03 20 28 30   போனஸ் இலக்கம் 63

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிப் பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து ஒன்றுடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 9,414,564.00 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 3 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 50,000.00 | 03 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000.00 | 112 |
| 4 பரிசு | 2 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 500.00 | 146 |
| 5 பரிசு | 2 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40.00 | 4575 |
| 6 பரிசு | 1 இலக்கத்துடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 40.00 | 2977 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20.00 | 57183 |

இந்த முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 1,780,740.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 9,679,885.50

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சீட்டிழுப்பின் முன்னோடி
தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03, தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல்: 2473360, 2433631 இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைப்பந்தாட்ட மத்தியஸ்தருக்கான செயல்முறைப் பரீட்சை கொழும்பில்

யாழ்ப்பாணம், டிசெ.8

அகில இலங்கை வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்திய வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான எழுத்துப் பரீட்சையில் சித்திபெற்றவர்களுக்கான செயல்முறைப் பரீட்சை எதிர்வரும் 17 ஆம் 18 ஆம் திகதிகளில் கொழும்பு விளையாட்டு அமைச்சு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

'சி' பிரிவினருக்கான செயல்முறைப் பரீட்சை 17 ஆம் திகதி காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும் 'பி' பிரிவினருக்கான செயல்முறைப் பரீட்சை 18 ஆம் திகதி காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணி வரையும் நடைபெறும் என யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் திருமதி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம் அறிவித்துள்ளார். (50-23)

## கிரிக்கெட் வீரர்களுக்கான பயிற்சி முகாம் கைதடியில்

வலி. வடக்கு, டிசெ.8

இளம் கிரிக்கெட் வீரர்களுக்கான பயிற்சி முகாம் கைதடி நவீல்ட் பாடசாலையில் அதிபர் வி.எஸ்.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி முகாமில் கலந்து கொள்ள விரும்புபவர்களை பாடசாலை அதிபரிடம் பதிவுகளை மேற்கொள்ளும்படி பயிற்றுநர் வி.கே .சண்முகலிங்கம் அறிவித்துள்ளார்.

இத்துடன் வீரர்கள் மத்தியஸ்தர்களுக்கான விதிகள் சம்பந்தமான பயிற்சி வகுப்பும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி காலை 9 மணிக்கு பயிற்சி வகுப்புகள் நவீல்ட் பாடசலையில் ஆரம்பமாகும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (50-86)

# மத்தியஸ்தர் பரீட்சையில சித்தியடைந்தோர் விவரம்

யாழ்ப்பாணம், டிசெ.8

அகில இலங்கை வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்திய வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் எழுத்துப் பரீட்சையில் 'பி', 'சி', பிரிவுகளில் சித்தியடைந்தோரின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

'பி' பிரிவு

பரராசசேகரம் பார்த்தீபன், கனகரட்ணம் சசிக்குமார், மரியதாஸ் மதிவதனன், என்.கஜிந்திரன், தர்மலிங்கம் தவச்செல்வம், தீபா சிவயோகம், துஷியா திருச்செல்வம், இரவித்திரன் சிறிரமணன், ஆனந்த கிருஸ்ணன் கமலகுமரன்.

'சி' பிரிவு

இராமநாதன் கண்ணா, ரி.திவாகர், ரி.ரமணி, விக்கினேஸ்வரன் பாலசேந்தன், சுந்தரமூர்த்தி சிவநாதன், சிவசம்பு சிவசொரூபன், செல்வநாயகம் சாள்ஸ் இன்பதாஸ், பாலகிருஸ்ணன் தணிகவேல், பாலலேந்திரன் சசிகரன், தங்கவேலு புஸ்பரட்ணம், கோபிகா பரமநாதன், விநோஜா எழில்மோகன், கருணகலாதேவி குணரட்ணம், சபாநாதன் ஜசிதரன், காசிநாதன் சுதாகரன், சிவசுப்பிரமணியம் பானுராஜா, ஆனந்தராசா பவானந்தன், பாலகிருஷ்ணன் முகுந்தன், நாகராசா இரவீந்திரன், எவ்.கலா பன், நிலானி குணராசா.

(50-23)



யாழ்.மாவட்டத்துக்கான பெண்கள் கிரிக்கெட் அணியைத் தெரிவு செய்வதற்கான பயிற்சிமுகாம் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்று வருகின்றது.

பயிற்சி முகாமில் கலந்துகொண்ட கிரிக்கெட் வீராங்கனைகளுடன் பயிற்றுநர் வி.கே.சண்முகலிங்கம், யாழ்ப்பாண கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் எஸ்.மதிவண்ணன் மற்றும் ஆசிரியர்களான எஸ்.கோபி, துஷ்யந்தன் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம். *(படம்: நேசன்)*

## ஊரெழு றோயல் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.8

யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களில் 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதியது. போட்டி ஆரம்பமானது முதல் முடியும்வரை இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாதமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வி தீர்மானிப்பதற்கு சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை வென்றது.

(50-23)

# யாழ்.மாவட்ட தாச்சிச் சுற்றுப் போட்டியின் காலிறுதி ஆட்டங்களில் வென்ற அணிகள்

வலி. வடக்கு, டிசெ.8

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் வர்த்தக வங்கி, இலங்கை வங்கி என்பவற்றின் ஆதரவுடன் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் காலிறுதி ஆட்டத்தின் முடிவுகள் வருமாறு:-

**சாந்தை வெற்றி**

மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகத்துக்கும் பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் சாந்தை விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

முதல்பாதி ஆட்டத்தில் சாந்தை விளையாட்டுக்கழகம் 04 பழங்களையும் கண்ணகி விளையாட்டுக் கழகம் 02 பழங்களையும் பெற்றன.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு பழத்தைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது. ஆட்டநிறைவில் சாந்தை விளையாட்டுக் கழகம் 05:03 பழங்கள் என்ற அடிப்படையில் கண்ணகி விளையாட்டுக் கழகத்தை வென்றது.

**ஐங்கரன் வி.க வெற்றி**

மற்றுமொரு ஆட்டத்தில் இறுதி நிமிடத்தில் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் பெற்ற பழத்தின் மூலம் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

சுதுமலை யுவசக்தி விளையாட்டுக் கழகத்துக்கும் சுதுமலை ஐங்கரன் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது.

முதற்பாதி ஆட்டத்தில் யுவசக்தி விளையாட்டுக் கழகம் 04 பழங்களையும் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் 03 பழங்களையும் பெற்றுக் கொண்டன.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் கடைசி பத்து நிமிடம் இருக்கும்போது இரு அணிகளும் 06 பழங்கள் என்ற சமநிலையில் காணப்பட்டன.

இரு அணிகளினாலும் பழம்பெறும் முயற்சியில் மாறிமாறி இறங்கிய போதிலும் இரு அணிகளும் ஆட்டமிழந்து வெளியேறியன.

இறுதி ஒரு நிமிடத்தில் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் ஒரு பழத்தைப் பெற்றுக் கொள்ள ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் 07:06 பழங்கள் என்ற அடிப்படையில் யுவசக்தி விளையாட்டுக் கழகத்தை வென்றது.

(50-86)

# பெண்கள் கிரிக்கெட் அணியின் பயிற்சி முகாம் ஆரம்பமானது

வலி. வடக்கு, டிசெ.8

யாழ்.மாவட்ட பெண்கள் கிரிக்கெட் அணியை உருவாக்குவதற்கான பயிற்சி முகாம் இலங்கை கிரிக்கெட் அமைப்பின் யாழ்.மாவட்டப் பயிற்றுவிப்பாளர் வி.கே. சண்முகலிங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வேம்புடி மகளிர் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் ஆரம்பமான இப் பயிற்சி முகாமில் துடுப்பாட்ட உபகரணங்களை யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் எஸ்.மதி கண்ணன் வழங்கி பயிற்சி முகாமை ஆரம்பித்து வைத்தார்.

முதல் நாள் பயிற்சி முகாமில் 45 வீராங்கனைகள் கலந்துகொண்டார்கள்.

இவர்களுக்கான பயிற்சிகளை வி.கே. சண் முக லிங்கத்துடன் இணைந்து யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி கிரிக்கெட் பயிற்றுநர்களான கோபி, துஷ்யந்தன் ஆகியோரும் வழங்கினார்கள். (50-86)

## சிறந்த கிரிக்கெட் வீரர்களாக

# வடக்கிலிருந்து அஜித் டார்வின் கிழக்கிலிருந்து அசாத்தீன்

வலி. வடக்கு, டிசெ.8

அகில இலங்கை ரீதியில் மாகாணப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப்பிரிவுனருக்கான 'பிறிமா' வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியில் வடக்கு -கிழக்கு மாகாணங்களின் அணிகளிலிருந்து இரண்டு வீரர்கள் பரிசுகளைத் தமதாக்கிக் கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த அசாத்தீன் சிறந்த வீரராகவும் வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அஜித்டார்வின் சிறந்த பந்து வீச்சாளராகவும் வடமேல்மாகாணத்தின் குருநாகலைச் சேர்ந்த தர்மசேனா சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தேசிய மட்டத்தில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியில் வடக்கு- கிழக்கைச் சேர்ந்த இருவர் ஒரே நேரத்தில் பரிசில்களை வென்றமை இதுவே முதற்றடவை எனத் தெரிவிக்கப்பட்டது. (50-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்



யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் ஏற்பாட்டில் கனிஷ்ட பிரிவினருக்கான மெய்வன்மைப் பயிற்சி முகாம் யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருப்பதை முதல் இரு ப[illegible] பயிற்சியில் கலந்துகொண்ட ஆசிரியர் ஒருவருக்கு உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா சான்றிதழ் வழங்குவதை மூன்றாவது படத்திலும், [illegible] கலந்துகொண்ட ஜேர்மனி நாட்டுப் பயிற்றுவிப்பாளர் பி.வங்கமனுக்கு யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் நினைவுப் பரிசு வழங்குவதை இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்: தமிழினியன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவான கற்புடன் வாழ்ந்த கன்னி மரியாள்; அவரது வாழ்வு எமக்கும் ஓர் எடுத்துக்காட்டு

கத்தோலிக்க திருச்சபை இன்று அமல உற்பவ அன்னையின் திருவிழாவைக் கொண்டாடுகின்றது. அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது.

இறைவனின் மீட்புத் திட்டத்தில் ஒரு பெரும் பங்காற்றவே புனித மரியன்னை இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டார். பரிசுத்தராகிய இயேசுவைத் தாங்கும் பரிசுத்த பேழையாக இருக்கும் பொருட்டே மரியா அமல உற்பவநாயகி ஆக்கப்பட்டார்.

கபிரியேல் என்னும் வானதூதர் தேவதாயாருக்குத் தோன்றி ''அருள் மிகப் பெற்றவரே வாழ்க. ஆண்டவர் உம்மோடு இருக்கின்றார்'' என்று மங்கள வார்த்தை கூறி, அவர் கருவுற்று ஒரு மகனைப் பெறுவார் என்று கூறியபோது 'இது எப்படி நிகழும் நான் கன்னியாயிற்றே' என்று தேவமாதா கூறிய வார்த்தையில் அவர் கன்னிமையின் முழுமை அடங்கியுள்ளது.

புனித யோசேப்புக்கு திருமண ஒப்பந்தமாகு முன்பே மாதா தன் கன்னிமையைக் காப்பதாக வாக்குத் தத்தம் எடுத்திருந்தார். ஆனால் சூழ் நிலைகளினால் திருமண ஒப்பந்தம் செய்ய வேண்டி வந்த போது கன்னிமை காக்கும் தன் வாக்குத்தத்தம் பாழாகி விடுமோ என்று அஞ்சினார். ஆனால் இறைவன் கிருபையினால் அவர் கன்னிமை காக்கப்பட்டது. இதில் புனித யோசேப்புக்கும் மிகுந்த பங்குண்டு. இதுவும் தேவகிருபையே. தேவதாயார் தான் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமானதைத் தன் கணவனான புனித யோசேப்பிடம் கூறவில்லை இறைவனிடமே அதை விட்டு விட்டார். மரியாவின் கர்ப்ப நிலையை அறிந்த யோசேப்பு அவரை அவமானப்படுத்த விரும்பாமல் மறை முகமாக விலக்கி விடத் தீர்மானித்தார். ஆனால் பரிசுத்த ஆவியினால் உண்மையை அறிந்த யோசேப்பு தன் மனைவியை முன்னரை விட மிக அதிகமாக நேசித்தார். இறைமகனைத் தாங்கும் அந்தப் புண்ணியவதியை நெருங்க எந்த நீதிமானுக்குத் தான் மனம் வரும்? மரியாவின் கற்புக்கு காவ லனாக இருந்தது டன் தன் கற்பையும் காப்பாற்றி வந்தார். இறைவனால் ஆகாதது ஒன்றுமில்லை.



இதனாலேயே எமது திருச்சபை துறவற வாழ்வுக்குத் தம்மை அர்ப்பணிப்போரை திருமணம் செய்யாமலிருக்க ஊக்குவிக்கின்றது.

''சிலர் பிறவியிலேயே மண உறவு கொள்ள முடியாதவராய் இருக்கின்றனர். வேறு சிலர் அந்நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர். மற்றும் சிலர் விண்ணரசின் பொருட்டு அந்நிலைக்குத் தம்மையே ஆளாக்கிக் கொள்கின்றனர். அருள் பெற்றவரன்றி வேறு எவரும் இக் கூற்றை ஏற்றுக் கொள்ள முடியாது'' -மத் 19[11] மேற்கூறிய வார்த்தைகள் மூலம் கற்பின் உன்னத தன்மையை இயேசு நமக்கு உணர்த்தியிருக் கின்றார். நிறை கற்புடன் வாழ்ந்த தேவதாயும், அவர் கணவனான யோசேப்பும் நமக்கு நல்ல முன் உதாரணங்கள். எமது பலத்தினாலும் அல்ல எமது பராக்கிரமத்தினாலுமல்ல ஆண்டவரின் ஆவியினால் சகலமும் கூடும் என்பதனை விசுவசிப்போம். தேவ அழைப்பைப் பெற்றுக் கொண்ட எமது துறவியர், அந்த வாழ்க்கையை முழுமையாக வாழ வைப்பதில் பொது நிலையினரான எமக்கும் மிகுந்த பங்குண்டு. அவர்களுக்காக தவறாது செபிப்போம். இறைவனின் மீட்புத் திட்டத்தில் பங்கு கொள்வோம். கிறிஸ்துவே உமக்குப் புகழ்.

**சேவியர் ஜோசவ்**

## சரத் வெளியிட்ட கருத்து திரிபுபடுத்தப்பட்டுள்ளது மனோ எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிச.8

ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாகக் கடமையாற்றிய காலத்தில் சிறுபான்மை மக்கள் தொடர்பில் வெளி யிட்ட கருத்து திரிபுபடுத்தப்பட்டு வெளியி டப்பட்டன என ஜனநாயக மக்கள் முன்னணி யின் தலைவர் மனோ கணேசன் தெரிவித் துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு -

கடந்த கால நிகழ்வுகளை மறந்து ஜென ரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு வழங் கத் தீர்மானித்துள்ளோம்.

சிறுபான்மை மக்கள் தொடர்பிலான சரத் பொன்சேகாவின் நிலைப்பாடு தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

ஒரு கூற்றை அடிப்படையாகக் கொண்டு பிரச்சினையைப் பெரிதுபடுத்தும் எண்ண மில்லை. எதிர்கால சவால்களை வென்றெ டுப்பதே மிகவும் முக்கியமானது - என்றார்.

## மலர்ச்சாலை வாகனத்திலிருந்து ரவைகள் மீட்பு

புஞ்சி பொறல்ல மலர்ச்சாலையொன்றின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த பழைய வாகன மொன்றில் இருந்து 50 ரக ரவைகளும் எட்டு, ரி.ஐம்பத்தாறு ரக ரவைகளும் மீட்கப்பட்டுள் ளன எனப் பொறல்ல பொலிஸார் தெரிவித் தனர்.

மலர்ச்சாலைக்குச் சொந்தமான இந்த வாக னத்துக்குள் சந்தேகத்துக்கிடமான பார்சல் ஒன்று இருக்கிறது எனப் பொலிஸ் அவசரப் பிரிவுக்கு (119) கிடைத்த தொலை பேசி அழைப்பையடுத்து குறிப்பிட்ட வாகனத்திலி ருந்து இந்த ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த ரவைகள் அனைத்தும் தனித்தனியா கப் பொலிதீன் உறைகளில் சுற்றப்பட்டிருந் தன அவற்றில் பெரும் பாலானவை கறள் பிடித் திருந்தன எனப் பொறல்ல பொலிஸார் தெரி வித்தனர்.

இந்த ரவைகள் எவ்வாறு இந்தவாகனத் துக்குள் வந்து சேர்ந்தன என்பதை அறிந்து கொள்ள மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன எனப்பொலிஸார் மேலும் தெரி வித்தனர். (சி)

## காணவில்லை



நிகரை வைரவர் கோயிலடி, சங்கானையை வசிப்பிடமாகக் கொண்ட

**இராசையா இரத்தினவெள்ளி**

என்பவரை கடந்த 03.12.2009 முதல் காணவில்லை. இவரைக் கண்டவர்கள் கீழ்க் காணும் முகவரியிலோ அல்லது தொலை பேசியிலோ தொடர்பு கொள்ளவும்.

நிகரை வைரவர் கோயிலடி,
குபேரன் கட்டடத் தொகுதி, சங்கானை.
021 7210903, 077 5905985

(92929)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர் சி.மனோகரன் அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் வேலன் சின்னையா**

அவர்கள் 04.12.2009 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தியமையையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல எம் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/உசன் இராமநாத மகா வித்தியாலய பாடசாலைச் சமூகம்

(92931)

# மரண அறிவித்தல்



## வைத்திய கலாநிதி செல்லச்சாமி சிவசம்பு

(D.A.M. (Cey) B.S.H. - L.M.M. (India)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் தொண்டைமானாறு, உடுப்பிட் டியை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.S.சிவசம்பு கடந்த (03.12.2009) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லச்சாமி - செல்லமுத்து தம்பதியரின் ஏக புதல்வனும் காலஞ்சென்ற ரங்கநாயகி மற்றும் இராஜேஸ்வரி ஆகி யோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னக்கண்டு - சீனியம்மா, காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - ஜானகியம்மா ஆகியோரின் பாசமிகு மருமகனும் செல்வநாதன் (துரை - குவைத்), செந்தில்நாதன் (மோகன் - ஜேர்மனி), கல்பனா (தேவராணி - டென்மார்க்), ரங்கநாதன் (சந்து - ஜேர்மனி), கேதாரநாதன் (உடுப்பிட்டி) ஆகியோ ரின் பாசமுள்ள தந்தையும் S.சுகானா, உதயசிறி, R.சித்திரா, K.சித்திராங் கனி ஆகியோரின் பிரியமுள்ள மாமனும் S.திருக்குமரன், R.கௌசிகன், R.உமையாள், S.அங்கஜன், S.ஆதிஸஜன், R.கோபிநாதன், R.ரகுநாதன், K.துளசிநாதன், K.சரோமியா ஆகியோரின் பாசமுள்ள பேரனும் S.திருநிறைச் செல்வி (அம்மன் -நோர்வே), R.திருஅருட்செல்வி, யமுனா (நோர்வே) ஆகியோரின் பாசமுள்ளவருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் (உடுப்பிட்டி) நாளை (09.12.2009) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக தொண்டைமானாறு காட்டுப்புலம் இந்துமயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சேச்லேன்,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

(92928)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறு பேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனை புரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களது கருத்துக்களையும் உதயன் தொடர்ச் சியாக வெளிப்படுத்த உள்ளான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுர மாகின்றது.



## தனுஷா சிவசுப்பிரமணியம்

யாழ்.இந்து மகளிர் கல்லூரி
கலைப் பிரிவு-3ஏ,
மாவட்ட நிலை-19

நான் எனது ஆரம்பக் கல்வியை கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலையிலும் தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் கற்றுவந்தேன்.

நான் காலை, மாலை என்று பாராது காலையிலும், இரவிலும் கல்வி கற்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தேன்.

கடந்த வருடம் எனது உயர்தரப் பரீட்சைக்காக கடுமையான பயிற்சி செய்து கொண்டிருந்தவேளை எனது தந்தையார் இறந்துவிட்டார். அக்கவலை என்மனதை வருத்தினாலும் என் தந்தையின் விருப்பத்திற்காகவும், அவரின் ஆத்ம சாந்திக்காகவும், கல்வி கற்று உயர் பெறுபேற்றினை அடைய வேண்டும் என நினைத்தேன்.

அதற்காக இறுதிவரை முழுமூச்சுடன் கல்வி கற்றேன். நான் ஒரு சட்டத்தரணியாக வரவேண்டும் என்ற எனது தந்தையின் ஆசையை எதிர்காலத்தில் நிறைவேற்றுவேன்.

எனது தந்தை இறந்த பின்னர் எனது கல்விக்கு மிகவும் ஊக்கம் தந்து நான் இந்த நிலைக்கு வரக் காரணமாக இருந்த என் அம்மாவிற்கும், சகோதரர்களுக்கும் நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

நான் தற்போது உயர்தரம் கற்கும் மாணவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புவது என்னவெனில் குறிப்பிட்ட பாடத்தை குறிப்பிட்ட ஓர் ஆசிரியரிடம் கற்றுக் கொள்ளுங்கள். அவ்வாறு கற்கும்போது முழுமையாகக் கற்றுக் கொள்ளுங்கள்.

அவ்வாறு கற்றதனால்தான் என்னால் இப்பெறுபேற்றைப் பெற முடிந்தது.

எனது ஆரம்பக் கல்வி முதல் இன்றுவரை எனக்குக் கல்வி புகட்டிய ஆசிரியர்களுக் கும் அதிபர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

இறுதிவரை எனது 'கல்விக்கு உறுதுணையாக இருந்த பல்வேறு உதவிகள் புரிந்த நண்பர்களுக்கும் நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

செவ்வி : விக்டோரி, சுகந்தன், அனுஷ்மன்



## குலேந்திரன் பகீரதன்

வட்டு மத்திய கல்லூரி
கலைப்பிரிவு-3ஏ
மாவட்டநிலை - 16

இலட்சியத்தோடு கூடிய முயற்சி என்றுமே தோற்பதில்லை என்பதை உயர்தரப்பரீட்சை முடிவு வெளிவரும்போது உணர்ந் தேன். தரம் 1 இலிருந்து A/L வரை வட்டு மத்திய கல்லூரியில் கல்வி கற்றேன்.

நான் கலைப்பிரிவில் 3ஏ சித்தியை அடைவதற்கு எனது பாடசாலை ஆலயமாக இருக்க அதில் தெய்வங்களாக ஆசிரியர்கள் இருந்து என்னை வழி நடத்தினர். அவர்கள் புகழைச் சொல்வதற்கு உலகில் வார்த்தையே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

வேறு புத்தகப் படிப்போடு நின்று விடாது பாடசாலையிலும் சமூகத்திலும் பாடவிதானத் துக்கு வெளிவாரியான செயற்பாடுகளிலும் ஈடுபட்டமையால் பொது அறிவினையும் அனுபவங் களையும் பெற்றுக்கொண்டேன்.

இது இந்தப் பெறுபேற்றை அடைவதற்குப் பெரும்பங்காற்றியது. பாடக்குறிப்புக் களோடு மட்டும் நின்று விடாது பரீட்சை வினாத்தாள்கள், பயிற்சிப் புத்தகங்கள் அத்தோடு படிக்கும் பாடங்களைத் திட்டமிட்டு அன்றன்று படித்துக் கொண்டதால் பரீட்சையினை இலகுவாக எழுதமுடிந்தது.

இவ் உயர்ந்த பெறுபேற்றை அடைவதற்கு தூண்டு கோலாக இருந்த அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், வட்டு. இந்து வாலிபர் சங்கத்தினர், குடும்பத்தினர், நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். எதிர்கால மாணவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது இலட்சியத்தோடு படிக்கும் எந்தவொரு மாணவனுக்கும் தடைகள் தாண்டிய வெற்றியே முடிவாகும்.



## சுவர்ணா பத்மநாதன்

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
விஞ்ஞானப் பிரிவு - ஏ2பி
மாவட்ட நிலை - 33

நான் மருத்துவ பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பதில் நிறைய சந்தோசமடைகின்றேன். எனது பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் வழிகாட்டலும் கடவுளின் ஆசியும்தான் நல்ல பெறுபேற்றைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு உறு துணையாக இருந்தது.

நான் எனது பாடசாலையில் வகுப்பில் தரப்படும் குறிப்புக்க ளையும், தனியார் வகுப்பில் தரப்படும் குறிப்புக்களையும் தான் படிப்பேன். அப்போது எனக்கு தெளிவில்லாத விடயங்களை, சந்தேகங்களை உடனுக்குடன் ஆசிரியர்களிடம் கேட்டுத் தெளிவடைந்து கொள்வேன்.

இனிவரும் காலங்களில் பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்களும் சரி எவ்வகையான மாணவர்கள் என்றாலும் ''ரியூசன்''என்று அலைந்து திரியாமல் உங்களது ஆசிரியர்க ளிடமே உங்களது சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவாக்கிக் கொண்டு படிக்கும் காலத் தில் படியுங்கள்.

எனக்கு இரசாயனவியல் பாடத்தில் கூடுதலான ஆர்வமும் அக்கறையும் இருந்தது. அதனால்தான் இரசாயனவியல் பாடத்தை அதிகமாகப் படித்தேன். மற்றைய இருபாடங் களுக்கும் கொடுத்த முக்கியத்துவம் குறைவுதான்.

கல்விப் பொதுச் சாதாரண தர வகுப்பில் விஞ்ஞான பாடத்தில் இரசாயனவியல் பகுதிகளில் எனக்கு போதிய விளக்கம் இன்மையாலும் உயர்தர வகுப்பு இரசாயனவியல் பாடத்திட்டம் கடினத் தன்மையானது எனப் பலரும் எனக்கு ஆலோசனை கூறியமையால் எனக்குப் பயம் வந்தது. அதனால்இரசாயனவியல் பாடத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தேன்.

தெளிவாகச் சந்தேகம் இல்லாமல் படித்தேன். இதற்காக எனக்குக் குறித்த பாட ஆசிரியர்களும் மிக உதவியாக இருந்தார்கள். படித்து முடித்த பின் எனக்குக் கஷ்டமாகத் தெரியவில்லை. மூன்று பாடங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்துப் படியுங்கள் நிச்சயம் உங்களால் என்னைவிடச் மிகச்சிறந்த பெறுபேற்றைப் பெறமுடியும். நம்பிக்கையோடு துணிவாகப் படியுங்கள், தோல்வியே கிடையாது, நிச்சயமாக வெற்றிபெற முடியும் என்று கூறியதுடன் தான் எதிர்காலத்தில் ஒரு பல் வைத்தியராக வர வேண்டும் என்பதே தனது இலக்காகும் என்றார்.



## தேவகி சுந்தரலிங்கம்

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
வர்த்தகப் பிரிவு- 3ஏ
மாவட்டநிலை - 05

நான் உயர்தரப் பரீட்சையில் 3ஏ பெறுபேற்றைப் பெற்றமை எனது வாழ்க்கையில் இதுவரை பெற்ற சந்தோஷங்களில் மகிழ்ச் சியானதாகும். இவ் உயர்ந்த பெறுபேற்று நிலையை எட்டுவதற்கு எனக்கு சிரத்தையுடன் கற்பித்தலில் ஈடுபட்ட கல்லூரி, தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் பொருளியல் பாடத்தில் எனக்கு இருந்த சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவடைய உதவிய எனது சகோதரிக்கும் எனது நன்றிகள்.

நான் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகளையும், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 10ஏ என்ற உயர்ந்த பெறுபேற்றினையும் சண்டிலிப்பாய இந்துக் கல்லூரியில் கற்றுப் பெற்றுக்கொண்டேன். இவ்வாறு 10ஏ என்ற உயர் பெறுபேற்றை பெற்றதால் பலரின் விருப்பின்பேரில் விஞ்ஞானப் பிரிவைத் தெரிவு செய்து யா/வேம்படி மகளிர் கல்லூரியில் சேர்ந்தேன். அங்கு முதல் இரண்டு தவணைகள் கற்றேன். எனினும் விஞ்ஞானப் பிரிவுப் பாடங்கள் எனக்குக் கடினமானதாக இருந்தது. அதனால் திரும்பவும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் இணைந்து வர்த்தகத் துறைப்பாடத்தை விருப்புடன் கற்றேன். இதற்கு எனது பெற்றோரும் ஒத்தாசையாக இருந்து ஊக்கம் கொடுத்தனர். இந்த உயர் பெறுபேறினைப் பெறுவதற்கு வழிகாட்டிய எனது பெற்றோருக்கும் நன்றிகள் கூற ஆசைப்படுகின்றேன். இச் சந்தர்ப்பத்தில் எமது இளைய மாணவர் சமூகத்துக்கும் மாணவர் களது பெற்றோருக்கும் எனது கருத்தினை பகிர்ந்து கொள்கிறேன். நான் தரம் 8 இலிருந்து A/L வரை பாடசாலை வலைப்பந்தாட்ட அணியில் விளையாடி இரு தடவைகள் மாகாண சம்பியன்களாகத் தெரிவாகி தேசியமட்ட போட்டிகளிலும் பங்குபற்றியுள்ளேன்.

இதனை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால் சில மாணவர்களும் பெற்றோர்களும் கல் வியில் சிறந்த பெறுபேற்றினைப் பெறவேண்டுமானால் விளையாட்டு மற்றும் ஏனைய துறைகளை விலக்கி வைக்கின்றார்கள். என்னைப் பொறுத்தவரை இது ஒரு தவறான கருத்து. இவ்வாறான தவறான கருத்துக்களைத் தவிர்த்து மாணவர்கள் கல்வியிலும் சிறந்து விளங்கவேண்டும் எனக் கூற ஆசைப்படுகின்றேன் - என்றார்.

# ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சை; மேலும் சில முடிவுகள்

யாழ்ப்பாணம்.டிசெ.8

கடந்த 26 ஆம் திகதி வெளியிடப் பட்ட 2009 ஆம் ஆண்டுக்குரிய ஜி. சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் மேலும் சில முடிவுகளை பாடசாலை அதிபர்கள் 'உதயனுக்கு' அனுப்பி வைத் துள்ளனர். அவற்றின் விவரம் வருமாறு:

**கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்**

ச.சஞ்சயன்-ஏபிசி, யோ.வினித்தா- 3பி, சோ.மயூரி-ஏ2சி, வி.பிரசாத்-ஏ2சி, சி.கரிகாசினி-2பிசி.

**கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்**

வ.சசிரேகா-ஏ2சி, வி.அஜந்தா-2பிசி, ப.கிருபாதயன்-பி2சி, இ.கிரிசாந்-பி2சி, பா.சுகிதா-பி2சி, வ.அதிசயராஜன்-3சி.

**பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை**

**கணிதப் பிரிவு**

கே.வினோபா-ஏபிசி, எஸ்.பிருந்தா-3சி, வி.சுமதி-சி2எஸ், எம்.மயூரி-சி2எஸ், பி.துசிதா- சி2எஸ், எஸ்.றஜிதா-சி2எஸ்.

**விஞ்ஞானப் பிரிவு**

எஸ்.அபிராமி-ஏ2பி, ரி.பவித்திரா-ஏ2பி, வி.சிவதர்சினி-ஏ2பி, எஸ்.நீலாம்பரி- ஏபிசி, எம்.லாவண்யா- 2பிசி, கே.தர்சினி-2பிசி, எஸ்.கார்த்தியா- 2பிசி, ரி.அபிரா-பி2சி, வி.கிருஷ்ணானந்தி-பி2சி, ஆர்.பவித்திரா- பிசிஎஸ், ஆர்.ஜெயசுதா-3சி.

**வர்த்தகப் பிரிவு**

எஸ்.நிலானி-2ஏபி, என்.ராயினி-ஏ2பி, எஸ்.நளினி-2பிசி, ஜி.கவிதா-2பிஎஸ்.

**கலைப் பிரிவு**

பி.விஜிதா-3ஏ, வி.நிரோஜா-3ஏ, ஜே.நித்தியா-2ஏபி, ஜே.நிரோஜா-2ஏபி, கே.மயூரி-2ஏபி, ஆர்.தர்மளா-2ஏபி, எஸ்.தனுசியா-2ஏபி, எம்.வித்தியா-2ஏபி, ரி.ஜனனி- 2ஏபி, ஏ.சிந்துஜா-2ஏசி, கே.லோசனா- 2ஏசி, ஜே.அனுசியா-2ஏசி, ஜி.துவாரகா- 2ஏசி, ரி.மேரி பிருந்தா-2ஏசி, ஆர்.நித்தியா- ஏ2பி.

**தேவரையாளி இந்துக் கல்லூரி**

யோ.நிரோஜா-2ஏபி, ந.சகிந்தன்-ஏ2பி, ப.தமிழினி-ஏ2பி, தி.சபேசன்-ஏ2பி, து.ராம் ஜித்-ஏ2பி, சி. இந்துசன்-2பிசி, த.பிரதீபன்- 2பிசி, மு.செந்தூரன்-2பிசி, இ.சுமணா- 2பிசி, நா.[illegible]-2ஏசி, வி.லக்சுமி- பி2சி, கி.கோபி-பி2சி, இ.சுலேந்தினி-3சி.

**வரணி மகா வித்தியாலயம்**

மு.கசேந்தினி-3ஏ, க.கஷந்தினி- 3ஏ, இ.யசோதா- 3ஏ, ஸ்ரீ.யசோதா 2ஏபி, வை.தியா கரன்- 2ஏபி, செ.துஷ்யந்தினி-2ஏபி, யோ.தர் சினி- 2ஏபி, ச.சியாமளன்-ஏபிசி, த.தர்சிஸ்- ஏபிசி, சி.தமிழினி-ஏபிசி, கோ.புஸ்பராணி- ஏபிசி, சி.ஜெயதர்சினி-ஏபிசி, சி.மேனகா- ஏபிசி, சு.சரணியா-3பி, த.ஜென்சிகா-3பி, வி.வினோதினி-3பி.

**ஏழாலை மகா வித்தியாலயம்**

சி.மகித்தா-3ஏ, கு.சயந்தன்,-2ஏபி சி.செந்தூரன்-2ஏபி, பி.பிரசிகா-ஏ2பி, கு.நிலானி-ஏ2பி, ச.விதுஷா-ஏபிசி, த.கஸ்தூரி-2பிசி, ச.சர்மிளா-2பிசி, சு.நிறோஜன்-2பிசி, ம.சுபத்திரா-2பிசி, கோ.தசோதரன்-பி2சி, ப.மீரா-பிசிஎஸ், இ.அனுஷா-பிசிஎஸ், பு.பிருந்தா-2சிஎஸ்.

**அத்தியார் இந்துக் கல்லூரி நீர்வேலி**

**கலைப்பிரிவு**

த.தர்சன்-3ஏ, ர.அயிந்தா-2ஏசி, க.கபிலன்-ஏ2பி, [illegible]சிகாந்-3பி, ச.தாரணி-3பி, [illegible]-ஏ2பி, தி.மயூரகிரி-2பிசி, கி.ஜெசிந்தா-ஏ2சி,பா.ஜெசிந்தா-ஏ2சி.

**தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்**

**கலைப்பிரிவு**

க.ஜெயராதை-ஏ2பி, ம.அஜந்தினி-ஏ2பி, கு.நதியா-ஏ2பி, அ.அகிலா-ஏபிசி, ஆ.அகிதா- ஏபிசி, க.கல்யாணி-ஏ2சி, உ.ஆஷா-2பிசி.

**சுண்டுக்குழி மகளிர் கல்லூரி**

**விஞ்ஞானப் பிரிவு**

ஆர்.விஷ்ணுப்பிரியா-2பிசி, எஸ்.கஜி-பி2சி, எஸ்.பைரவி-பி2சி, ஜி.தாரணி-பி2சி.

**கணிதப் பிரிவு**

ரி.கீதாஞ்சலி-2ஏபி, என்.கிருத்திகா-2ஏபி, பி.கிருசாந்தினி-ஏ2சி, ஆர்.கைலாஜினி- 2பிசி.

**வர்த்தகப் பிரிவு**

கே.சக்திநாயகி-3ஏ, ஜி.அனுசிகா-3ஏ, ஜி.ஹைசிந்-2ஏபி, எஸ்.மகிழினி-ஏ2பி.

**கலைப்பிரிவு**

ஜி.சாரா-3ஏ, ஏ.தேனகா-2ஏபி, ஈ.சுபர்ணா-2ஏபி, பி.கவிதா-2ஏபி, எஸ்.சிந்துப்பிரியா-2ஏபி, எஸ்.பிரிந்திகா- 2ஏபி, ஆர்.நிலாயினி-2ஏபி, பி.தாட்சாயினி-ஏ2பி, ரி.பரீடா-ஏ2பி, எஸ்.மரிலின்-ஏ2பி, ஜே.டனுசியா-2ஏசி, ஈ.சுந்தரவடிவு-2ஏசி, ரி.டினோஜா-2ஏசி, எஸ்.கிரிசாந்தனா-2ஏசி, ஜே.சுனேகா-2ஏசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இறுதி மாதிரி வினாத்தாள்கள்

## தொகுதி II

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## வணிகக்கல்வியும் கணக்கீடும் - I 60 -T-I

01. வாழ்வதற்கு இன்றியமையாத அடிப்படைத்தேவைகளை பூர்த்தி செய்துள்ள ஒரு மனிதன் தனது இரண்டாந்தரத தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு யாது செய்தல் வேண்டும்,
1) முன்னுரிமைப்படி தேவைகளை வரிசைப்படுத்தல்.
2) தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
3) நகர்ப்புற வாழ்க்கைக்கு இடம்மாறுதல்.
4) அபிவிருத்தியடைந்த ஒரு வெளிநாட்டில் வசித்தல்.

02. இலங்கையில் வணிக நடத்தையை பொருளாதாரச் சூழல் பாதிக்கின்றது. பின்வருவனவற்றுள் எது பொருளாதார சூழலுக்கு பொருத்தமற்ற செயற்பாடாகும்.
1) பொருட்களின் விலை படிப்படியாக உயாவடைதல்.
2) பொருளாதார மந்தம் காரணமாக நிறுவனங்கள் ஆட்குறைப்பு செய்தல்.
3) ஜனாதிபதித் தோதலும், பாராளுமன்றத் தேர்தலும்.
4) அரசாங்க ஊழியர்களின் சம்பளங்களை உயர்ததுதல்.

03. சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் பின்வருவனவற்றுள் எப்பிரிவைச் சேர்ந்ததாகும்,
1) முதனிலைக் கைத்தொழில். 2) இரண்டாம் நிலைக் கைத்தொழில்.
3) மூன்றாம் நிலைக் கைத்தொழில். 4) அரச கைத்தொழில்.

04. பணத்தின் தற்கால பரிணாமத்தைக் குறிக்கும் தொகுதி,
1) சட்டப்பணம் - உலோகப்பணம் - வங்கிப்பணம் - மின்பணம்.
2) மின்பணம் - சட்டப்பணம் காசோலை - கடனட்டை.
3) உலோகப்பணம் - சட்டப்பணம் - காசோலை - கடனட்டை.
4) கடனட்டை - தாள், சில்லறை நாணயங்கள் - மின்பணம் - கடனட்டை.

05. இலங்கையிலுள்ள வணிகங்களை அரசதுறை, தனியார்துறை என வகைப்படுத்த முடியும். பின்வருவனவற்றுள் எது அவ்வாறு வகைப்படுத்துவதற்கு காரணமாய் அமைகிறது,
1) நோக்கம். 2) பருமன்.
3) உடைமை. 4) பொருட்களும், சேவைகளும்.

06. வணிகத்திட்டம் தொடர்பான பொருந்தாத கூற்று,
1) அது எதிர்காலம் தொடர்பானது. 2) அது கடந்தகாலம் தொடர்பானது.
3) எழுத்து வடிவில் காணப்படும்.
4) இது ஒரு திட்டமிடல் செயன்முறையாகும்.

07. ''டயலொக் கம்பனியின் எதிர்காலம் இன்றே'' என்ற வாசகம்,
1) ஒரு தூரநோக்காகும். 2) ஓர் இலட்சிய நோக்காகும்.
3) நிறுவன எதிர்காலத்தில் அடையவேண்டிய இலக்காகும்.
4) நிறுவனம் எதிர்காலத்தில் அடைந்து கொள்ளக்கூடியது.

08. வணிகத்தை ஆரம்பிக்க விரும்பும் ஒருவர் கருதவேண்டிய அடிப்படையான விடயம்,
1) மூலதனத்தை திரட்டிக்கொள்ளும் வழிமுறைகள்.
2) யாரால் முகாமை செய்யப்படுதல் வேண்டும்.
3) மிக பொருத்தமான வணிகம் எது?
4) தேவைப்படும் ஊழியர்களின் எண்ணிக்கை.

09. நுகர்வுப்பண்டங்களுள் கடைப்பண்டம் என்பதனை மிக சரியாக விளக்கும் கூற்று,
1) இறுதியாக நுகரும் பண்டங்கள். 2) உற்பத்திக்கு பயன்படுத்தப்படும்.
3) சிந்தித்து தெரிவுசெய்யப்படும்.
4) அன்றாடம் நுகர்வுக்கு பயன்படுத்தப்படும்.

10. ஒரு வணிகத்தின் அகச்சூழல் சார் விடயங்களை உள்ளடக்கிய ஒரு தொகுதி எது?
1) ஊழியர்கள், இயக்குநா சபை, சாதாரண பங்குதாரர்.
2) பணவீக்கம், தலாவருமானம், சாதாரண பங்குதாரர்.
3) வெள்ளம், அவசரகால சட்டம், இயக்குநர் சபை.
4) தொழிற்சங்கம், சம்பள உயர்வு, ஊழியா வயதெல்லைச் சட்டம்.

11. தொலைக்காட்சிப் பெட்டிகளை விற்பனை செய்யும் சன்யொ ஸ்தாபனத்தின் கொழும்பு கிளை ஒவ்வொரு மாதமும் 100 தொலைக்காட்சிப் பெட்டிகளை விற்பனை செய்ய எதிர்பார்த்தது.
1) வினைதிறனான செயற்பாடு. 2) சிறந்த முகாமை.
3) தொழில் இணக்கம். 4) பயனுறுதி தன்மை.

12. உற்பத்திப் பொருட்களை வகைப்படுத்தல் எனும் தலைப்பின் கீழ் அமையும் எண்ணங்கள் (Ideas) எனும் பதத்தின் பொருள்,
1) முகாமை. 2) தகவல் தொழில்நுட்பம்.
3) செயல்முறையறிவு.
4) சந்தைப்படுத்தத்தக்க வணிக எண்ணக்கரு.

13. பணத்தை ஓர் ஆண்டிலும் குறைவான ஒரு காலப்பகுதிக்குப் பயனுறுதி வாய்ந்த வகையில் முதலீடு செய்வதற்கு பொருத்தமான நிதி கருவியாக அமைவது,
1) கம்பனி பங்குகள். 2) தொகுதிககடன்கள்.
3) திறைசேரி உண்டியல். 4) திறைசேரி முறி.

14. பின்வருவனவற்றுள் எது ஒரு பொதுதுறை வணிக நிறுவனமன்று,
1) அரச கூட்டுத்தாபனம். 2) கூட்டுறவு.
3) அரச திணைக்களம். 4) உள்ளூராட்சி மன்றம்.

15. பின்வருவனவற்றுள் சிறப்புக் குறுக்குக் கோடிடலாக அமைவது,
1) 2) 3) 4)




16. பின்வருவனவற்றுள் போக்குவரத்தின் ஒரு கூறாக அமையாதது,
1) பாதை. 2) தரிப்பிடம். 3) கிரயம். 4) கருவி.

17. காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்குச் சேதம் ஏற்படுமிடத்து சமமான நட்டஈடு மட்டும் காப்புறுதி பெற்றவருக்கு கொடுப்பனவு செய்யப்படும். இதில் பிரயோகிக்கப்படும் தத்துவம் எது?
1) காப்புறுதி நலத் தத்துவம். 2) மிக்குயர் நம்பிக்கை தத்துவம்.
3) சராசரி தத்துவம். 4) இழப்பீட்டுத் தத்துவம்.

18. வரையறுத்த தனியார் கம்பனி, வரையறுத்த பொது கம்பனி என்பவற்றுக்கிடையிலான பிரதான வேறுபாடாக அமைவது,
1) வரையறுத்த பொறுப்பு. 2) பங்கு பரிமாற்றம்.
3) சட்ட ஆளுமை. 4) இயக்குநர் சபை.

19. களஞ்சியப்படுத்தலின் பிரதான நோக்கம்,
1) பண்டங்களின் பண்புத்தரத்தைப் பேணல்.
2) வினைத்திறனை மேம்படுத்தல்.
3) உற்பத்தி கிரயத்தைக் குறைத்தல்.
4) பண்டங்களின் கேள்விக்கும், நிரம்பலுக்குமிடையில் சம அளவைப் பேணுதல்.

20. பண்டங்களுக்கும், சேவைகளுக்கும் இடையிலான வேறுபாட்டை இனங்காண உதவுவது,
1) விலை. 2) கேள்வி.
3) நிரம்பல். 4) கட்புலனாகும் தன்மை.

* பின்வரும் கொடுக்கல்வாங்கல்களை அடிப்படையாகக்கொண்டு 21, 22, 23 வினாக்களுக்கு விடை தருக.
A - ரூபா 100,000 மூலதனமாக முதலீடு செய்யப்பட்டது.
B - பொறிதொகுதியொன்று ரூபா 80,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
C - வியாபாரத்தின் விளம்பர செலவாக செலுத்தியது.
D - மீளச்செலுத்திய வங்கிக்கடன்.
E - வங்கியில் வைப்புச் செய்த காசு.

21. நடப்பு சொத்துக்கள் மீது மட்டும் தாக்கம் செலுத்திய கொடுக்கல்வாங்கல் எது?
1) A 2) B 3) C 4) E

22. இலாபத்தின் மீது நேரடியாக தாக்கம் செலுத்திய கொடுக்கல்வாங்கல்கள் எது?
1) A 2) C 3) D 4) E

23. சொத்து, பொறுப்பு என்ற இரண்டையும் குறைக்கும் கொடுக்கல்வாங்கலாய் அமைவது,
1) A 2) B 3) C 4) D

24. கடனுக்கு விற்கப்படும் பண்டங்கள் பற்றிய விவரங்களைக் காட்டி விற்பனையாளரால் கொள்வனவு செய்பவருக்கு அனுப்பி வைக்கப்படும் ஆவணம்,
1) பற்றுச்சீட்டு. 2) பட்டியல். 3) வரவுத்தாள். 4) செலவுத்தாள்.

25. காசேட்டை செம்மையாக்கம் செய்த பின்னர் வங்கிக் கணக்கிணக்கக்கூற்று தயாரிப்பதற்கு பயன்படுவது,
1) கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்.
2) கொடுப்பனவுக்கு மறுக்கப்பட்ட காசோலைகள்.
3) நிலையியல் கட்டளை கொடுப்பனவுகள்.
4) வங்கிக்கடனும், காசோலை புத்தகக் கட்டணமும்.

26. மேந்தலைக்கிரயம் என்பது,
1) நேர் திரவியங்கள், நேர் உழைப்பு, நேர்செலவுகள்.
2) நேரில் திரவியங்கள், நேரில் உழைப்பு, நேரில் செலவுகள்.
3) நேர் திரவியங்களும், நேரில் திரவியங்களும்.
4) சகல கிரய உருப்படிகளும்.

27. ரூபா 32,000 எனும் தொகைக்கான கொடுப்பனவு பட்டியல் இரு தடவை பதியப்பட்டுள்ளன. இவ்வழுவிற்கு வழங்கும் பெயர்,
1) இரட்டிப்பு வலு. 2) விடுபாட்டு வலு.
3) கோட்பாட்டு வலு. 4) ஈடு செய்யும் வலு.

28. ஆண்டுத்தொடக்கத்தில் உரிமையாளர் ஈடுபடுத்திய மூலதனம் ரூபா 15,000. ஆண்டின் இறுதியில் தேறிய இலாபம் ரூபா 40,000. ஆண்டுக்காலத்தில் வணிகத்திலிருந்து உரிமையாளா எடுத்துக்கொண்ட தொகை ரூபா 25,000 ஆயின், ஆண்டின் இறுதி மூலதனமாக அமைவது,
1) ரூபா 155,000 2) ரூபா 165,000
3) ரூபா 135,000 4) ரூபா 85,000

29. புத்தக கடையொன்றிலே காணப்படக்கூடிய நிலையான சொத்துக்களின் தொகுதியைத் தெரிவுசெய்க.
1) புத்தகங்கள், புத்தக இறாக்கைகள், கட்டடங்கள்.
2) புத்தகங்கள், கடனபட்டோர், கைவசமுள்ள காசு.
3) புத்தக இறாக்கைகள், கட்டடங்கள், காசு பதிவு இயந்திரம்.
4) புத்தக இறாக்கைகள், கடன்பட்டோர், கைவசமுள்ள காசு.

30. பரீட்சை மீதியைத் தயாரித்தலின் பிரதான நோக்கம்,
1) இரட்டைப்பதிவின் செம்மையை உறுதிசெய்தல்.
2) எண் கணிதச் செம்மையை உறுதிசெய்தல்.
3) இலாபத்தை அல்லது நட்டத்தை உறுதிசெய்தல்.
4) சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் பெறுமானங்களை உறுதிசெய்தல்.

31. கழகங்கள், சங்கங்கள் என்பவற்றின் செயற்பாட்டுப் பெறுபெறுகளைக் கணிப்பதற்கு பயன்படுத்தப்படும் கணக்கு எது?
1) இலாப நட்டக்க/கு. 2) கொள்ளல் கொடுத்தல் க/கு.
3) வருமான செலவு க/கு. 4) வங்கிக் க/கு.

32. காசுக் கழிவீடுகள் கழிக்கப்படுவது,
1) உடன் காசுக்கு பண்டங்களைக் கொள்வனவு செய்யும்போது.
2) இணங்கிய கால எல்லையினுள் கொடுப்பனவுகள் செய்யப்படும்போது.
3) காசோலை மூலம் கொடுப்பனவு செய்யும்பொழுது.
4) காசு மூலம் அல்லது காசோலை மூலம் கொடுப்பனவு செய்யும்பொழுது.

33. பின்வரும் செலவு மீதிகளுள் அசாதாரணமானதாக அமைவது,
1) அட்டுறு சம்பள க/கு 2) வெளித்திரும்பல் க/கு.
3) கடனபட்டோா மீதி 4) கிடைதத கழிவு க/கு.

34. பின்வரும் வலுக்களுள் பரீட்சை மீதியினால் வெளிக்காட்டப்பட முடியாத வழு எது?
1) சம்பள கணக்கீட்டு வரவு வைக்கப்பட்ட மின்கட்டணம்.
2) கிடைத்த கழிவு கிடைத்த கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல்.
3) கடன்கொள்வனவுகள் கொள்வனவு கணக்கில் மட்டும் வரவு வைக்கப்பட்டிருத்தல்.
4) மின்சார கொடுப்பனவு மின்சார கணக்கில் இருமுறை பதியப்பட்டிருத்தல்.

35. பின்வருவனவற்றுள் விற்பனைகள் குறிப்பது,
1) விற்பனைக் கிரயம் + மொத்த இலாபம்.
2) விற்பனைக் கிரயம் - மொத்த இலாபம்.
3) விற்பனைக் கிரயம் + தேறிய இலாபம்.
4) விற்பனைக் கிரயம் - தேறிய இலாபம்.

36. ஐந்தொகையொன்றைத் தயாரிக்கும்போது ஐந்தொகையில் வணிகத்தின் பெயரை எழுதிக்கொள்வது வழக்கம். இதற்கான கணக்கீட்டு எண்ணக்கரு,
1) பண அளவீட்டு எண்ணக்கரு. 2) கிரய எண்ணக்கரு.
3) இணைதல் எண்ணக்கரு. 4) வணிக அலகுசாா எண்ணக்கரு.

37. ஐயக்கடன் ஏற்பாட்டுக்கணக்கில் தொடக்க மீதியானது ஆண்டின் இறுதியில் தேவைப்படும் தொகையிலும் குறைவாக அமையின் தேவைப்படும் தொகை.
1) இலாபநட்டக்கணக்கு - வரவு, கடன்பட்டோர் கணக்கு - தொகை.
2) இலாபநட்டக்கணக்கு - வரவு, ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு - செலவு
3) கடன்படுநர் கணக்கு - வரவு, ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு - செலவு.
4) ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு - வரவு, கடன்பட்டோர் கணக்கு - செலவு

38. பின்வரும் செலவுகளில் எது மூலதனச் செலவாகக் கருதப்படும்,
1) நிர்வாகச் செலவு. 2) எரிபொருள் செலவு.
3) புதிய பொறி நிறுவும் செலவு.
4) கட்டடத்திற்கு தீந்தை அடிக்கும் செலவு.

39. பொது குறிப்பேடு (General Journal) எனப்படுவது,
1) நாளாந்த கொடுக்கல்வாங்கல் அனைத்தையும் பதிந்துகொள்ளும் ஏடு.
2) பிறபதிவேடு எதிலும் பதியப்படாத கொடுக்கல்வாங்கல்களை பதிந்துகொள்ளும் ஏடு.
3) வணிகத்தின் பொது செலவுகள் அனைத்தையும் பதியும் ஏடு.
4) காசாக செலுத்தப்பட்ட செலவுகளையும், காசாக பெற்ற வருமானத்தையும் பதிந்துகொள்ளும் ஏடு.

40. கணக்கொன்றின் கடமைப்பாங்கை நிறைவேற்றும் மூலப்பதிவெடு (Prince Entry) எது?
1) விற்பனைக் குறிப்பேடு. 2) காசேடு.
3) கொள்வனவு குறிப்பேடு. 4) பொது குறிப்பேடு.

11 ஆம் பக்கம் பார்க்குக....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகக்கல்வியும் கணக்கீடும் - II 60 -T-II

01. பதுளையிலிருந்து 10 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பின்தங்கிய கிராமத்தைச் சேர்ந்த கபில்தேவ் கொழும்பின் முன்னணி கணினி விற்பனை நிலையத்தில் கணினி திருத்துபவராக கடந்த 05 வருடங்களாக தொழில்புரிந்து வருவதுடன் கணினி வன்பொருள், மென்பொருள் ஆங்கில பாடநெறி என்பவற்றுள் டிப்ளோமா பட்டத்தினையும் பெற்றிருந்தார்.

தீபாவளிக்கு விடுமுறைக்காக பதுளை புகையிரதத்தில் ஏறியவருக்கு பால்ய நண்பனும் பள்ளித்தோழனுமான ஸ்ரீ ராமை சந்திக்க நேர்ந்தது. ஸ்ரீராம் தன்னைப் போலவே பல வருடங்களாக கொழும்பின் முன்னணி நிறுவனமொன்றில் கணினி மென்பொருள் வடிவமைப்பாளராக தொழிலாற்றுவதும், அதற்கான பாடநெறிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என அவர் வாயிலாக கேள்விப்பட்டார். தாமிருவரும் கொழும்பில் கடமையாற்றுவதனால் கைநிறைய சம்பளம் உழைக்கின்ற போதிலும் குடும்ப உறுப்பினர்களின் சுகதுக்கங்களில் கலந்துகொள்ள முடியவில்லை என்பதும், தாம் பிறந்த பிரதேசத்துக்கு ஏதேனும் தம்மால் இயன்ற பங்களிப்பை மேற்கொள்ள வேண்டுமென்ற ஆதங்கமும் இருவரது கருத்திலும் வெளிப்பட்டது.

பேச்சின் போக்கில் தமது பாடசாலையின் தற்போதைய நிலைமைப்பற்றி உரையாடத் துவங்கினர். பாடசாலையில் உயர்கல்வியை கற்க கணிசமானளவு மாணவர்கள் இருந்த போதிலும், தகவல் தொழில்நுட்ப பாடத்தைக் கற்க அவர்களில் பெரும்பாலோர் ஆர்வம் காட்டிய போதிலும் போதிய ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதும் ஏனைய வளங்களின் பற்றாக்குறை காணப்படுவதும் போன்ற காரணங்களினால் குறித்த பாடத்தில் அதிக புள்ளிகளை பெறமுடியாதுள்ளனர் எனவும் பயிற்றப்பட்ட விவசாய ஆசிரியர் தனது வீட்டில் கணினியொன்றை வைத்து தனக்கு தெரிந்ததை சொல்லிக்கொடுக்கிறார் என்பதும் தெரியவந்தது.

இவ்வாறு கதைக்கும்பொழுது பதுளை மாநகரத்தில் தகவல் தொழில்நுட்ப அறிவை வழங்கக்கூடிய ஒரு நிறுவனம் கூட இல்லையென்பதும், "நாளைய உலகம் எதிர்கால சந்ததியிடம்" என கணினி தொழில்நுட்ப அறிவு வளர்ச்சிக்கான கல்வி நிலையமொன்றை ஆரம்பித்தால் என்ன எனவும் தனது யோசனையினை ஸ்ரீராமிடம் முன்வைத்தார்.

அதற்கு ஸ்ரீராம், "அது நல்ல யோசனை" என வரவெற்றதுடன் தானும் கபில்தேவுடன் இணைந்து தொழில்நுட்ப சம்மதம் தெரிவித்ததுடன் ஏற்கனவே உள்ள ஏனைய தனியார் கல்வி நிறுவனங்கள் பொதுமக்கள் மத்தியில் வெறுப்புணர்வை ஏற்படுத்தியுள்ளதையும் தெரிவித்தார்.

பின்னர் நண்பர்கள் இருவரும் தமது முயற்சியினை ஆரம்பிப்பது பற்றி கலந்துரையாடினர். ரூபா 200,000 செலுத்துவதன் மூலம் கட்டடமொன்றை 04 வருடங்களுக்கு குத்தகைக்கு பெற முடியுமெனவும், ரூபா 50,000 பெறுமதியான தளபாடங்கள் கொள்வனவு செய்ய நேரிடுவதுடன் குறைந்தது 10 கணினிகளாவது கொள்வனவு செய்ய நேரிடுமெனவும், கணினி ஒன்றின் பெறுமதி ரூபா 60,000 ஆகுமெனவும், கபில்தேவ் கணினிகளை தனது கொழும்புக் கிளையிலிருந்து வட்டியில்லா 60 மாத கொடுப்பனவுகளை மேற்கொள்வதன் மூலம் கொள்வனவு செய்யலாமெனவும் கூறினார். அதற்கு ஸ்ரீராம் மாதாந்தம் மின்கட்டணம் ரூபா 6000, உதவியாளர் சம்பளம் ரூபா 5000, விளம்பரச்செலவுகள் ரூபா 12,000 ஏற்படுமெனவும், முதல் மாதம் குறைந்தது 200 மாணவர்களையேனும் மாதக்கட்டணமாக ரூபா 300 படி சேர்த்துக்கொள்ள முடியுமெனவும் நம்பிக்கை தெரிவித்தார். தொழிலை ஆரம்பிப்பதற்கு கபில்தேவ், ஸ்ரீராம் ஆகியோர் தலா ரூபா 100,000 ஈடுபடுத்த முடியுமெனவும் மிகுதித்தொகை ரூபா 100,000 வங்கிக்கடனொன்றை கிராம அபிவிருத்தி வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளவும் உடன்பட்டனர்.

01) 1. கபில்தேவின் வணிகமுயற்சிக்கு பொருத்தமான பெயரிடுவதுடன் அது எத்தகைய வணிக அமைப்புக்குள் உள்ளடங்குமெனவும் குறிப்பிடுக.
2. குறித்த முயற்சியினால் கிடைக்கும் நன்மைகள் 02 குறிப்பிடுக.

02) 1. இவ்வணிக முயற்சியின் நோக்கங்கள் யாவை?
2. முயற்சிக்குப் பொருத்தமான பேரினசூழல் காரணிகளையும் அதற்கு உதாரணத்தையும் தருக.

03) 1. முயற்சியினை ஆரம்பிப்பதற்கு அவர்கள் வசம் காணப்பட்ட பலம், பலவீனம் இவ்விரண்டை கூறுக.
2. முயற்சிக்கான சந்தர்ப்பங்கள், சவால்கள் இவ்விரண்டை குறிப்பிடுக.

04) 1. வணிகமுயற்சியினை வெற்றிகரமாக நடத்துவதற்கு மேற்கொள்ளக்கூடிய வழிமுறைகள் 04 எழுதுக.

05) குறித்த முயற்சியினை எங்கு பதிவுசெய்யலாம்? அவ்வாறு பதிவு செய்வதனால் கிடைக்கும் நன்மைகள் 02ஐத் தருக.

06) 1. வங்கி முகாமையாளர் கடன்வழங்க முன்னர் வணிகத்திட்டமொன்றை சமர்ப்பிக்கும்படி கூறினார். வணிகத்திட்டமென்பது யாது?
2. வணிகத்திட்டமொன்றில் உள்ளடங்கும் 04 விடயங்களைக் கூறுக.

07) வணிகத்திட்டத்திற்குத் தேவையான நிலையான சொத்துக்களின் பெறுமதியையும், தொழிற்படு மூலதன பெறுமதியையும் மதிப்பிடுக.

08) கொள்வனவு செய்யப்பட்ட கணினிகள் 05 வருடங்கள் பயன்படுத்தப்படலாமெனவும், 05 வருட முடிவில் ரூபா 12,000இற்கு கணினியொன்றை விற்க முடியுமெனவும் குறிப்பிடப்படுமாயின் ஆண்டொன்றுக்கான கணினி பெறுமான தேய்வு தொகை யாது?

09) 1. வங்கியில் கடன் பெற்றுக்கொள்வதற்கான இரட்டைப் பதிவினை தருக.
2. நடைமுறைச்சொத்து, உரிமைத்துவம் அதிகரிப்பதற்கும் பொருத்தமான கொடுக்கல்வாங்கலொன்றைக் குறிப்பிடுக.

10) குறித்த முயற்சி மூலம் மாதமொன்றுக்கு எதிர்பார்க்கும் தேறிய வருமானத்தைக் கணிக்கும் கூற்றை தயாரிக்குக.

02. மாத்தளை நகரத்தில் நீண்டகாலமாக இயங்கி வந்த புகாரி டிரேடர்ஸ் உரிமையாளர் மொஹமட் பசீர் நோய்வாய்ப்பட்டதையிட்டு அவரது மகன் சுலைமான் நிறுவனத்தைப் பொறுப்பேற்று நடத்த முன்வந்தார். இவ்வளவு நாளும் பெருந்தொகை பணத்தினை தனது தந்தை வீட்டிற்கு கொண்டுவந்ததுடன் பொருள் வழங்குநர்களுக்கு பெருந்தொகை பணத்தினை செலுத்த நேரிடுகையில் வீட்டுக்கு வந்து எடுத்து சென்றிருப்பதனையும் வழக்கமாகக் கொண்டிருந்தார் என்பது தெரியவந்தது. நாளாந்தம் புதின பத்திரிகைகளில் வெளிவரும் களவு, கொள்ளை, வழிப்பறி, நம்பிக்கை துரோகம் என்பவற்றை வாசிக்கும்பொழுது இவ்வளவு காலமும் இத்தகைய துரதிஷ்டகரமான சம்பவங்கள் நேராததையிட்டு இறைவனுக்கு நன்றி செலுத்தினார். தந்தை வழியினை தொடர்ந்தும் பின்பற்றுவதில் சுலைமானுக்கு உடன்பாடில்லை.

1) 1. சுலைமான் பணத்தினை வினைத்திறனாகவும், பயனுறுதிப்பாட்டுடனும் பணத்தினை கையாளுவதற்கு மேற்கொள்ளக்கூடிய வழிமுறை யாது?
2. உம்மால் குறிப்பிடப்பட்ட கணக்கினை ஆரம்பிப்பதற்கான நடைமுறைகள் யாவை?

2) காசோலை ஒன்று வரையப்படும்பொழுது கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கியமான நான்கு அம்சங்கள் எவை?

3) 1. வங்கி ஒன்றில் இருந்து பெறக்கூடிய சேவைகளை வரிசைப்படுத்துக.
2. அலகு வங்கி அமைப்பு முறையினையும் வங்கிகளுக்கிடையிலான வலைப்பின்னல் முறையினையும் வேறுபடுத்துக.

4) 1. வணிக வங்கிகளை வங்கியில்லா நிதி நிறுவனங்களிடம் இருந்து எங்ஙனம் வேறுபடுத்தலாம்?
2. வங்கி மேலதிக பற்றையும், வங்கிக் கடனையும் வேறுபடுத்துக.

5) வங்கிக்கு செல்லாமல் நிறுவனத்திலிருந்தே பெறக்கூடிய வேறு வங்கி சேவையினை கூறுக.

03. அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற திரு. கனகரத்தினம் தனக்குரிய ஊழியர் சேமலாபநிதியாக ரூபா 2500,000 இனை பெற்றுக்கொண்டார். இத்தொகையினை யாது செய்வது என யோசித்தபொழுது முதற்கட்டமாக அவரது நண்பரும் நலன்விரும்பியுமான திரு.லக்மிதாஸின் ஆலோசனைக்கிணங்க தேசிய சேமிப்பு வங்கிக்கணக்கில் வைப்புச் செய்தார். இத்தொகையினை பிரயோசனமான முறையில் முதலீடு செய்ய உத்தேசிக்கும் கனகரத்தினத்திற்கு பின்வரும் யோசனைகள் தோன்றின.

* தான் குடியிருக்கும் கடற்கரையோர வாடகை வீட்டினை தனக்கே சொந்தமானதாக மாற்றுவது. இதற்கான விலை ரூபா 4000,000 என வீட்டுரிமையாளர் கூறுகிறார். ஆனால், 10 வருடங்களுக்கு முன் அதே வீடு ரூபா 1000,000 என கூறினார்.
* தனது மூத்த மகளின் திருமணத்திற்காக ரூபா 1000,000 பெறுமதிக்கு நகைகளை வாங்குவதுடன், தனது மகன் வியாபாரம் துவங்குவதற்கு ரூபா 1500,000 வழங்குதல்.
* தனக்கு முன் பின் அறிமுகமில்லாத கம்பனிகளின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்தல்.

1) வீட்டினை உடைமையாக்கிக் கொள்வதிலுள்ள சாதகங்கள், பாதகங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
2) வீட்டினை கொள்வனவு செய்வதற்கு பற்றாக்குறை நிதியினை நிதியீட்டம் செய்வதற்குள்ள மார்க்கங்களுள் 2 ஐக் குறிப்பிடுக. நிதியீட்டும்பொழுது கருத்தில் கொள்ளப்படவேண்டிய 02 விடயங்களைத் தருக.
3) யோசனை இலக்கம் - 2ஐ ஏற்றுக்கொள்வது தொடர்பாக ஆதரவாகவும், எதிராகவும் இவ்விரு வாதங்களை முன்வைக்குக.
4) கனகரத்தினம் பொதுக்கம்பனியொன்றின் சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்வதனால் பெறும் நன்மைகள் 04 குறிப்பிடுக.
5) மேலே குறிப்பிட்டவை தவிர்ந்த சட்டரீதியான நீண்டகால முதலீடுகள் 02 ஐ குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

04. அஜித் என்பவர் முன்னணி நிறுவனமொன்றில் கணக்காளராக தொழில்புரிவதுடன் அவரது மனைவி ஓர் ஆசிரியராவார். அவர்களுடன் அஜித்தின் தம்பி நிரந்தர வேலையொன்றில்லாமல் அவர்களுடனேயே தங்கிவந்தார். அஜித்தின் இரு பிள்ளைகளும் தாம் வசிக்கும் இடத்திலிருந்து ஒவ்வொரு நாளும் அலுவலக, கல்வி தேவைக்காக 05 கிலோமீற்றர் தூரத்திலுள்ள நகரத்திற்கு மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் போக்குவரத்து செய்துவந்தனர். மேலும் தனது குடியிருப்புப் பகுதியில் ஒவ்வொரு நாளும் பெறுமதி வாய்ந்த பொருட்கள் திருடு போவதாகவும், அடிக்கடி அஜித்தின் மனைவி முறைப்பாடு செய்துவந்தார். வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதும், தனது தம்பியின் வாழ்க்கை வீணாகுவதும் அடிக்கடி அஜித்திற்கு மன வேதனையளித்தது. எனினும், தம்பிக்கு சுய தொழில் ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக முச்சக்கரவண்டியொன்றை கொள்வனவு செய்யலாமென்றால் அதற்கு தன்னிடமுள்ள நிதி போதாதென்றும் உணர்ந்துகொண்டார்.

தேவைப்படுபவை:-
1) இப்பந்தியிலே குறிப்பிடப்பட்ட அடிப்படை தேவைகள் 2ஐ இனங்காண்பதுடன் அவற்றை பூர்த்தி செய்யக்கூடிய வடிவங்கள் 2ஐயும் குறிப்பிடுக.
2) அஜித்தின் தம்பியின் பிரச்சினையைத் தீர்க்கவும், அஜித்தின் போக்குவரத்து பிரச்சினையைத் தீர்க்கவும் உம்மால் சிபாரிசு செய்யக்கூடியது யாது?
3) முழு தொகையினை உடனடியாக செலுத்த முடியாத அஜித் முச்சக்கரவண்டியினை கொள்வனவு செய்வதற்கு குத்தகை சேவை, பெறுவதனால் விளையும் நன்மைகள் 2ஐயும், தீமைகள் 2ஐயும் குறிப்பிடுக.
4) திருடர் பயம், விபத்து என்பனவுக்கெதிராக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை யாது? இப்பாதுகாப்பை வழங்கும் நிறுவனங்கள் 02இன் பெயரைக் குறிப்பிடுக.
5) ஆயுட்காப்புறுதி நட்டஈட்டிலிருந்து எங்ஙனம் வேறுபடுகின்றது?

05. மயூரன் கம்பனியின் 2009 மார்ச் 31இல் உள்ளபடி பரீட்சை மீதி வருமாறு:-

| விவரம் | வரவு | செலவு |
|---|---|---|
| காணியும் கட்டடமும் | 1000,000 | |
| கட்டட திரண்ட தேய்வு - 2008.04.01இல் | | 200,000 |
| வியாபார இருப்பு | 375,000 | |
| கொள்வனவுகள் | 1903,000 | |
| விற்பனைகள் | | 2550,000 |
| உட்திருப்பங்கள் | 130,000 | |
| வெளித்திருப்பங்கள் | | 150,000 |
| செலுத்திய உட்சுமைக் கூலி | 50,000 | |
| எடுப்பனவுகள் | 46,000 | |
| வியாபாரக் கடன் கொடுநர்கள் | | 312,000 |
| பதிவழித்த அறவிடமுடியாக் கடன் | 21,000 | |
| ஐயக்கடன் ஏற்பாடு - 2008.04.01 வரை | | 10,000 |
| பெற்ற கழிவு | | 35,000 |
| பெற்ற தரகு | | 26,000 |
| செலுத்திய அலுவலக சம்பளமும் கூலியும் | 265,000 | |
| செலுத்திய விளம்பரக் கட்டணம் | 155,000 | |
| தபால் தொலைபேசிக் கட்டணம் | 68,000 | |
| 16% வங்கிக் கட்டணம் | | 200,000 |
| கொடுத்த வங்கிக்கடன் வட்டி | 20,000 | |
| வங்கிக் கட்டணமும் காசோலைப் புத்தகக் கட்டணமும் | 17,000 | |
| மூலதனம் | | 500,000 |
| வங்கி மீதி | | 67,000 |
| | 4050,000 | 4050,000 |

மேலதிக தகவல்கள்:
1) 2009 மார்ச் 31இல் வியாபார கையிருப்பு ரூபா 467,000
2) 2009 மார்ச் 31இல் அட்டுறு அலுவலக சம்பளமும் கூலியும் ரூபா 35,000
3) 2009 மார்ச் 31இல் முற்பண விளம்பரக் கட்டணம் ரூபா 15,000
4) காணியின் கிரயம் ரூபா 500,000 கட்டடத்திற்கு ஒழுங்கு பாக முறையில் 20% பெறுமானத்தேய்விடுக.
5) கடன்பட்டோரில் ரூபா 18,000 ஐ அறவிடமுடியாக்கடனாக பதிவழிக்க எஞ்சிய தொகையில் 5% சதவீதமாக ஐயக்கடன் ஏற்பாடாக சீராக்குக.

தேவைப்படுவது:-
2009 மார்ச் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார இலாபநட்டக்கணக்கும், 2009 மார்ச் 31 இல் உள்ளபடியான ஐந்தொகையும்.

06. 2009 மார்ச் 31இல் உள்ளபடியான சொத்துக்களும், பொறுப்புக்களும் வருமாறு:-

| | |
|---|---|
| காணியும் கட்டடமும் கிரயம் | 1500,000/= |
| தளபாட பொருத்துக்கள் - கிரயம் | 650,000/= |
| திரண்ட தேய்வு - கட்டடம் | 360,000/= |
| (தளபாட) பொருத்து | 240,000/= |
| வியாபாரக் கையிருப்புக்கள் | 268,000/= |
| வியாபாரக் கடன்படுநர் | 315,000/= |
| ஐயக்கடன் ஏற்பாடு | 30,000/= |
| வியாபாரக் கடன்கொடுநர் | 360,000/= |
| கையிலுள்ள காசுமீதி | 48,000/= |
| வங்கியிலுள்ள மீதி | 19,000/= |
| பெற்ற அடகுக்கடன் | 40,000/= |

தேவைப்படுவது:-
2009 ஏப்ரல் 01இல் துவக்கப்பதிவின் மூலம் மூலதனத்தைக் காண்க.

2009 மார்ச் 31இல் முடிவுற்ற ஆண்டிற்கு மரத்தளபாடங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் சுரணிமல தளபாட கம்பனியின் தரவுகள்:-

| | |
|---|---|
| அரிந்த மரங்கள் கொள்வனவு | 1580,000/= |
| தச்சுத் தொழிலாளி கூலி | 820,000/= |
| மணற் கடதாசி கொள்வனவு | 2,400/= |
| ஆணிகள் வாங்கியது | 2,100/= |
| மரப்பூச்சு - வார்னிஸ் | 30,000/= |
| சிறு கருவி அழிவு | 25,000/= |
| ஆலைவாடகையும் இறையும் | 240,000/= |
| மின்சக்தியும் எரிபொருளும் | 117,000/= |
| காட்சியறை வாடகை | 60,000/= |
| வெளிச்சென்ற வண்டிக்கூலி | 30,000/= |
| உட்சுமைக் கூலி | 75,000/= |
| விற்பனை தரகு | 48,000/= |
| பிற ஆலை மேந்தலை | 120,000/= |
| பூர்த்தி செய்யப்பட்ட தளபாடங்களின் எண்ணிக்கை | 1,000/= |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.
1) மொத்த மூலக்கிரயம். 2) மொத்த ஆலை மேந்தலை கிரயம்.
3) மொத்த உற்பத்தியல்லாத மேந்தலை கிரயம்.
4) தளபாடமொன்றுக்கான உற்பத்திக்கிரயம்.
5) உற்பத்திக்கிரயத்துடன் 50% இலாபம் சேர்த்து விற்பனை விலை குறிக்கப்படுமாயின் அலகொன்றிற்கான விற்பனை விலை.
6) கணக்காண்டில் 800 தளபாடங்கள் விற்பனை செய்யப்படுமாயின் அடைந்த இலாபம்.

(தொடர்ச்சி 12 ஆம் பக்கத்தில்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகாவின் நிலைப்பாட்டை சிறுபான்மையினருக்கு விளக்குவோம்!

## மு.கா. தலைவர் ஹக்கீம் தகவல்

கொழும்பு,டிச.8

சிறுபான்மை இன மக்கள் தொடர்பாக எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா கொண்டிருக்கும் நிலைப்பாடு இனி சிறுபான்மை இன மக்களுக்குத் தொடர்ச்சியாகத் தெரிவிக்கப்படும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறினார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் தேர்தல் பிரசார ஊடக மத்திய நிலையத் திறப்பு விழா கொழும்பில் இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றிய சமயம் ஹக்கீம் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மூன்று தலைமுறைக்குத் தாம் இந்த நாட்டை ஆட்சி செய்யலாம் என்ற மஹிந்த ராஜபக்ஷவின் கனவு, யுத்தம் முடிந்த ஆறு மாதங்களில் கலைந்துவிட்டது. இந்த அரசின் செயற்பாடுகளை இந்நாட்டு மக்கள் மிகத் தெளிவாக விளங்கிக் கொண்டுள்ளனர்.

அரசின் நடவடிக்கை தொடர்பாக முஸ்லிம்கள் மிகவும் விழிப்புடன் உள்ளனர். சிறுபான்மை இன மக்கள் குறித்த சரத் பொன்சேகாவின் நிலைப்பாட்டை அரசு திரிபுபடுத்திக் கூறுகின்றது. நாம் இப்போது திறந்திருக்கும் இந்தத் தேர்தல் பிரசார மத்திய நிலையத்தின் ஊடாக சிறுபான்மை இனம் குறித்த ஜெனரல் சரத் பொன்சேகாவின் நிலைப்பாட்டை இனி மக்களுக்குத் தெரியப்படுத்துவோம். - என்றார்.

ஊடக மத்திய நிலையத் திறப்பு விழாவில் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸநாயக்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

(சி)


### வாடகைக்கு

(Ac./Non Ac) அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்குச் சகல வசதிகளுடனும் உண்டு.

ஏஞ்சல் IN, 27, ஸ்ரேசன் றோட், வெள்ளவத்தை. T.P.0114878686

### விற்பனைக்கு

தரமான

* சிறிய செங்கற்கள்
* கொங்கிறீட் கற்கள்

விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 0778330145

(சி/560984)

இதோ!

ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி. தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல் சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔடதம்

பீம் வாசக சிரப் (Vasaka Syrup)

இருமல் பாணி

யாழ்.குடாநாட்டின் அனைத்து பாமர்ஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

*Manufactured By:*
*Beamhela osulanka (PVT) LTD*
*18/263 Kethsiry Place*
*High Level Road, Kottawa*
*Pannipa Panniptiiya*
*Puttalam, Road, Chilaw.*
*(Reg.No: 6382)AR/PR/No.228*

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,
தொ.பே: 021 222 2567

(சி/562080)


## ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

**சிதம்பரப்பிள்ளை செல்வரத்தினம்**

(ஆசிரியர்)

மலர்வு
11.11.1949

உதிர்வு
17.11.2000

திதி: ஸப்தமி 08.12.2009

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட சிதம்பரப்பிள்ளை செல்வரத்தினம் இறைபதமடைந்து ஒன்பது ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் அவரது நினைவுகள் எம்மை விட்டகலாது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

*20, எச்சமோட்டை,*
*கடற்கரைவீதி,*
*யாழ்ப்பாணம்.* (92856)

மைத்துனரும்,
குடும்பத்தினரும்

## வடமராட்சியில் பட்டம் ஏற்றும் சீஸன் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு வடமராட்சிப் பகுதியில் பட்டம் ஏற்றும் சீஸன் ஆரம்பமாகியுள்ளது.

வட்டம், நட்சத்திரம், மணிக்கூடு, வீடு படலம் போன்ற அமைப்பிலான பட்டங்கள் ஏற்றப்பட்டு வருகின்றன.

இந்தப் பட்டங்களைச் சிறுவர்கள் முதல் இளைஞர்கள் வரை ஏற்றிவருவதைக் காணக்கூடியதாக உள்ளது. (1-78)

## ஸ்ரீ சாரதாதேவியின் 157ஆவது ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம்,டிசெ.8

தாவடி, கொக்குவில் ஸ்ரீ இராம கிருஷ்ண சமிதியினரின் ஏற்பாட்டில் ஸ்ரீ சாரதா தேவியின் 157ஆவது ஜெயந்தி விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளரும் மகப்பேற்று வைத்திய நிபுணருமான வைத்திய கலாநிதி ஜி.பவானி 'தாய்மையே இறைவனின் முதல் வடிவம்' என்னும் பொருளில் உரையாற்றவுள்ளார்.

இந்த நிகழ்வில் யோகாசனப் பயிற்சிகளில் சித்தி அடைந்தவர்களுக்கும் பேச்சுப்போட்டி, தனி நடிப்புப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (204-86)

## வீதியைக் கடக்க முயன்ற சிறுமி விபத்தில் காயம்

புன்னாலைக் கட்டுவனில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஏழு வயதுச் சிறுமி ஒருவர் காயமடைந்தார்.

வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில், அதே இடத்தைச் சேர்ந்த எ. சிந்துஜா என்பவரே விபத்தில் சிக்கிக் காயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-16)

## வணிகக்கல்வியும் கணக்கீடும் II - தொடர்ச்சி...

06. வருத்திமில்லா வாலிபச் சங்கத்தின் 2008 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கு .

| | தொகை | | தொகை |
|---|---|---|---|
| 2008.01.01இல் காசு மீதி | 30,000 | தளபாடம் வாங்கியது | 75,000 |
| பெற்ற அங்கத்துவ கட்டணம் | 84,000 | விளையாட்டு சாதனங்கள் | 80,000 |
| பெற்ற நுழைக்கட்டணம் | 23,000 | யோகாபயிற்றுவிப்பாளர் சம்பளம் | 40,000 |
| பெற்ற நன்கொடை | 335,000 | சங்க வாடகை | 50,000 |
| | | செயலாளர் கட்டணம் | 53,000 |
| | | போக்குவரத்து | 30,000 |
| | | பரிசளிப்பு செலவுகள் | 27,000 |
| | | 2008.12.31இல் காசு மீதிசென்றது | 117,000 |
| | 472,000 | | 472,000 |

மேலதிக தகவல்கள்:

1) 2008ஆம் ஆண்டில் சங்கத்தில் 200 அங்கத்தவர்கள் உள்ளனர். அங்கத்தவர் ஒருவருக்கான ஆண்டு அங்கத்துவ கட்டணம் ரூபா 450/=
2) பெற்ற நன்கொடையில் ரூபா 300,000 சங்ககட்டடம் அமைப்பிப்பதற்கானது.
3) தளபாடத்திற்கு 10% சதவீதமும், விளையாட்டு சாதனங்களுக்கு 20% சத வீதமும் பெறுமான தேய்விடுக.

தேவைப்படுவது:-
2008.12.31இல் முடிவுற்ற ஆண்டிற்கான வருமான செலவு கணக்கு.

07. 1) சில்லறை காசேடு என்பது யாது?
2) சில்லறை காசு கட்டுநிதி என்பது யாது?
3) வசக்கட்டு முறைமை என்பது யாது? இதற்கான நாட்குறிப்பு பதிவு யாது?
4) சிறுசெலவு காசு கட்டுநிதியை தீர்மானிக்கும் காரணிகள் 04ஐ தருக.
5) தாஷினி நிறுவனத்தின் 2009 ஒக்டோபர் மாதம் சிறுசெலவு காசாளரின் கொடுக்கல்வாங்கல் வருமாறு:-

| | |
|---|---|
| 2009.10.01 இல் காசு நிலுவை | ரூபா 315 |
| 02 பிரதான காசாளரிடம் பெற்றது | ரூபா 2685 |
| 03 செலுத்திய பஸ் கட்டணம் | ரூபா 240 |
| 05 தேயிலை வாங்கியது | ரூபா 366 |
| 08 தொலைநகல் அனுப்பியது | ரூபா 277 |
| 11 வழங்குநர் பியதாசவிற்கு செலுத்தியது | ரூபா 358 |
| 15 செலுத்திய முச்சக்கரவண்டி வாடகை | ரூபா 280 |
| 18 பால்மா வாங்கியது | ரூபா 245 |
| 21 A4 பேப்பர் ரீம் வாங்கியது. | ரூபா 300 |
| 24 வழங்குநர் - குமரன் வாங்கியது | ரூபா 386 . |

பிரியன் வியாபாரத்தில் இடம்பெற்ற வியாபார கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு:-


1) பிரியன் ரூபா 100,000 இட்டு வியாபாரத்தை ஆரம்பித்தார்.
2) ரூபா 10,000 பெறுமதியான இயந்திரம் ஒன்றை காசுக்கு கொள்வனவு செய்தார்.
3) வியாபாரத்தை விரிவுபடுத்த வங்கிக்கடனாக ரூபா 20,000 பெற்றார்.
4) ரவியிடமிருந்து ரூபா 70,000 பெறுமதியான பொருட்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
5) ரூபா 75,000 வங்கியில் இடப்பட்டு வங்கியில் நடைமுறைக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டது.
6) அமீருக்கு ரூபா 30,000 கடனுக்கு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. இவற்றில் கிரயம் ரூபா 20,000
7) வங்கியிலிருந்து ரூபா 5,000 மீளப்பெறப்பட்டது.
8) ரவிக்கு ரூபா 20,000 பணம் செலுத்தப்பட்டது.

தேவைப்படுவது:-

1) மேற்குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களை இலக்க வாரியாக பின்வரும் சமன்பாட்டில் வகைப்படுத்துக.
இயந்திரம் + பண்டங்கள் + கடன்படுநர் + வங்கி + காசு = மூலதனம் + வங்கிக் கடன் + கடன் கொடுநர்.

-நிறைவுற்றது-

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
02.07.1927

**சின்னப்பு செபமாலையம்மா**
தம்பதியினர்

விண்ணில்
08.12.2003

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பிலும் வாழ்வார்

ஊறணி
காங்கேசந்துறை. (92919)

*பிரிவால் துயருறும்,*
*பிள்ளைகள்*

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்

**தம்பிமுத்து சரவணமுத்து**

தோற்றம்
04.07.1923

மறைவு
09.11.2009

கடந்த (09.11.2009) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் நாளை (09.12.2009) புதன் கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அச்செழு,
நீர்வேலி. (92918)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கந்தையா

**கணேசலிங்கம்**

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர், சாவகச்சேரி.)

பிறப்பு
24.08.1948

இறப்பு
19.11.2008

திதி: ஸப்தமி

குடும்பத்தின் குலவிளக்காய் வாழ்ந்து
எம்மை அன்புடன் அரவணைத்து
நன்னெறி காட்டி வாழவைத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லடி ஒழுங்கை,
சாவகச்சேரி. (91369)

மனைவி, பேரமக்கள்,
உற்றார், உறவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன வசதிகள் கிடைக்கும் பட்சத்தில் 83 ஆம் ஆண்டு நிலைக்குத் திரும்பமுடியும்



**குடாநாட்டில் கடற்றொழிலாளர்கள் முகம் கொடுத்துவரும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசத்தின் தலைவர் எஸ்.தவரட்ணம் நேர்காணல் ஊடாக மனம் திறந்துபேசுகிறார்.**

கேள்வி: குடாநாட்டு மீனவர்களின் தற்போதைய நிலை என்ன?

*பதில்:* கடந்த ஜூன் மாதத்தின் பின்னர் நீண்ட காலமாக நடைமுறையிலிருந்துவந்த, கடற்றொழிலாளர்கள் மீதான கெடுபிடிகள் 60 வீதமானவை தளர்த்தப்பட்டிருக்கின்றன. 24மணி நேரமும் கடற்றொழில் மேற்கொள்ள முடிகின்றது. எனினும் சில கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் இருக்கின்றன. குறிப்பாக பாஸ் நடைமுறை அமுலில் இருக்கின்றது. எங்கிருந்து தொழிலுக்கு புறப்படுகின்றோமோ அவ்விடமே மீளவும் வேண்டும் எனும் நடைமுறையும் தற்போதுள்ளது.

எரிபொருள் உட்பட தேவையான பொருள்களையும் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறது. கடல் வளத்தைப் பாதிக்காத வகையில் கடற்றொழில் உபகரணங்கள் பயன்படுத்தக்கூடிய நிலைமையும் ஏற்பட்டிருக்கின்றது. இவை காரணமாக இதுவரை காலமும் உழைப்புப் பிழைப்பு இன்றி வாழ்ந்த 18, 500 கடற்றொழிலாளர் குடும்பங்கள் தற்போது ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றன.

கேள்வி: இந்தியக் கடற்றொழிலாளர்கள் அத்துமீறி இலங்கை கடற்பிராந்தியத்தினுள் வருவதாகக் கூறப்படுகிறது. இதற்கு என்ன காரணமாக இருக்கும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?

## இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்கிறது

*பதில்:*இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பினுள் வருவது அதிகரித்திருக்கிறது. 'றோலர்' படகு மூலம் கடற்றொழில் செய்யும் முறையை அறிமுகப்படுத்தியவர்கள் இந்திய மீனவர்களே. அவர்களது கடற்பிரதேசம் அனைத்திலும் 'றோலர்' படகையே பயன்படுத்தி வருகின்றனர். இதனால் கடல்வளம் பெரும்பாலான பகுதிகளில் இழக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலமையிலேயே இந்திய மீனவர்களால் எமது கடல்வளத்தை தேடிவரவேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக எமது வளமும் அழிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்படலாம்.

இவ்வாறு இலங்கை கடற்படையினரால்

## 48 மெற்றிக்தொன் கடலுணவு பிடிக்கும் காலம் வருமா?

பலமுறை கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை யாழ்.சிறைச்சாலையில் நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கும். அப்போதெல்லாம் அவர்களிடம் தயவுசெய்து கடலில் 'றோலர்' படகை பயன்படுத்துவதைத் தவிருங்கள் என இரந்து வேண்டிக்கொள்வேன்.

கேள்வி: கடல்வளத்தைப் பாதுகாக்க நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படுகிறதா?

*பதில்:* கடல்வளம் பேணப்பட வேண்டும் என்பதில் எமது சமாசமும் மிக உறுதியாகச் செயற்பட்டுவருகிறது. கடந்த மாதம் இதற்கான கலந்துரையாடல் இடம்பெற்று சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் யாழ்.பல்கலைக்கழக புவியியல் பேராசிரியர்கள், கடல்வள வல்லுநர்கள், கடற்றொழில் திணைக்கள பிரதிநிதிகள், கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துரையாடி தீர்மானத்தை நிறைவேற்றிக்கொண்டனர்.

## கடல்வளத்தைப் பாதுகாக்க நடவடிக்கை

கடல்வளத்தைப் பாதிக்கும் 'றோலர் படகு, தங்கூசி வலை என்பவற்றையும் மேலும் இனங்காணப்படும் விடயங்களையும் கைவிடவேண்டும் எனவும் இவ்வருட இறுதிக்குள் அவற்றைப் பாவிப்போர் மீது நடவடிக்கையும் தண்டப்பணமும் அறவிடுதல் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஏன் யாழ்.வந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இந்திய மீனவர்கள் அத்துமீறி வந்து எமது பகுதியில் 'றோலர்' படகு மூலம் மீன்பிடிக்கும் நடவடிக்கையைக் கட்டுப்படுத்துமாறு வேண்டிக்கொண்டதுடன் முதலமைச்சர் மு.கருணாநிதிக்கும் மகஜர் ஒன்றினைக் கையளித்திருந்தோம்.

கடல் வளத்தையும் கடல் உணவினைப் பெருக்குவதற்கென சம்பந்தப்பட்ட துறைசார் வல்லுநர்களுடன் தொடர்ந்தும் கலந்துரையாடி வருகின்றோம். இவ்விடயம் தொடர்பான விளக்கங்களை எமது கடற்றொழிலாளர்களுக்கும் வழங்கி வருகின்றோம்.

இவை மட்டுமின்றி கடல்வளத்தைப் பேணிக்கொள்வதன் பொருட்டு ஆழ்கடல் கடற்றொழிலை அறிமுகப்படுத்துதல் குறித்தும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம்.

## ஆழ்கடல் தொழிலுக்கு ஊக்கமளிக்கத் திட்டம்

கேள்வி: ஆழ்கடல் கடற்றொழில் பற்றி விளக்கம் தரமுடியுமா?

*பதில்*: ஆம். ஆழ்கடலுக்குச் சென்று தங்கியிருந்து கடற்றொழிலில் ஈடுபடுவதன் மூலம் கடல்வளம் சிறப்பான முறையில் பாதுகாக்கப்படும். இவ்வாறு தொழில்செய்வதற்கு 'மல்ரிடேய்ஸ் வோட்ஸ்' படகு தேவையாகும். இதன்மூலம் ஆழ்கடலில் இரண்டு கிழமைகள் தங்கியிருந்து தொழில் செய்யமுடியும்.

யாழ்.மாவட்டத்தில் கடற்றொழிலாளர் சம்மேளனத்திற்கு என ஜி.ரி.சற் நிறுவனத்தால் 80 இலட்சம் ரூபா பெறுமதியான இந்தப்படகு ஒன்று வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு 60இலட்சம் பெறுமதியான உபகரணங்கள் பொருத்த வேண்டியிருக்கிறது. அதற்கான நிதியை தொண்டு நிறுவனம் ஒன்று வழங்க முன்வந்திருக்கிறது.

வருகிற தை மாதமளவில் இந்தப் படகு ஆழ்கடல் நோக்கிச் சென்று கடற்றொழிலில் ஈடுபடக் காத்திருக்கிறது. இதன்மூலம் 15 கடற்தொழிலாளர் குடும்பங்கள் பயனடையக்கூடியதாக இருக்கும் என நம்புகின்றோம்.

கேள்வி: 'றோலர்' படகைப் பயன்படுத்துவது குறித்து உங்கள் கருத்து?

*பதில்:* 'றோலர்' படகைப் பயன்படுத்துவதற்கு ஏற்கனவே தடைவிதிக்கப்பட்டிருக்கிறது. மாற்று தொழிலுக்கான உதவிகளும் வழங்கப்பட்டிருக்கிறது.

'றோலர்' படகினைப் பயன்படுத்துவதனால் பெருந்தொகையான மீன்கள் பிடிக்கமுடியும். எனினும் எமது கடல்வளம் விரைவாக அழிந்துபோகும் நிலையும் ஏற்படும். கடலுணவுகளின் இனப்பெருக்கத்தைப் பாதிப்பதாக அமையும். அதுமட்டுமின்றி வழிச்சல் வலைகளையும் வெட்டி சேதமாக்கும். இதனால் அவ்வலை மூலம் தொழில் செய்வோரும் பாதிக்கப்படுகிறார்கள்.

தற்போது குருநகர் பகுதி கடற்றொழிலாளர்கள் இந்த றோலர் படகு மூலம் கடற்றொழில் செய்வதற்குரிய நடவடிக்கைகளை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்படுத்திக் கொடுத்திருகிறார்.

கேள்வி: கடலுணவுகளுக்கான சந்தை வாய்ப்பு எப்படியிருக்கிறது?

*பதில்:* எமது கடலுணவுகளுக்கு தென்பகுதியில் ஏற்ற விலைகள் கிடைப்பதில்லை. ஏன் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் கடல் உணவுகளுக்கும் எமக்கு உரிய விலை பெறமுடிவதில்லை.

இலங்கை அரசாங்கம் மீன், கருவாடு போன்றவற்றை இறக்குமதி செய்கிறது. அதன்அளவைக் குறைப்பதன் மூலமே எமக்கான பயன்கள் கிடைக்கப்பெறும்.

யாழ்.மாவட்டத்துக்குத் தேவையன கடலுணவுகளையே இங்கு சந்தைப்படுத்த முடியும். பருவகாலங்களுக்கும் காலநிலை மாற்றத்துக்கும் ஏற்ப யாழில் கடலுணவுகள் விலை தீர்மானிக்கப்படுகிறது.

மேலதிகமாகப் பிடிக்கப்படுபவையே தென்பகுதிக்கு கொண்டு செல்லப்படுகிறது. அவ்வாறு தினமும் 18 ஆயிரம் கிலோ கடலுணவு அனுப்பப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தென்னிலங்கைக்கு அனுப்பப்படுவதன் காரணமாகவே இங்கு கடலுணவுகளின் விலைகள் அதிகரித்திருக்கிறது எனக் கூறப்படுவது உண்மையல்ல என்றே நான் கூறுகிறேன்.

கேள்வி: வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டம் மூலம் கிடைத்த உதவிகள் பற்றி...?

*பதில்:* இந்தத் திட்டம் மூலம் இதுவரை எமக்கு எவ்வித உதவிகளும் நன்மைகளும் கிடைக்கவில்லை. இனிவரும் நாள்களில் கிடைக்கவிருக்கிறதோ தெரியவில்லை. அவ்வாறு கிடைக்குமாயின் உரியமுறையில் தேவைப்பகுப்பாய்வைச் செய்து அவை வழங்கப்படவேண்டும்.

கேள்வி: கடற்தொழிலாளர் எதிர்பார்க்கும் உதவிகள்...?

*பதில்:* உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட படகுத்துறைமுகங்கள், கடலுணவு பதனிடும் நிலையங்கள், ஐஸ் உற்பத்தி நிலையங்கள், நவீன கடற்றொழில் படகுகள் தேவையாக இருக்கின்றன. இவை கிடைக்கப்பெற்றால் 1983 இல் 48 மெற்றித்தொன் கடலுணவு பெற்ற சாதனையை இனிவரும் காலங்களிலும் எட்டமுடியும் என உறுதி படக்கூறுகின்றோம்.

யாழ்.மாவட்டத்தில் 117 கடற்றொழிலாளர் சங்கங்கள் உள்ளன. அவற்றில் சுமார் 40 சங்கங்கள்

## கடற்றொழிலாளர் சமாசத்தின் தலைவர் தவரட்ணம் விவரிக்கிறார்

மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன. அந்த சங்கங்களுக்கு ஆழ்கடலில் தங்கியிருந்து கடற்றொழில் செய்யக்கூடிய படகான 'மல்ரி டேய்ஸ் வோட்ஸ்' வழங்கப்படவேண்டும். இதன் மூலம்கடல்வளம் பாதுகாக்கப்படும் அதேவேளை அதிகளவான கடலுணவுகள் பெறக்கூடியதாக இருக்கும்.

குருநகர், ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, தாளையடி, தொண்டைமானாறு, காரைநகர் போன்ற இடங்களில் படகுத் துறைமுகமும், கடலுணவு பதனிடும் நிலையமும் தேவையாக இருக்கிறது. மயிலிட்டி படகுத் துறைமுகம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படவேண்டும்.

செவ்வி: என்.ரி.உமா

3.5 தொன் அடி நீளமான 300 படகுகள் கடற்றொழிலுக்குத் தேவையாக உள்ளன.

தென்னிலங்கை கடற்றொழிலாளர்களுக்கு அனைத்து வசதிகளையும் வழங்கும் தற்போதைய அரசால் எமக்கேன் அவை வழங்க முடியாதுள்ளது?

20 வருட பாரம்பரிய தொழில்களை அவற்றின் முறைமைகளை நவீனமயப்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளவேண்டும். இயற்கை அனர்த்த முன் எச்சரிக்கை வசதிகள், தகவல் பரிமாற்ற வசதிகள் எதுவுமே எமக்கு வழங்கப்படவில்லை.

கடந்தகால 'சுனாமி' அனர்த்தத்தின்போதும் 'நிஷா' புயல்அனர்த்தத்தின்போதும் எமதுதுறை மிகப் பாதிக்கப்பட்டது. சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு வழங்கிய உதவிகளுக்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். எனினும் அவை உரிய முறையில் இனங்கண்டு வழங்கப்படவில்லை. இதனால் வழங்கப்பட்ட சில உதவிப் பொருள்களை பணத்துக்கு விற்கும் நிலையும் ஏற்பட்டது.

கேள்வி: யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியியல் கற்கை நெறி மூலம் பயன் கிட்டியதா?

*பதில்:* யாழ்.பல்கலைக்கழகம் கடந்த 10 வருட காலமாக மீன்பிடியியல் கற்கை நெறிமூலம் இளம் சமூகத்தினரிடையே அது தொடர்பான அறிவையும் விழிப்புணர்வினையும் ஏற்படுத்தி வந்தது. பேராசிரியர் சித்திரவடிவேல் போன்றோர் இவ்விடயத்தில் அதிக பங்களிப்பை வழங்கினார்கள்.

எனினும் தற்போது அக்கற்கை நெறிச் செயற்பாடுகள் மந்தநிலையில் இழுபறியில் இருப்பது மனவேதனைக்குரிய விடயமாகும். அதற்கென வழங்கப்பட்ட வளங்கள், பொருள்கள் உரிய முறையில் பராமரிக்கப்படுகிறதோ தெரியவில்லை.

அந்தக் கற்கை நெறிக்கு மீளவும் உயிரூட்டி அதனைத் தனியான ஒரு துறையாக வளர்த்தெடுக்கவேண்டிது அவசியமானது.

இவ்விடயம் குறித்து துணைவேந்தர் பேராசிரியர் சண்முகலிங்கனிடமும் அவர் அலுவலகத்துக்கு நேரில் சென்று விளக்கியிருக்கிறோம்.

இவ்வாறு முறைமைப்படுத்தப்பட்ட தனியான ஒரு துறையாக வளர்த்தெடுக்கப்படுவதன் மூலம் மக்கள் மத்தியில் அதற்கான அங்கீகாரத்தையும் பெறமுடியும்.

இதன்மூலம் அறிவியல் ரீதியாக விளக்கமுடைய இளஞ்சந்ததிகள் மூலம் கடற்றொழில் சிறப்பான முறையில் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படும். இயற்கை வளம் திட்டமிட்டமுறையில் பயன்படுத்த முடியும்.

இதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்பதே எமது வேண்டுதலாகும்.

* * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்கும் சைவத்துக்கும் ஒருங்கே தொண்டாற்றிய நாவலர் பெருமான்

**இன்று செவ்வாய்க்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசைத் தினமாகும். அதனையொட்டி இவ் ஆக்கம் இங்கு பிரசுரமாகின்றது.**

''இந்தச்சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்'' என்ற மகாவாக்கியத்தை உருவாக்கி எங்கள் மனதில் உறையச் செய்தவர் நாவலர் பெருமான்.

மிக வசதிபடைத்த குடும்பத்தில் கந்தப்பருக்கும் சிவகாமி அம்மைக்கும் கடைசி மகனாகப் பிறந்த நாவலர் பெருமான் மிகுந்த விவேகம் படைத்தவர். ஆங்கிலம், வடமொழி, தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் புலமை நிரம்பியவர். கற்பவை கற்றுக் கற்றாங்கு ஒழுகியவர். பழியஞ்சி வாழ்ந்த பகலவன் யாழ்ப்பாணம் செய்த மாதவத்தின் பேறாகத் தோன்றியவர்.

யாழ்ப்பாணத்துக் கல்விப் பாரம் பரியத்தில் நாவலர் பெருமானுக்கு ஒருதனியிடம் இருக்கின்றது. அவர் புரிந்த சாதனைகள் ஏராளம். தமது இம்மைப் பயன்கள் யாவற்றையும் துறந்து தமிழையும் சைவத்தையும் வளர்ப்பதற்காகத் தோற்றம் பெற்ற கற்பகதரு அவர். மும்மொழிப் புலமை காரணமாக அவர் பல நூல்களைக் கற்றுத்தேறும் பேற்றினைப் பெற்றார். நிலையில்லா இவ்வுலக வாழ்வில் நிலையான கருமங்கள் பலவற்றைப் புரிந்து சாதனை படைத்தார். பீற்றர் பார்சிவல் துரையின் பாடசாலைக்கு ஆங்கிலம் கற்கச் சென்றவர் அங்கு ஆசிரியராகிப் பின் பார்சிவலுக்குப் பண்டிதருமானார். பார்சிவலின் பெருமதிப்புக்குரிய நண்பரானார். கிறிஸ்தவ வேதமான பைபிளைச் சிறந்த முறையில் மொழிபெயர்த்துக் கொடுத்தார். சிறந்த மொழி பெயர்ப்பாளராகவும், நூலாசிரியராகவும், பிரசங்கியாராகவும் விளங்கிய நாவலர் பெருமான் வசன நடை கைவந்த வல்லாளன் எனப்போற்றப்பட்டார்.

அச்சுக்கூடம் வாங்குவதற்காகச் சென்னைக்குச் சென்ற நாவலருக்குத் திருவாவடுதுறை ஆதீனம் நாவலர் பட்டம் வழங்கியது. அப்பட்டத்துடன் பருத்தித்துறை இறங்குதுறையில் வந்திறங்கிய நாவலர் பெருமானை வரவேற்பதற்கு யாழ்ப்பாணத்துப் பிரமுகர்கள் சென்றனர். தமது அன்பையும் ஆராமையையும் காட்டுவதற்காக அவரை ஐந்தாங்குரவர் எனக்கூறவும் நாவலர் பெருமானுக்கு வந்தது கோபம். கண்கள் சிவந்து சமயகுரவர்களுடைய அடிப்பொடிக்குக் கூடப் பெறுமதியற்ற என்னை அவ்வாறு அழைக்க வேண்டாமென ஆத்திரத்துடன் கூறினார். அவர் புகழ்ச்சிக்கு அப்பாற்பட்டவர்.

நாவலர் பெருமான் ஒரு சாதனையாளன், சரித்திரநாயகன். இன்று நாம் பெருமையுடன் காணுகின்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தோற்றம் நாவலர் பெருமான் போட்ட அத்திபாரம் சேர்பொன் இராமநாதன் துரையைச் சட்டசபைக்கு அனுப்பிய பெருமை நாவலரையே சாரும். சேர் பொன். இராமநாதன், சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனார் சைவவித்தியாவிருத்திச் சங்க மனேஜர் சு.இராசரத்தினம் இவர்களின் அரும் பெரும் சேவை நமக்குக் கிடைக்கச் செய்யத் தூண்டியவர் நாவலர் பெருமான்.

செய்யுள் நூல்களை வசனவடிவமைத்தமை, பிரசங்கம் செய்து மக்கள் மனதில் சமய நம்பிக்கையை ஊட்டியமை, பாடசாலைகளைத் தாபித்தமை, அச்சியந்திரங்கள் அமைத்து நூல்களை வெளியிட்டனர். யாழ்ப்பாணக் கலாசாரம், கந்தபுராண கலாசாரம் எனக் கொண்டாடச் செய்தமை என்றெல்லாம் அவரின் சேவைகளை வரிசைப்படுத்தலாம். நமது சமய வாழ்வு நாவலர் பெருமான் காட்டிய வாழ்வு நாம்காணும் பாடசாலைகள் அவரின் சின்னங்கள். எத்தனை நூற்றாண்டு கழிந்தாலும் நாவலர் பெருமானின் நினைவு நம்மைவிட்டு நீங்காது.


**நாவலரைப் போற்றிடுவோம்!**

அந்நியர் ஆட்சியில் அடிமை நிலையினில்
அழிவுறு விதமாய் இருந்த சூழலில்
நந்தமிழ் மொழியொடு நற்பெருஞ் சிவநெறி
நன்னிலை பெறவே நிகரிலாப் பணியாய்
முந்தைய நிலையதும் மலர்ச்சி கண்டிட
முயன்று பலவித வழிகளில் மீட்சி
தந்திடத் தொண்டுகள் ஆற்றிய ஆறுமுக
நாவலர் பெருமானைப் போற்றுதல் செய்வோம்!

ப.மகேந்திரதாசன்,
நாயன்மார்க்கட்டு.

யாழ்ப்பாணம் செய்த மாதவப் பெரியார் அவர். தியாக சீலர் இவ்வுலகில் ஐம்பத்தாறு ஆண்டுகள் பதினொரு மாதங்கள் பதினாறு நாள்களே வாழ்ந்த நாவலர் பெருமான் ஆற்றிய சேவை நன்றி பாராட்டப்படவேண்டியவை.

ஏனிந்த வேகம்? ஏனிந்த அவசரம்? ஏனிந்தச் சாதனை இவற்றை எண்ணி இறைவனின் திருவிளையாடலை வியக்க வேண்டும். தூயபிரமசரியவிரதம் பூண்டு திரிகரண சுத்தியுடன் கடமைகள் ஆற்றிய நாவலர் பெருமான் பிறந்திருக்கா விட்டால் நமது கதி என்ன? சமய வாழ்வு, சமூக வாழ்வு இரண்டிலுமே அவர் அக்கறை கொண்டு உழைத்தார் என்பதை அவரது கஞ்சித்தொட்டித் தருமம் எடுத்துக் காட்டுகின்றது. நாம் அவருக்குச் செய்ய வேண்டிய தொண்டு அவரது ஞான பரம்பரையை மேலும் வளர்த்து அவரது இலட்சியங்களை இயன்றவரையிலாவது கடைப்பிடித்து வாழ்வதேயாகும்.



**பண்டிதை திருமதி பொன் பாக்கியம், சுழிபுரம்.**

# ராஜபக்ஷ குடும்பம் மீது அவதூறுப் பிரசாரம்: முடிந்தால் ஆதாரத்துடன் நிரூபித்துக் காட்டுக

## சவால் விடுகிறது அரச தரப்பு

கொழும்பு, டிசெ.8

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பம் அரச சொத்துக்களை சூரையாடுகிறது என அவதூறு பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள எதிர்க்கட்சிகள் முடிந்தால் இவற்றை ஆதாரங்களுடன் நிரூபிக்க வேண்டும் என அரசுசவால் விட்டுள்ளது.

கொழும்பில் கடந்த சனியன்று இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தகவல் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா இந்தச் சவாலை விடுத்தார்.

லங்கா வைத்தியசாலையின் தலைவராக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ஊதியம் பெறாமல் பணிபுரிகிறார் எனக் குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ராஜபக்ஷ குடும்பம் அரச காணிகள், வர்த்தக நிறுவனங்கள், அப்பலோ வைத்தியசாலை போன்றவற்றை வாங்குகிறது என எதிர்க்கட்சிகள் அவதூறுப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவை.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்துவதற்கு எதிராக உயர்நீதிமன்றம் தடை விதித்த பின்னர் அப்பலோ வைத்தியசாலை இயல்பாகவே அரச உடைமையாகியது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் உரிமையாளர் கூட்டுத்தாபன நிதியிலிருந்தே அப்பலோ வைத்தியசாலையை உருவாக்கியிருந்தார்.

உயர் நீதிமன்றத்தின் உத்தரவு காரணமாக இயல்பாகவே அப்பலோ வைத்தியசாலையின் உரிமை அவரிடமிருந்து விடுபடும் நிலைமை உருவாகியது.

அப்பலோ வைத்தியசாலைக்கு லங்கா வைத்தியசாலை எனப் பெயரிட்டு புதிய நிர்வாகக் குழுவை நியமித்தவேளை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைவராக நியமிக்கப்பட்டார்.

இதற்காக அவர் சம்பளத்தையோ, வேறு சலுகைகளையோ பெறவில்லை. இது கௌரவ பதவி.எதிர்க்கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலில் அரசியல் இலாபம் சம்பாதிப்பதற்காக ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு எதிராக அவதூறு பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளன - என்றார். (அ-சி)

# அமைச்சர்கள் பலரை இழுக்க எதிரணிக் கூட்டமைப்பு முயற்சி

## ஐ.தே.கவின் செயலர் அத்தநாயக்க தகவல்

கொழும்பு,டிசெ.8

அரசில் உள்ள அமைச்சர்கள் பலரை ஐக்கிய தேசியக் கூட்டமைப்புப் பக்கம் இழுத்து இணைத்துக்கொள்வதற்காக அக்கூட்டமைப்பு தீவிர முயற்சியில் ஈடுபட்டுவருகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியும் அக்கட்சியின் பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுத் தகவல் வெளியிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

எமது கூட்டமைப்பு நாளுக்கு நாள் வலிமையடைந்துகொண்டு வருகின்றது. எமது பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால், ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைப் பயன்படுத்தி அரசு பொன்சேகாவின் வெற்றியைத் தடுக்க முயற்சி செய்கின்றது.

அரசு இப்போதே தேர்தல் வன்முறையில் ஈடுபடத் தொடங்கியுள்ளது.

**4 சர்வதேச கண்காணிப்பாளர் குழுக்கள்**

தேர்தல் நடவடிக்கையைக் கண் காணிக்க சர்வதேசக் கண்காணிப்பாளர்களைக் கொண்ட நான்கு குழுக்கள் அழைக்கப்பட்டிருக்கின்றன என்று தேர்தல் ஆணையாளர் எம்மிடம் கூறியுள்ளார்.

அரசின் தேர்தல் வன்முறைகளைத் தடுத்து நிறுத்த பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எமது வெற்றி உறுதிசெய்யப்பட்டுள்ளதால்தான் அரசு தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றது. இந்த வெற்றியை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் எமது கூட்டமைப்பில் பல அமைச்சர்கள் இணைந்து கொள்வர். இதற்கான முயற்சியில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸார் ஆகியோர் அரசின் பிழையான உத்தரவை ஏற்றுச் செயற்படக்கூடாது. அவர்கள் ஜனநாயகத்தை நிலைநாட்ட உதவ வேண்டும் - என்றார். (அ-சி)

# தவறவிடப்பட்ட பொதிகளைப் பெறலாம்

யாழ்ப்பாணம், டிசெ.8

நலன்புரி நிலையங்களில் இருந்து வடமராட்சி வடக்கு, பருத்தித்துறைப் பிரதேச செயலகத்துக்கு அழைத்துவரப்பட்டவர்களால் தவறவிடப்பட்ட பொதிகள் மேற்படி பிரதேச செயலகத்தில் கிடைக்கப்பெற்றுள்ளதாக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

தவறவிடப்பட்ட பொதிக்குரியவர்கள் அவற்றிற்குரிய ஆதாரங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (50-201)


உ
சிவமயம்



கடையிற்சுவாமிகள் குருவார அன்னசத்திர சிவன் ஆலயம்
முக்கிய அறிவித்தல்

இல.218 (204), நாவலர் வீதியில் அமைந்துள்ள கடையிற் சுவாமிகள் குருவார அன்னசத்திரசிவன் ஆலய காணி ஒரு தருமசாதன நம்பிக்கைச் சொத்து ஆகும். அக் காணியில் 12 பரப்பைக் குத்தகையாக எடுத்தவர்கள் தற்போது கோயில் ஆதனத்தை விற்பதற்கும் உரிமை மாற்றம் செய்வதற்கும் முற்படுகிறார்கள்.

எனவே கோயில் ஆதனத்தை நீதிமன்ற முறையான கட்டளையின்றிக் கொள்வனவு செய்து ஏமாற வேண்டாமென்றும் அவர்களின் மோசடியான செயல்களுக்கு உடந்தையாக இருக்கவேண்டாமென்றும் ஆலய தர்மகர்த்தா சபையினர் வேண்டிக்கொள்கிறார்கள்.

இல.218(204),
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (92936)
சோ.முத்துராசா
தர்மகர்த்தா.

மக்கள்சபைச் செயலாளர் பதவிக்குரிய
கருத்திட்டம் தயாரிக்கும்
வழிகாட்டல் கருத்தரங்கு
துறைசார் நிபுணத்துவம் வாய்ந்தவரால் நடத்தப்படவுள்ளது.
கட்டணம் 200/-
கருத்திட்ட அறிக்கை இலவசமாக வழங்கப்படும்
09.12.2009 புதன்கிழமை பி.ப. 3மணி.
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (92807)

வீடு வளவு விற்பனைக்கு
சுண்டிக்குளி விதானையார் வீதியில் 3பரப்புக் காணியுடன் கூடிய வீடும், சுண்டிக்குளி குருசோ வீதியில் 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடும், யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் வீதியில் 2 பரப்புக் காணியுடன் கூடிய மாடி வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: S.S.நாதன்,
இல. 16/3, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
T.P : 0776146434, 0213008577 (92932)

காணி விற்பனைக்கு
வடலியடைப்பு அரசடி வாசிகசாலைக்கு அருகில் சித்தங்கேணி, பண்டத்தரிப்பு பிரதான வீதியில் கிணற்றுடன் 4½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776404330 (பவானி) (92926)

INVITATION
Carols and Chimes
by
The Choirs of Uduvil girls' College
At the Jubilee Hall
On
December 8, 2009, 4.00 p.m.
Principal, Staff & Students.
(சி/562993)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...

**01.01.1986**

★ இனப்பிரச்சினைக்கு விரைவில் அர்த்தமுள்ள தீர்வொன்றைக் காணுமாறு இந்திய அரசு இலங்கை அரசை வலியுறுதியுள்ளது.

★ இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளியினருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்க வற்புறுத்துமாறு இ.தொ.கா. தலைவர் எஸ்.தொண்டமான் இந்தியப் பிரதமரிடம் கோருவார்.

★ இலங்கையில் தமிழர்கள் படுகொல்ல குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.கவலை தெரிவிப்பு.

**02.01.1986**

★ இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக இந்தியப் பிரதமருடன் பேச எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ தலைமையில் தூதுக்குழு இந்தியா செல்லும்.

★ சர்வதேச நிர்ப்பந்தம் தாங்க முடியாமல் தமக்கு மீண்டும் குடியுரிமை வழங்கியுள்ளது என ஸ்ரீ மாவோ தெரிவிப்பு.

★ பாதுகாப்புப் படையினர் சில சந்தர்ப்பங்களில் தவறிழைத்துள்ளதைத் தாம் ஒப்புக்கொள்வதாக முப்படைகளின் கூட்டுத்தளபதி மேஜர் ஜெனரல் சிறில் ரணதுங்க ஒப்புக்கொள்கிறார்.

★ காலஞ்சென்ற முன்னாள் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க, திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆகியோரிடமிருந்து பறிக்கப்பட்ட குடியுரிமை மீண்டும் வழங்கப்பட்டது.

**03.01.1986**

★ வடக்கு,கிழக்கில் நிகழும் துப்பாக்கிச் சூட்டு மரணங்கள் குறித்து விசாரணை நடத்துவது அவசரகாலச் சட்டத்தின் 55 ஆவது பிரிவின் கீழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

★ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டியது அவசியம் என ஸ்ரீமாவோ தெரிவிப்பு.

**04.01.1986**

★ வடக்கு கிழக்கு இணைந்த மாநில சுயாட்சி குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்த அரசு திட்டம்

டிசெம்பர் மாதத்தில் வடபகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறித்து யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு யாழ்.நகரில் வைத்து விசாரணை.

**05.01.1986**

★ கண்காணிப்புக் குழுவின் விசாரணை ஆரம்பமாகவிருந்த சமயம் யாழ்.நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூடு, குண்டு வெடிப்பில் 4 பேர் பலி.

★ ஆயுதப் படையினர் ஹெலிகொப்டரிலிருந்து சுட்டதைத் தான் நேரில் கண்டதாகக் கண்காணிப்புக்குழு உறுப்பினர் தெரிவிப்பு.

★ யாழ்.நகர் சம்பவங்களுக்கு தீவிரவாதிகளின் நடவடிக்கையே காரணம் என அரசு தெரிவிப்பு.

**06.01.1986**

★ தரை, ஆகாயத் தாக்குதல்களால் யாழ்.நகர் கொலைக்களமானது. எட்டுப்பேர் மரணம். அவர்களில் மூவர் சுங்க அதிகாரிகள்.




★இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை ஜனாதிபதிக்கு இந்திய அரசு இறுதி நிபந்தனை விதிக்க வேண்டுமென டாக்டர் சுப்பிரமணிய சுவாமி வலியுறுத்து.

**07.01.1986**

★ வவுனியாவில் கண்ணி வெடியில் பதினொரு படைவீரர்கள் மாண்டனர்.

★ தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் தீவிரவாத அமைப்பினரும் தங்கள் தேவை என்னவென்று திட்டவட்டமாகக் கூறுகிறார்களில்லை என தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத் முதலி வெளிநாட்டு ராஜதந்திரிகள் மத்தியில் தெரிவிப்பு.

★ பலாலிக்கு அரசு கூடுதல் இராணுவத்தினரை அனுப்பி வைத்தது.

**08.01.1986**

★ வடக்கு கிழக்கு இணைந்த தமிழ் மொழி மாநிலம் அமைக்கப்படுவதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென த.வி.கூ.செயலாளர் அ.அமிர்தலிங்கம் கருத்து வெளியிட்டார்.

★ பொது மக்களிடம் இரத்ததானம் கோரி யாழ்ப்பாணத்தில் சுவரொட்டிகள்.

★ வடக்கு கிழக்கு இணைப்பு யோசனையை அரசு முழுமூச்சாக எதிர்ப்பதாக ஜனாதிபதி ஜே.ஆர்.தெரிவிப்பு.

**09.01.1986**

★ யாழ்.நகரின் முக்கிய வீதிகளிலுள்ள உயர்ந்த மரங்களை குறிப்பிட்ட காலத்துக்குள் வெட்டி அகற்றிவிடுமாறு பாதுகாப்பு அமைச்சு யாழ்.மாநகர சபைக்கு உத்தரவு.

★ தமிழ்ப் பகுதிகளில் துப்பாக்கி பொருத்தப்பட்ட ஹெலிக்கொப்டர்களைச் செலுத்த பாகிஸ்தான் விமானிகள் அமர்த்தப்பட்டுள்ளதாக த.வி.கூ. செயலதிபர் குற்றச்சாட்டு.

★ ஆஸ்திரேலியா தேயிலை இறக்குமதி நிறுவனமொன்று இலங்கைத் தேயிலை இறக்குமதியை இடைநிறுத்தியுள்ளது.

★ இந்தியா இலங்கை அரசுக்கு நெருக்குதல் கொடுத்ததாலேயே சிறிமாவோக்கு இலங்கை அரசு மீண்டும் குடியுரிமை வழங்கியது என்கிறது இந்திய ஆங்கில நாளிதழ் 'இந்து'.

**10.01.1986**

★ ஆயுதப் படையினர் நடத்தும் சித்திரவதை, துன்புறுத்தல்களை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசுக்குச் சர்வதேச மன்னிப்புச்சபை இரண்டாவது தடவையாக அவசர வேண்டுகோள்.

★ இந்தியா உதவினால் மட்டுமே இலங்கையில் இடம்பெறும் கொலைகளுக்கு முற்றுப்புள்ளிவைக்க இயலுமென அமைச்சர் தொண்டமான் இந்தியாவில் வைத்து தெரிவிப்பு.

★ இனப்பிரச்சினைக்குத் தீர்வு குறித்து கூட்டணியின் மாற்றுயோசனைக்கு இலங்கை அரசு தனது பதிலை இந்தியாவுக்கு அனுப்பி வைக்கும் என அமைச்சர் அத்துலத் முதலி தெரிவிப்பு.

**11.01.1986**

★ மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் பட்டினி அபாயத்தை எதிர்நோக்குகின்றனர்.

★ தமது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர் பதவியிலிருந்து பேராசிரியர் கா.சிவத்தம்பியும் க.சிவபாலனும் விலகிக்கொண்டனர்.

**12.01.1986**

★ ஆயுதப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் காயமுற்றுச் சிகிச்சைபெற்று வந்த யாழ்.சுங்க உதவிக் கலெக்டர் செ.கணேஸ் மரணம்.

★ தொண்டா- லலித்- டிக்ஸிற் ஆகியோர் இனப்பிரச்சினைத் தீர்வு, இந்தியத் தமிழர்களின் குடியுரிமை தொடர்பாக முத்தரப்புப் பேச்சுவார்த்தை.

**13.01.1986**

★ இலங்கை அரசுபடைகளுடன் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையிலிருந்து தாம் விலகிக்கொள்வதாக ஈழம் தேசிய விடுதலை முன்னணி தெரிவிப்பு.

★ 4 லட்சம் மலையகத் தமிழர்களுக்கு இலங்கை குடியுரிமை வழங்குவதென அமைச்சர்கள் தொண்டமான் மற்றும் லலித் அத்துலத் முதலிக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டது.

**14.01.1986**

★ சர்வதேச யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவொன்றை உடன்நியமிப்பது இலங்கை அரசின் பொறுப்பாகும் என சென்னையில் வைத்து த.வி.கூட்டணியின் செயலாளர் அ.அமிர்தலிங்கம் தெரிவிப்பு.

★ ஆயுதப் படையினரின் முகாமிலிருந்து துப்பாக்கிச்சூடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றதால் [illegible] இரண்டாவது நாளாகவும் பதற்றம் நீடிப்பு.

# பண்ணைப் பாலம் விரைவில் புனரமைப்பு; அச்சுவேலி தொழிற்பேட்டையும் செயற்படும்

## ஊடகவியலாளர் மாநாட்டில் ஆளுநர் அறிவிப்பு

யாழ்ப்பாணத்துக்கும் தீவகத்துக்கும் இடையே பிரதான போக்குவரத்து மார்க்கமாக உள்ள பண்ணைப் பாலம் மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதனைத் துரித கதியில் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புனரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பமாகும்.

அத்துடன் அச்சுவேலியில் அமைந்துள்ள கைத்தொழில்பேட்டையும் அடுத்த வருடத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி. நேற்றுக் காலை யாழ்.செயலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

புதுமாத்தளன் பகுதிவரை மக்கள் அரசாங்கத்தின் மனிதாபிமான நடவடிக்கைகள் மூலம் மீட்கப்பட்டு ஆறு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் பாரிய பல பிரயத்தனங்களின் மூலம் மக்களை மீளவும் குடியமர்த்துவதற்காக நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதுடன் மேலும் பல பிரச்சினைகளை நீக்கி அரசு மீளக் குடியமர்த்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்காக அரசு 25 பாரிய நிலக் கண்ணி வெடிகளை அகற்றும் இயந்திரங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது.

இந்த நோக்கத்திற்காக இலங்கை இராணுவத்தின் 800 எந்திரவியற் படையணியினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்நிலக்கண்ணி வெடிகளை முற்றாக அழிக்கும் நோக்கில் 1500 படையணியினர் வரை அடுத்த வருடத்திற்குள் அதிகரிப்பதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது.

### மீளக்குடியமர்த்தப்படும் குடும்பங்களுக்கான வசதிகள்

*ஒவ்வொரு மீளக்குடியமர்த்தப்படும் குடும்பங்களுக்கான அடிப்படைத் தேவைக்காக 5ஆயிரம் ரூபா வழங்கல்.

*கிராமசேவகரூடாக ஒவ்வொரு மீளக் குடியமரும் குடும்பத் தலைவருக்கும் வங்கியில் 45 ஆயிரம் ரூபா வைப்பிலிடப்படும்.

*முற்றாகச் சேதமடைந்த வீடுகளுக்கான புனர்நிர்மாணத்திற்காக 3 லட்சத்து 25ஆயிரம் ரூபா உதவு தொகையை வழங்குதல்.

*06 மாத காலத்திற்கான உலர் உணவு வழங்குதல்.

*தற்காலிக வீடு அமைப்பதற்கான 12-18 தகரங்கள் மற்றும் மரங்கள் வழங்குதல்.

*வீடு வேய்வதற்கான ஓலைகள் வழங்குதல்.

*வீடு கட்டுவதற்காக 10 சிமெந்துப் பைகள் வழங்குதல்.

*மலசல கூடக் கட்டுமான வசதிகள்.

*நுகர்வுப் பொருள்கள் மற்றும் உடுபுடைவைகள், பாய் மற்றும் மண்ணெண்ணெய் விளக்கு வழங்குதல்.

### எதிர்கால வாழ்வாதாரத்திற்கான வசதிகள்

விவசாயத்தை வாழ்வாதார தொழிலாகக் கொண்ட குடும்பங்களுக்கான வசதிகள்

*ஒரு ஏக்கருக்கு 2 புசல் வீதம் 4 ஏக்கர் வரைக்குமான விதை நெல் இலவசமாக வழங்குதல். தோட்டங்களில் பயிர்ச் செய்கைக்கான மண்வெட்டி மற்றும் உபகரணங்கள் வழங்குதல்.

*மானிய அடிப்படையில் உரவகைகள் 350 ரூபா படி வழங்குதல். விளை நிலங்களை பயன்பாட்டிற்கு உகந்த வகையில் தயார் பண்ணுவதற்காக 4 ஆயிரம் ரூபா உதவி

*பயிர்களை பாதுகாப்பதற்காக கம்பி வேலிகளை அமைப்பதற்கான உதவி வழங்கல்

*மேட்டுநிலப் பயிர்ச் செய்கைக்கான தரமான விதைகளைப் பெறுவதற்காக ஒவ்வோர் குடும்பத்திற்கும் 500 ரூபா வழங்குதல்.

*கௌபி, குரக்கன், பாசிப்பயறு போன்ற விதைகளை 5ஆயிரம் குடும்பங்களிற்கு வழங்குதல்.

*தென்னை நாற்று, பலாப்பழ விதைகள், வாழைக்கன்றுகள் மற்றும் ஏனைய பழ வகைக் கன்றுகளை வீட்டுத்தோட்டத்திற்காக இலவசமாக வழங்குதல்.

*10,500 விளைநிலங்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட பகுதியில் தயார் நிலையில் உள்ளன. இதற்காக 20,500 கிலோ கிராம் விதை நெல் வழங்கப்பட்டுள்ளது.

*4,200 குடும்பங்களுக்கு தானிய விதைகள் வழங்கப்பட்டுள்ளன.

*250 நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் கிருமிநாசினித் தெளிகருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**கால்நடை வளர்ப்பினைத் தொழிலாகக் கொண்ட குடும்பங்களிற்கான வசதிகளை வழங்குதல்.**

*20 கோழிக்குஞ்சுகளை குடும்பமொன்றிற்கு வழங்குதல்

*02 ஆடுகள் வழங்குதல்

கட்டாக்காலியான மாடுகளை இனங்கண்டு பிடித்து உரியவர்களிடம் வழங்குதல்

### மீன்பிடிக் குடும்பங்களுக்கான வசதிகள்

*180 கண்ணாடி இழைப்படகுகள், வலைகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்



*60 படகுகள், வலைகள் மற்றும் உபகரணங்கள் நன்னீர் மீன் பிடிக்காக வழங்கப்பட்டுள்ளன.

*வவுனியாவில் 475,000 மீன் குஞ்சுகள் ஆறு (06) குளங்களில் விடப்பட்டுள்ளன.

கடலட்டை, இறால், மற்றும் மட்டி வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### வாழ்வாதார வசதிகள்

மீளக்குடியமர்த்தப்படும் கிராமம் ஒவ்வொன்றிற்கும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்காக பின்வரும் சுய தொழில் வாய்ப்புகளை மேற்கொள்ள 75ஆயிரம் ரூபா இலகு கடன் வசதிகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

*02 நுகர்வுப் பண்டக் கடை அமைத்தல்

*02 தேனீர் கடை அமைத்தல்

*02 புத்தக மற்றும் காகிதாதிக் கடைகள் அமைத்தல்.

*02 மரக்கறி மற்றும் மீன் கடைகள் அமைத்தல்

*01 வாகன திருத்தும் கடை அமைத்தல்

*01 உபகரணக் கடை அமைத்தல்

*120 உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன

*250 நீர் இறைக்கும் இயந்திரங்கள் விவசாய அமைச்சினாலும்,

* 250 நீர் இறைக்கும் இயந்திரங்கள் சமுர்த்தி அதிகாரசபையினாலும் வழங்கப்பட்டுள்ளன.

### சுகாதார வசதிகள்

முழங்காவில் ஆதார வைத்தியசாலை, அடம்பன் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், திருக்கேதீஸ்வரம் சுகாதாரப் பிரிவு, கிளிநொச்சிப் பிரதேச வைத்தியசாலை, மல்லாவி ஆதார வைத்தியசாலை, நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலை, மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம்.

இவையாவும் மீள் நிர்மாணிக்கப்பட்டு சேவைகள் வழங்கப்படுகின்றன. நடமாடும் சுகாதார சேவை மற்றும் மலேரியாத் தடுப்புத் திட்டம் நடைமுறையில் உள்ளது. எதிர்வரும் 02ஆம் திகதி டிசெம்பர் மாதம் கிளிநொச்சியில் வைத்திசாலையின் வெளிநோயாளர் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

### குடி தண்ணீர்

மீளக்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்காக பழுதடைந்த கிணறுகளை அடையாளம் கண்டு அவற்றை துப்புரவு செய்து குளோறின் இட்டு குடிப்பதற்கு உகந்ததான நீராக மாற்றி மக்களுக்கு அரசு உதவுகின்றது.

### கல்வி

துணுக்காய்ப் பகுதியில் 06 பாடசாலைகளும் பூநகரிப் பகுதியில் 03 பாடசாலைகளும் மீளக்குடியமர்த்தப்பட்ட குடும்பங் கள் வாழும் பாடசாலைப் பிள்ளைகளுக்காக பாடசாலைகள் திருத்தி அமைக்கப்பட்டு மீளவும் திறக்கப்பட்டுள்ளன. இப்பாடசாலைகளுக்கு தளபாடங்கள், சங்கீத உபகரணங்கள் மற்றும் கணனிகள் வழங்கப்பட்டுள்ளன.

72 ஆசிரியர்கள் இப்பகுதியில் மீளவும் கற்பித்தல் கடமைகளை ஆரம்பித்துள்ளனர். 4ஆயிரம் பாடசாலை மாணவர்கள் தமது கல்வியை இப்பகுதியில் மீளவும் பெற்றுக் கொண்டுள்ளனர். மேலும் பாடசாலைச் சீருடைகள், பாடப்புத்தகங்கள் மற்றும் ஏனைய கல்வி உபகரணங்கள் யாவற்றையும் அரசு வழங்கியுள்ளது.

### ஏனைய வசதிகள்

•இலகு கடன் வசதிகள்

•மீளக்குடியமர்த்தப்பட்ட கிராமம் ஒவ்வொன்றிற்கும் 03 முச்சக்கர வண்டிகள்

•முழுமையான மின்சார வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

•உப தபால் அலுவலகங்களை ஸ்தாபித்தல்

•மக்கள் பயணிப்பதற்கு பேருந்து வசதிகள்

•பொருள்களைக் கொண்டுசெல்ல உழவு இயந்திர வசதிகள்

•ஏ9 பாதையிலுள்ள கட்டுப்பாடுகள் நீக்கம்

•பொதுமக்கள் பயணிப்பதற்கும் பொருள்கள் கொண்டு செல்லவும் தடைகள் நீக்கம்

•பொது மற்றும் அரச உத்தியோகத்தர்கள் பயணிப்பதற்கு இலகுபடுத்தப்பட்டுள்ளமை

•பார ஊர்திகள் பயணிப்பது இலகுபடுத்தப்பட்டுள்ளமை - என்றார் ஆளுநர். (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடைக்கும் வசதிகள், உபகரணங்களை ஒருசிலரே அனுபவிக்கும் கொடுமை...

## நெடுந்தீவு மீனவர்கள் தெரிவிக்கும் கவலை

கடல்வலய சட்டங்கள் தளர்த்தப்பட்டு இயல்புநிலை திரும்பிக்கொண்டிருக்கும் தற்போதைய சூழலில் நெடுந்தீவு மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிய அளவில் மாறியதாகத் தெரியவில்லை. வசதி படைத்த சிலரைத் தவிர ஏனைய மீனவர்கள் இன்னமும் கஷ்டநிலையிலேயே இருப்பதாகக் கூறப்படுகின்றது. அனேகர் இன்னமும் சொந்தத் தொழில் முயற்சிகளிலேயே ஈடுபட்டு வருகி றார்கள். அதுவும் கூட முடியாதநிலையே காணப்படுகின்றது.

சிறுதொழில்களைக் கொண்டு பெரிய முன்னேற்றத்தை நாங்கள் எப்படி எட்ட முடியும் என்ற ஏக்கமும் அனேக மீனவர்களிடம் இருக்கத்தான் செய்கிறது.

இரவு தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து மணல் துறையில் தமது அனுமதியைப் பெற்றுக் கொண்டு பி.ப 3 மணிக்குப் புறப்படும் மீனவர்கள் மறுநாள் காலை 6 மணிக்குப் பின்னரே மீண்டும் மணல்துறைக்கு வந்து வரவைப் பதிவு செய்துகொண்டு தமது துறைகளுக்குத் திரும்ப முடியும். இதில் உள்ள கஷ்டம் என்னவெனில் திடீர்திடீரென ஏற்படும் காலமாற்றங்களினால் ஏற்படும் சிக்கல்கள்.

### மழை, காற்று அதிகரித்தால்...

கடும்மழை, காற்று, கடல் கொந்தளிப்பு ஏற்படின் மீனவர்கள் உடன டியாக ஏதாவது ஒரு கரையை நோக்கிச் செல்ல வேண்டும். இந்த விதிமுறையினால் அப்படியெல்லாம் செயற்படமுடியாது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அண்மித்த கரையை நோக்கிச் சென்று இறங்கக்கூடியதாக அவர்களுக்கு அங்கீகாரம் தேவை. மேலும் தொழிலை முடித்துக் கொண்டும் திரும்பமுடியாத நிலையில் அவர்கள் கடலிலேயே தரித்து நிற்கும் பட்சத்தில் பிடித்த மீன்கள் பழுதடைந்துவிடும் சாத்தியங்களும் உண்டு.

வருடத்தின் பிற்பகுதியான வாடைக் காற்றுக் காலத்தில் நெடுந்தீவின் முக்கிய மீன்பிடி பிரதேசமாக வெல்லைப் பகுதி அமைகிறது. யுத்த நிலைக்கு முன்னர் இந்தக் காலங்களில் குடாநாட்டின் மயிலிட்டி, காங்கேசன்துறை, பருத்தித் துறை, நாகர்கோயில் பகுதிகளில் இருந்து பெருந்தொகையான மீனவர்கள் வெல்லைப் பகுதியில் வாடிகளை அமைத்துத் தங்கித் தொழில்புரிவது வழக்கம். போரில் அந்த நிலை அமிழ்ந்து போய் விட்டது. கூடிய அளவில் தொழில் கொள்ளமுடியும் என்பதால் நெடுந்தீவு மீனவர்கள் தற்சமயம் வெல்லைப் பகுதியில் தங்கித் தொழில் செய்ய ஆர்வம் கொண்டுள்ளனர். வெல்லையில் தங்கியிருந்து தொழில் செய்ய அனுமதி இன்மையால் ''வெல்லையும் கனவாகி விட்டது''.

### இந்திய மீனவர்களால் பிரச்சினை

ஆழ்கடல் தொழிலுக்கான அனுமதியும் கிடைக்கவில்லை. இதனால் எமது மீனவர்கள் நொந்து நூலாகிக் கொண்டிருக்க இந்திய மீனவர்கள் எமது பகுதிக்குள் பிரவேசித்து வளங்களை அள்ளிச் செல்வதுடன் வலைகளையும் அறுத்துச் சென்று விடுகிறார்கள். இந்திய காவற்படைக் கலங்கள் தமது மீனவர்கள் எமது கடற்பரப்பினுள் நுழைவதைத் தடுக்கும் முயற்சிகளை மேற்கொள்வதில்லை என்பதும் மீனவர்களின் குற்றச்சாட்டாக இருக்கிறது. இந்திய கடலோர காவற்படை தனது மீனவர்களை எல்லை மீறாது பார்த்துக் கொண்டால் இலங்கைக் கடற்படை தாக்கியதாகவோ அச்சுறுத்தியதாகவோ தமிழக அரசியல் வாதிகளின் மேடைப் பேச்சுக்களுக்கு இடமேயிருக்காது என்பதும் இங்குள்ளவர்களின் கருத்தாக இருக்கிறது. இப்போதும் கூட நெடுந்தீவின் கரையோரப் பகுதிகளை அண்டிய கடற் பரப்பில் இந்தியப் படகுகளின் நடமாட்டத்தைக் காணலாம் .

### சங்க முக்கியஸ்தர்கள் தமக்குள் பங்கிட்டனர்

ஒரு முக்கிய உற்பத்தித்துறை சார்ந்த சங்கம் ஒன்றிற்கு அந்தப் பிரதேசத்தின் உற்பத்தி அதிகரிப்புக்களைக் கருத்தில் கொண்டு அது சார்ந்த திணைக்களம் தேவையான உபகரணங்கள், உள்ளீடுகளைக் குறிப்பிட்ட சங்கத்திற்கு வழங்கியிருந்தது. சங்கத்தின் முக்கியஸ்தர்கள் கிடைத்தவற்றை முறைப்படி பகிர்ந்தளிக்காமல் தங்களுக்கும் தங்களைச் சார்ந்த சிலருடனும் கிடைத்தவற்றைப் பகிர்ந்து கொண்டதாக அறிய முடிந்தது. இது காற்றுவாக்கில் எழுந்த கதையல்ல. நேர்மையான அதிகாரி ஒருவர் வருத்தத்துடன் கூறிக் கவலைப்பட்ட ஒரு விடயம் இது.

மீனவர்களின் விவரங்கள் வாழ்க்கைத் தரம் போன்ற தரவுகளை அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கி அவர்கள் மூலம் கிடைக்கும் உதவிகளை உரிய முறையில் வழங்காது ஏற்கனவே உதவிகளைப் பெற்றுக்கொண்ட வசதிபடைத்த மீனவர்களுக்கே வழங்கப்படுவதாகவும் மிகவும் கஷ்டநிலையில் உள்ள மீனவர்களுக்கு இந்த உதவிகள் கிடைப்பதில்லை எனவும் மீனவர்கள் கூறுகின்றார்கள். கடற்தொழிலாளர் சங்கமும், சம்மேளனமும் உதவும் விடயத்தில் மனிதாபிமான உணர்வுடன் செயற்படவேண்டும் எனவும் கூறப்பட்டது.

### உதவிகளால் என்ன பயன்?

நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் கூலர் இயந்திரப்படகு ஒன்றை இலவசமாக வழங்கியுள்ளது. இந்தப் படகில் கிடைக்கும் இலாபத்தில் ஒரு பகுதியை சிறுவர்களின் நலனுக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதும் ஒரு கோரிக்கையாக இருந்தது. இதைவிட சங்கத்தில் குளிர் அறையும் இருப்பதாகக் கூறப்படுகிறது. இவை இருந்தும் என்ன பயன் என்கிறார்கள் மீனவர்கள்.

கடற்றொழிலாளர் சங்கம் மீன்களையும் கருவாடுகளையும் உள்ளூர் மீனவர்களிடம் இருந்து கொள்வனவு செய்து தென்பகுதிக்கு அனுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

மீனவர்களிடம் உள்ளூர் வியாபாரிகள் மிகவும் குறைந்த விலைக்கே மீன்களைக் கொள்வனவு செய்கிறார்கள். ஒரு தடவை தொழிலுக்குச் சென்று திரும்ப எரிபொருளுக்கு மட்டும் ரூபா 1500 வரை செலவிட வேண்டியுள்ளது. ஒரு வரையறைக்குள் மட்டுமே இப்போது தொழில் செய்ய முடியும். வியாபாரிகள் ரூபா 70 க்கே ஒரு கிலோ மீன் வாங்குகிறார்கள். மீன்பிடியாளர்களுக்குத் தொழிலில் எந்தவித இலாபமும் இல்லை. ஏதோ தொழில் செய்கின்றோம் என்ற பெயர்தான். சீவியத்துக்குக் கஷ்டம்தான். இலகு வேலைக்கான திட்டத்தில் இணைந்தால் கூட கொஞ்சம் கூடுதலாக ஏதும் கிடைக்குமோ என்னவோ என்ற ஆதங்கமும் அவர்களிடம் உண்டு. மக்களுக்கும் நியாயமான விலையில் தரமான மீன்களை வாங்கக்கூடிய வசதிகளையும் ஒரு கூட்டுறவுச் சங்கம் என்ற வகையில் அது ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

### கஷ்ட நஷ்டங்களைப் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும்

மீனவர்களது பிரச்சினைகளை மிகவும் தெளிவாக எடுத்துக்கூறி தீவின் எந்தப் பகுதியிலும் இருந்து தொழில் செய்யக் கூடியதான அனுமதிகளைப் பெறுவதிலும், கருவாடுகளை கொள்வனவு செய்து வெளியிடங்களுக்கு அனுப்பிவைக்கவும், வழங்கப்பட்ட படகை நல்லமுறையில் பயன்படுத்தவும், மீனவர்களின் கஷ்ட நஷ்டங்களைப் புரிந்துகொண்டு அதற்கு உகந்த வகையில் சங்கம் நடவடிக்கைகளைக் கையாளவேண்டும்.

### நன்றி

கடற்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகள் இங்கு மக்களுடன் சுமுகமாக உறவாடுகிறார்கள். அவர்களின் நிலைமைகளைப் புரிந்துகொண்டு செயற்படுகிறார்கள். எங்கள் பிரச்சினைகளை அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறினால் நிச்சயம் பயன் கிடைக்கும். மேலதிகாரிகளுடன் தொடர்புகொண்டு தீர்வு கிடைக்க உதவுவார்கள். கடற்றொழிலாளர் சங்கத்தின் ஸ்திரமான செயற்பாடுகள்தான் இப்போதுள்ள தேவையாகும். இது மீனவர்களின் கருத்து.


## தவறிவிட்டது

நாராயணசாமி ரவிவர்மன் ஆகிய எனது, காத்தார் சின்னகுளம் வீதி, அம்மன் கோயிலடி, அண்ணாநகர், வவுனியா எனும் முகவரி உடைய தே.அ. அட்டை (810270934v), சாரதி அனுமதிப் பத்திரம், வவுனியா வதிவிட விஷேட அடையாள அட்டை, மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் (Insurance / Tax) என்பன உள்ளடங்கிய கறுப்பு நிற பேர்ஸ் பணம் எதுவும் அற்ற நிலையில் இருபாலைச் சந்திக்கும் யாழ். வண்ணை வைத்தீஸ்வரா சந்திக்கும் இடைப்பட்ட பருத்தித்துறை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ், 62/16, ஸ்ரான்லிவீதி, யாழ் (ஸ்ரான்லி வீதி சம்பத் வங்கி எதிரில்) ஒப்ப டைத்து உதவுமாறு அல்லது 077-6623824, 0212224040, 0212224560 எனும் இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி/563001)



## கேள்வி அறிவித்தல்

**மின்பொறியியலாளர் (மத்திய மின் நிலையம்) - சுன்னாகம் அலுவலகத்துக்கு தேர்ச்சியற்ற தொழிலாளர்களின் சேவையை மனிதவலு நிறுவனங்கள் ஊடாக பெற்றுக்கொள்ளல்.**

*Obtaining the Service of* Unskilled Labourers *for Electrical Engineer (Central Power Station - Chunnakam)* through Man Power Agency

**கேள்வி இல. *NP/DGM/2009/48***

மேல் குறிப்பிடப்பட்ட சேவைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி (Tender) 2009.12.24 ஆம் திகதி பி.ப 2 மணிவரை இலங்கை மின்சாரசபை (வடமாகாணம்) மாகாண பெறுகைக் குழுத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வியாளர்கள், கேள்விப்பத்திரங்களை ரூபா 1000.00 (ஆயிரம்) க்கான கொடுத்தல் பத்திரத்தினை எமது அலுவலகத்தில் பெற்று பணத்தினை செலுத்துவதன் மூலம், அல்லது பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை, கொழும்பு என்ற பெயரில் பெறப்பட்ட வங்கிக்கட்டளையாகவோ சமர்ப்பித்து, இல: 500, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள பிரதிப் பொது முகாமையாளர் (வடமாகாணம்) அலுவலகத்தில் 2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி வரை வேலை நாள்களில் காலை 9 மணி-பி.ப 2.30 வரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் 24.04.2009 பி.ப.2 மணிக்கு பிரதிப் பொதுமுகாமையாளர் (வடக்கு), இலங்கை மின்சாரசபை, 500 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம். அலுவலகத்தில் திறக்கப்படும். அத்தருணம் கேள்வியாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்டவர் சமுகமளிக்கலாம்.

கேள்வியாளர்கள் இலங்கை மின்சாரசபையிலிருந்து பெறப்பட்ட கேள்விப் பத்திரங்களில் மாத்திரம் இணைப்பிரதிகளில் (Duplicate) பூர்த்திசெய்து, கடித உறையிலிட்டு, அதன் இடதுபக்க மேல் மூலையில் ''மின்பொறியியலாளர் (மத்திய மின் நிலையம்) - சுன்னாகம் அலுவலகத்துக்குதேர்ச்சியற்ற தொழி லாளர்களின் சேவையை மனித வலு நிறுவனங்கள் ஊடாக பெற்றுக்கொள்ளல்'' எனக் குறிப்பிட்டு மேற்குறித்த முகவரிக்கு 24.12.2009ஆம் திகதி பி.ப.2 மணிக்கு முன்னர் கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது இவ்வலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண் டும். இவ்வறிவித்தல் தொடர்பான மேலதிக விவரங்களை கீழ்க்குறிப்பிடப் பட்ட விலாசத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

தலைவர்
மாகாண பெறுகைக் குழு
(வடமாகாணம்)

மாகாண பெறுகைக் குழு(வடமாகாணம்),
பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை மின்சார சபை.
இல.500, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 021 222 2496, 021 222 3233
தொலை நகல்: 021 222 2497

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளிற்கு கை கொடுக்கும்''
(சி-563002)
இலங்கை மின்சாரசபை



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அதிபர்
திரு.வல்லிபுரம் கணேசமூர்த்தி
(SLPS-1)
யா/தொண்டைமானாறு
வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்

எமது பாடசாலையின் அதிபர் திரு.வல்லிபுரம் கணேசமூர்த்தி அவர்கள் 01.06.2004 அன்றிலிருந்து இலங்கை அதிபர் சேவை தரம் 1இற்கு பதவி உயர்வு பெற்றதையிட்டு நாம் மகிழ்வடைவதோடு மேலும் அவருடைய சேவை சிறப்புறவும் பல நலன்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழவும் இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

யா/தொண்டைமானாறு,
வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்,
தொண்டைமானாறு.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
பாடசாலை மேம்பாட்டுக்குழுவினர்,
பாடசாலை சமூகத்தினர்.

(சி/ 62996)



## க.பொ.த (உ/த) பரீட்சையினை மேற்கொண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களே உங்களிற்கு

இலங்கையில் 45 வருடகாலம் மக்களிற்கு காப்புறுதிச் சேவையினை மேற்கொண்டுவரும் பிரபல அரச காப்புறுதி நிறுவனமான இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மாபெரும் வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சி நெறியினை வழங்கவுள்ளது.

* 06 மாதகாலப் பயிற்சிநெறி.
* பயிற்சி நெறிமுடிவில் அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
* பயிற்சி நெறியினை பூரணமாக்கும் மாணவர்களுக்கு , பல்கலைக்கழகப்படிப்புடன் கூடிய பகுதிநேர வேலைவாய்ப்பு

எனப் பல நன்மைகளை வழங்கக் காத்திருக்கின்றது.

(விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன)


மேற்படிப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தங்களின் சுயவிபரக்கோவையினை

**30.12.2009 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.**
**விண்ணப்ப முகவரி: விற்பனை முகாமையாளர் - ஆயுள்**
**இலங்கைக் காப்புறுதிக் கூட்டுதாபனம் வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.**

குறிப்பு :- க.பொ.உ.த பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும், மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம். உயர்பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடுபிடிக்கிறது அடிலெய்ட் டெஸ்ட்: கிறிஸ்கெய்ல் அதிரடிச் சதம்!



அடிலெய்ட், டிசெ.8

ஆஸ்திரேலியாவுடனான டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில், நேற்றையஆட்ட நேரமுடிவின்போது 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 284 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி அடிலெய்டில் நடந்து வருகிறது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, முதல் இன்னிங்ஸில், 451 ஓட்டங்களையும், ஆஸ்திரேலிய அணி 439 ஓட்டங்களையும் பெற்றிருந்தன.

பின்னர் நேற்றுமுன்தினம் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய ஆஸ்திரேலிய அணி விக்கெட் இழ்ப்பின்றி 23 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கெய்ல் 12 ஓட்டங்களுடனும், பாரத் 10 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்த நிலையில் நேற்று தனது இன் னிங்ஸைத் தொடர்ந்த மேற்கிந்தியத் தீவு கள் அணி, நேற்று நான்காம் நாள் ஆட்ட நேர முடிவின்போது, கிறிஸ்கெய்லின் அதிரடியால் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 284 ஓட்டங்களைப் பெற்று ஓரளவு நல்ல நிலைக்குச் சென்றது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் துடுப்பாட்டத்தில் பரத் (17), சர்வான் (7), சந்திரபோல் (27), நாஸ் (24), பிராவோ (22), சமி (10), பீன் (5) ஆகியோர் குறுகிய ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றனர். ரம்டின் எந்த வித ஓட்டத்தையும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

இறுதிவரை களத்தில் ராம்போல் எந்த வித ஓட்டத்தையும் பெறாமலும் கிறிஸ் கெய்ல் 155 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இவர் 271 பந்துகளை எதிர்கொண்டு இந்த ஓட்டங்களை [illegible]றார். இவரது ஓட்ட எண்ணிக்கையில் [illegible] பவுண்டரிகளும் ஒரு சிக்ஸரும் அடங்கும்.

ஆஸ்திரேலிய அணி சார்பாக பந்துவீச்சில் ஜோன்ஷன் 4 விக்கெட்டுக்களையும், போலிஞ்சர் 2 விக்கெட்டுகளையும், ஷேன் வோட்ஷன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தற்போதைய நிலையின்படி மேற்கிந்தியத் தீவுகள் அணி, ஆஸ்திரேலிய அணியை விட 296 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

இன்று ஆட்டத்தின் ஐந்தாம் நாள் ஆகும்.




## நடுவரின் மோசமான தீர்ப்புகளால் எமக்குப் படுதோல்வி - சங்ககார



''இந்தியாவுடனான டெஸ்ட் போட்டிகளின்போது எமக்கு வழங்கப்பட்ட மோசமான தீர்ப்புகளால் நாம் படுதோல்வியடைந்து விட்டோம்'' - இலங்கை அணியின் தலைவர் குமார் சங்கக்கரா கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''கடைசி இரு டெஸ்ட் போட்டிகளிலும் இந்திய அணி துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு இரண்டிலும் எங்களை வீழ்த்தி விட்டது.''

''மும்பையில் நடந்த டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் நாங்கள் 400 ஓட்டங்களை நெருங்கினாலும், ஷேவாக்கின் அதிரடி இன்னிங்ஸ், போட்டியை எங்களிடமிருந்து பறித்து இந்தியாவுக்குச் சாதகமாகத் திருப்பிவிட்டது. எங்களது வீரர்கள் இந்தத் தொடர் முழுவதும் கடுமையாகப் போராடினார்கள். ஆனால் அது போதுமானதாக இருக்கவில்லை.

''நடுவர்களின் தீர்ப்பில் சந்தேகம் இருந்தால் அதனை எதிர்த்து மேல்முறையீடு செய்யும் முறை இருக்க வேண்டும் என்பதற்கு இந்த தொடர் நல்ல உதாரணமாகும். நடுவரின் மோசமான தீர்ப்பு காரணமாக நாங்கள் 500 ஓட்டங்களுக்கு மேல் இழந்தோம். நிறைய விக்கெட்டுக ளையும் பறிகொடுத்தோம்.

இதுபோன்ற சமயங்களில் எப்போதும் அணிக்கு நெருக்கடி தான் ஏற்படும். நடுவர்களின் தீர்ப்பை ஆட்சேபிக்கும் முறையை ஒரு கூடுதல் சுமையாகக் கருதுகிறார்கள். ஆனால், அந்தக் கூடுதல் சுமை இல்லாமையால் நாங்கள் கடைசி இரு டெஸ்டிலும் நிறைய ஓட்டங்களை இழந்து விட்டோம்'' - என்றார்.

## நீண்ட காலக் கனவு நிறைவேறிவிட்டது இந்திய அணி கப்டன் டோனி பெருமிதம்



டெஸ்ட் தரவரிசையில் உலகின் முதலாது அணிஎன்ற அந்தஸ்தைப் பெற்றதன் மூலம் தனது கனவு நனவாகி விட்டது எனஇந்திய அணியின் தலைவர் டோனி கூறியுள்ளார்.

இலங்கை அணியுடனான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றிய பின்னர் வெற்றி குறித்துக் கூறும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''இந்திய அணி தரவரிசையில் முதல் இடத்தைப் பித்திருப்பதன் மூலம் எங்களது கனவு நனவாகி இருக்கிறது. தரவரிசையைப் பற்றி அதிகம் யோசிக்காமல், ஒவ்வொரு ஆட்டத்திலும் சிறப்பாக ஆடவேண்டும் என்பதுதான் எங்களது நோக்கம். நன்றாக ஆடி வெற்றி பெற்றால் தரவரிசை தானாக வந்து சேரும். ஆனால், இந்த முதல் இடம் திடீரென கிடைத்து விடவில்லை.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக தொடர்ந்து சீரான ஆட்டத்தை வெளிப்படுத்தியமைக்குப் பரிசாகவே இந்தப் பெறுபேறு எமக்குக் கிடைத்தது. இது வீரர்களின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றியாகும்.

நேற்றுமுன்தினம் இலங்கை அணி ஆடவந்த சிறிதுநேரத்திலேயே சங்கக்காராவின் விக்கெட்டை விரைவாக வீழ்த்தியமையானது முக்கியமானதாக அமைந்தது. அவரது விக்கெட்டைப் பறிப்பதற்கு நாங்கள் காத்திருந்தோம். இந்த டெஸ்ட்டைப் பொறுத்தவரை காலை நேரங்களில் வேகப் பந்து வீச்சு மற்றும் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு ஆடுகளம் உதவிகரமாக இருந்தது. சங்கக்காரா ஆட்டம் இழந்ததும், உணவு இடைவேளைக்கு முன்பாக முதல் பகுதியி லேயே ஆட்டத்தை முடித்து விடலாம் என்று நம்பினோம். அதன்படியே நடந்தது.

நாங்கள் சில குறுகிய கால இலக்குக ளையும், நீண்ட கால இலக்குகளையும் வைத்து செயற்பட்டோம்.

போட்டிக்கு சிறந்த முறையில் தயார் ஆகுதல், உடல் தகுதியுடன் இருப்பது குறுகிய கால இலக்காகும். நீண்ட கால இலக்கு தரவரிசையில் முதலிடத்தைப் பிடிப்பது என்பது. அதனை அடைந்தும் விட்டோம்.

பயிற்சியாளர் கேரி கிர்ஸ்டன் (தென்னாபிரிக்கா) பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். நான் பார்த்த சிறந்த பயிற்சியாளர்களில் அவரும் ஒருவர்'' - இவ்வாறு டோனி கூறினார்.

# காலநிலை மாற்றம் சம்பந்தமான மாநாடு டென்மார்க்கில் ஆரம்பம்

## 192 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்பு

கொப்பன்ஹேகன், டிச. 08

டென்மார்க்கின் தலைநகரான கொப்பன்ஹேகனில் காலநிலை மாற்றம் தொடர்பான உச்சிமாநாடு நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியது. இதில் 192 நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றியுள்ளார்கள்.

உலகில் நடைபெறும் அதி முக்கியமான உச்சி மாநாடு இதுவாகும் என பல விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளார்கள். இந்த உச்சிமாநாட்டையொட்டி, பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இரு வாரங்கள் நீடிக்கும் இந்த மாநாட்டில் 15 ஆயிரம் பிரதிநிதிகளும், 100 உலகத் தலைவர்களும் பங்குபற்றுகிறார்கள். மாநாட்டின் ஆரம்பத்தில் காலநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா. பிரதம அதிகாரி வோ டி போர் உரையாற்றினார்.

இதுகுறித்து பி.பி.ஸிக்கு இவர் கருத்துத் தெரிவிக்கையில், ''பச்சைவாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கு தற்போது அநேக நாடுகள் முன்வந்துள்ளன. அத்துடன் இதற்கான வாக்குறுதிகளையும் வழங்கியுள்ளன'' என்றார்.

''17 வருடகாலமாக அநேக நாடுகளில் காலநிலை மாற்றம் தொடர்பான பேச்சுகள் நடைபெற்றுள்ளன. அநேக வாக்குறுதிகளும் அளிக்கப்பட்டுள்ளன. எனினும், கடைப்பிடிக்கப்படவில்லை. இந்நிலை மீண்டும் வந்துவிடக்கூடாது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''வறிய நாடுகளின் துப்புரவான தொழில்நுட்பத்துக்கு நிதியுதவி வழங்கப்படும். இது தொடர்பான பேச்சுகளும் மேற்கொள்ளப்படும். 2050 ஆம் ஆண்டளவில் கார்பனோசைட் (கரியமிலவாயு) கழிவுகள் பெருமளவில் தடைசெய்யப்பட்டுவிடும்'' என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

''இறுதியாக தென்னாபிரிக்கா பெருமளவில் கழிவுகளை தடைசெய்ய முன்வந்துள்ளது. அடுத்த 10 வருட காலத்துக்குள் மூன்றில் ஒரு பங்கு கழிவுகள் தடைசெய்யப்பட்டுவிடும். வசதிபடைத்த நாடுகள் வறிய நாடுகளுக்கு மேலும் நிதியுதவியும், தொழில்நுட்ப உதவியும் வழங்கும்'' என்றும் அவர் கூறினார்.

''45 நாடுகளைச் சேர்ந்த 56 செய்திப் பத்திரிகைகள், காலநிலை மாற்றம் தொடர்பான இந்த உச்சிமாநாடு குறித்து திங்கட்கிழமை தலையங்கங்கள் தீட்டியிருந்தன. செல்வந்த நாடுகளும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் இதயபூர்வமான முடிவுகளை எட்டவேண்டும்'' என ஒரு தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.




## பங்களாதேஷில் பஸ் விபத்து: 20 பேர் பலி; 40 பேர் காயம்

டாக்கா, டிச. 08

பங்களாதேஷில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற வீதி விபத்து ஒன்றில் 20 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். 40 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

பங்களாதேஷின் தலைநகர் டாக்காவிலிருந்து சுமார் 101 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மத்திய பரிட்புர் மாவட்டத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

டாக்காவையும் தென்பரிசல் பிரதேசத்தையும் இணைக்கும் பெருந்தெருவில் இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதால் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த அநேகரின் நிலை கவலைக்கிடமாக இருக்கின்றமையால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று உள்ளூர் பொலிஸார் கவலை தெரிவித்துள்ளனர்.

உலகிலேயே அதிக வீதி விபத்துகள் இடம்பெறுகின்ற நாடுகளில் ஒன்றாக பங்களாதேஷ் உள்ளது.

ஒவ்வொரு வருடமும் சுமார் 10 ஆயிரம் பொதுமக்கள் வரை இங்கு வீதி விபத்துகளில் உயிரிழக்கின்றனர்.

## ஆப்கானுக்கு மேலதிக படைகளை அனுப்பி வைக்க துருக்கி மறுப்பு

இஸ்தான்புல், டிசெ.8

ஆப்கானிஸ்தானுக்கு மேலதிக படைச் சிப்பாய்களை இனிமேல் அனுப்பப் போவதில்லை என்று துருக்கி அரசு அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை சந்திப்பதற்காக அமெரிக்காவுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டுச் சென்றிருக்கும் துருக்கிப் பிரதமர் ரய்யிப் எர்டோகன் இந்த அறிவிப்பை விடுத்துள் ளார்.

ஆனால், ஆப்கான் படைச்சிப்பாய்களுக்குத் துருக்கி தொடர்ந்தும் போர்ப் பயிற்சிகளை வழங்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது ஈராக் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் குறித்து உரையாடுவார் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## ஆப்கானிலிருந்து அமெ. படை வாபஸா? ஒபாமாவின் திட்டத்துக்கு கடும் எதிர்ப்பு

வாஷிங்டன், டிசெ.8

அமெரிக்கப் படையினரை 2011 ஆம் ஆண்டிலிருந்து ஆப்கானை விட்டு அழைத்து வரவேண்டும் என்ற அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் திட்டத்திற்கு அமைச்சர்கள் மற்றும் செனட்டர்கள் மத்தியில் பாரிய எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

ஆப்கானில் பணியாற்றும் அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கையை தற்சமயம் அதிகரிக்கவுள்ளார் என்றும் ஆனால், 2011 ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்கப் படைச்சிப்பாய்கள் ஆப்கானை விட்டு அழைத்து வரப்படுவர் என்றும் பராக் ஒபாமா குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்ரன், பாதுகாப்பு அமைச்சர் ரொபர்ட் கேற்ஸ் ஆகியோர் கூட படையினரை 2011 ஆம் ஆண்டிலிருந்து நாட்டுக்குத் திருப்பி வரவழைக்கும் திட்டத்துக்கு அதிருப்தி தெரிவித்துள்ளனர். அவர்கள் ஜனாதிபதியின் இந்த யோசனையை அடியோடு நிராகரித்துவிட்டனர்.

2011 ஆம் ஆண்டிலிருந்து படையினர் திரும்பி அழைத்து வரப்படுவர் என்று காலக்கெடு ஒன்றை ஜனாதிபதி அறிவித்துள்ளமை ஏற்புடையதல்ல என்று வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் ரொபர்ட் கேற்ஸ் கருத்துக் கூறுகையில், ''ஆப்கானில் கடமையாற்றும் அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கையை அதிகரிக்கின்றமை ஒரு ஆரம்ப கட்ட நடவடிக்கை மாத்திரமே ஆகும்'' என்று தெரித்தார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு படையினரை பின்வாங்க வைக்கும் யோசனை தான்தோன்றித்தனமானது என்றும் ஒரு தலைப்பட்சமானது என்றும் குடியரசுக் கட்சியினர் விமர்சிக்கின்றனர்.

அத்துடன், படையினரை பின்வாங்க வைக்கும் ஜனாதிபதியின் யோசனை தலிபான் தீவிரவாதிகளுக்குப் புதிய தெம்பைக் கொடுத்துள்ளது என்றும் அவர்கள் விமர்சிக்கின்றனர்.

செனட்டர் ஜோன் மக்கெயின் கருத்துக் கூறுகையில், ''தீவிரவாதிகளுக்கு உற்சாகம் அளிக்கக்கூடிய வகையிலான செய்தியாக ஜனாதிபதியின் அறிவிப்பு அமைகின்றது'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்கு அதிகாரங்களைப் பகிராவிட்டால் இலங்கை புதிய சவால்களைச் சந்திக்க நேரிடும்

## எச்சரிக்கின்றது பாரதீய ஜனதாக் கட்சி



சென்னை, டிசெ.8

இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இலங்கை அரசு, அங்குள்ள தமிழர்களுக்கு அரசியல் தீர்வு காண விரைந்து செயற்படவில்லை என்றால் புதிய சவால்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

- இவ்வாறு பா.ஜ.கவின் முன்னாள் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான வெங்கையா நாயுடு எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

தமிழகம் மற்றும் அதன் அண்டை மாநில மக்கள், இலங்கைத் தமிழர்களின் நிலையைப் பார்த்தும், இந்திய அரசின் அணுகுமுறையைப் பார்த்தும், வெளியில் சொல்ல முடியாத அளவுக்கு கோபமும், வருத்தமும் அடைந்துள்ளனர்.

மறுவாழ்வு என்ற பெயரில், தமிழர்கள் ஒரு முகாமில் இருந்து வேறொரு முகாமுக்கு மாற்றப்படுகின்றனர்.

இலங்கையின் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா, தான் விருப்ப ஓய்வு பெற்றமைக்கு 16 காரணங்களைக் குறிப்பிட்டார். அதில், அங்குள்ள தமிழர் முகாம்கள் மோசமாக உள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து அங்குள்ள தமிழர்களின் நிலையைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

பா.ஜ.க. தீவிரவாதத்தை அனுமதிக்கவில்லை. தமிழ் ஈழக் கோரிக்கையை பா.ஜ.க. ஒத்துக்கொள்ளவில்லை. நிலையான, அமைதியான இலங்கை உருவாக வேண்டும் என்பதே எங்களின் விருப்பம்.

இலங்கையில் 3 லட்சம் தமிழர்கள் உள்ளனர் என்பது வெறும் சாதாரண எண்ணிக்கை அல்ல. அவர்களின் பிள்ளைகளுக்கு கல்வி, வேலைவாய்ப்பு போன்றவை ஏற்படுத்தப்பட வேண்டும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் 1987 இன்படி இலங்கையில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள தமிழர்கள், முஸ்லிம்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகள் விடயம் வேண்டுமானால் முடிந்திருக்கலாம். ஆனால் தமிழர் பிரச்சினை இன்னும் முடியவில்லை. இலங்கை அரசு, அங்குள்ள தமிழர்களுக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கவும், அரசியல் தீர்வு காணவும் விரைந்து செயற்படவில்லை என்றால் புதிய சவால்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தமிழக முதல்வர் கருணாநிதியும், இலங்கையின் உள் விவகாரத்தில் தலையிடுவது என்பது அதன் இறையாண்மையைப் பாதிக்கும் என்றாலும், இந்த விடயத்தில் இலங்கையைத் தனியாக கருத வேண்டும் என்று பிரதமருக்கு கடிதம் எழுதினார். அக்கடிதம் தொடர்பாக பிரதமரிடம் இருந்து எந்தப் பதிலும் இல்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சினையின் முக்கியத்துவத்தை மத்திய அரசு இன்னும் முழுமையாக உணரவில்லை. இது வேதனை அளிக்கிறது. எனவே, மத்திய அரசு அனைத்துக் கட்சி எம்.பிக்களை கொண்ட குழுவை இலங்கைக்கு அனுப்பி, அங்குள்ள உண்மை நிலைவரத்தை உறுதி செய்ய வேண்டும். இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் பிரச்சினை எழுப்ப உள்ளோம்.

பாபர் மசூதி இடிப்பு தினத்தில் ரயில் நிலையம் உள்ளிட்ட முக்கிய இடங்களில் பாதுகாப்பு அளிப்பதை ஆண்டுதோறும் சடங்காக மேற்கொள்வது தேவையற்றது. இதனால் எதையும் சாதிக்க முடியாது. வீணாக மக்களுக்கு மன உளைச்சல்தான் ஏற்படும். இந்தச் சடங்கை மேற்கொள்வது இதுவே கடைசியாக இருக்கட்டும் - என்றார்.

# புதிய மீன்பிடிச் சட்டத்தை கைவிடக்கோரி ஒரு வார வேலைநிறுத்தப் போராட்டம்

நாகை, டிசெ.8

மீன்பிடித் தொழில் ஒழுங்குமுறை வரைவு சட்டத்தைக் கைவிட மத்திய அரசை வலியுறுத்தி, கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லாமல் ஒரு வாரம் போராட்டம் நடத்துவது என்று நாகை, காரைக்கால் மாவட்ட மீனவர் சங்கத்தினர் முடிவு செய்துள்ளனர்.

மத்திய அரசு கொண்டு வந்துள்ள கடல் மீன்பிடித் தொழில் வரைவுச் சட்டத்தை உடனே ரத்துச் செய்ய வலியுறுத்தி, நாகை மற்றும் காரைக்கால் மாவட்ட மீனவ கிராம மக்கள் சார்பில் நாகை கீச்சாம்குப்பத்தில் நேற்று முன்தினம் ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு -

மத்திய அரசு கொண்டு வந்துள்ள கடல் 'மீன்பிடித் தொழில் வரைவுச் சட்டம் 2009' ஐ உடனடியாக ரத்துச்செய்ய வலியுறுத்தி டில்லியில் எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில் மீனவர்கள் திரளாக கலந்துகொள்ள வேண்டும்.

வரும் 14ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை நாகை, காரைக்கால் மாவட்டத்தில் உள்ள அனைத்து மீனவ கிராமங்களிலும் யாரும் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லாமல், தொழில் மறியலில் ஈடுபட வேண்டும். இந்த நாள்களில் வியாபாரிகள் மீன் விற்கக் கூடாது, மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



'ஒபிசிட்டி பவுண்டேஷன்- இந்தியா' சார்பில் கடற்கரை வீதியில் நடத்தப்பட்ட உடற்பருமன் குறித்த விழிப்புணர்வுப் பேரணியை கனிமொழி எம்.பி., இந்தியக் கிரிக்கெட் அணித் தேர்வுக்குழுத் தலைவர் ஸ்ரீசாந்த், நடிகர் ஸ்ரீகாந்த், நடிகை ரம்பா ஆகியோர் கொடியசைத்து ஆரம்பித்து வைத்தபோது...

# மீன்பிடி தொழில் சட்டத்தை எதிர்த்து பிரதமருக்கு ஒரு லட்சம் கடிதங்கள்

சென்னை, டிச. 08

மத்திய அரசின் 'மீன்பிடித் தொழில் ஒழுங்கு முறைச் சட்டம் 2009' என்ற புதிய சட்டத்தை எதிர்த்தும், அச் சட்டத்தை அமுல்படுத்தக் கூடாது என்று வலியுறுத்தியும் தென்னிந்திய மீனவர் நலச்சங்க அமைப்பு சார்பில் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அஞ்சல் அட்டை அனுப்பும் போராட்டம் நேற்று ஆரம்பமாகியது.

மீனவர் நலச்சங்கத் தலைவர் கு.பாரதி மற்றும் நிர்வாகிகள் காசிமேடுமீனவர்களிடம், பிரதமருக்கு அனுப்ப வேண்டிய அஞ்சல் அட்டைகளைப் பெற்றனர். இது குறித்து கு.பாரதி கூறுகையில் -

புதிய சட்டத்தை நிறைவேற்றக் கூடாது என்று வலியுறுத்தி தமிழகம் முழுவதும் இருந்து ஒரு லட்சம் அஞ்சல் அட்டைகளை பிரதமருக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளோம் - என்றார்.

## இந்தியச் செய்திகள்

# இந்தியக் கிரிக்கெட் அணிக்கு மக்களவையில் பாராட்டுமழை

புதுடில்லி, டிசெ.8

டெஸ்ட் போட்டியில் நம்பர் 1 இடத்தை பிடித்த இந்திய அணிக்கு மக்களவையில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. இலங்கைக்கு எதிரான 3ஆவது டெஸ்ட்டில் வெற்றி பெற்று இந்தியக் கிரிக்கெட் அணி தரவரிசையில் முதல் இடத்தை பிடித்துள்ளது.

உலகின் நம்பர் வன் இடத்தைப் பிடித்துள்ள இந்திய அணிக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன. இந்நிலையில், மக்களவையில் நேற்று உறுப்பினர்கள் இந்திய அணிக்கும், அணித்தலைவர் டோனி மற்றும் ஷேவாக்கிற்கு பாராட்டுத் தெரிவித்தனர்.

மும்பை டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இந்திய அணி இலங்கைக்கு எதிரான தொடரைக் கைப்பற்றியதோடு, ஐ.சி.சி. தரவரிசையிலும் முதல் இடத்தை பிடித்திருப்பது பெருமைக்குரிய விடயம் என்று மக்களவை சபாநாயகர் மீராகுமார் தெரிவித்தார்.

கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறையாக இந்தச் சாதனையை இந்தியா நிகழ்த்தியிருக்கிறது என அவர் தெரிவித்தார். டோனியின் தலைமை மற்றும் ஷேவாக்கின் அற்புதமான ஆட்டத்தையும் அவர் பாராட்டினார்.

தன்னோடு சேர்ந்து இந்த அவையும் இந்திய அணியைப் பாராட்டி பெருமைப்படும் என்று நம்புகிறார் என சபாநாயகர் கூறியதும் அனைத்து உறுப்பினர்களும் மேசைகளைத் தட்டி தங்களது ஆதரவை தெரிவித் தனர்.

# திறமையிருந்தால் முஸ்லிமும் பிரதமர் பதவியில் அமரலாம்

## ராகுல் காந்தி தெரிவிப்பு



அலிகார், டிச. 08

ஒரு குறிப்பிட்ட பிரிவினரோ அல்லது மதத்தினரோதான் இந்தியாவின் பிரதமராக முடியும் என்றில்லை. திறமை இருந்தால் முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவரும் பிரதமராகலாம் - என்று காங்கிரஸ் பொதுச்செயலரும் அமேதி தொகுதி எம்பியுமான ராகுல் காந்தி தெரிவித்தார்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் இளைஞர் காங்கிரஸின் அமைப்புத் தேர்தலில்.போட்டியிட விருப்பம் உடையவர்களுடன் ஆலோசனை நடத்த இரு நாள்கள் பயணத்தை ராகுல் காந்தி திங்கட்கிழமை தொடங்கினார்.

முதல் முறையாக அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்துக்கு திங்கட்கிழமை வருகை தந்த அவர் மாணவர்களிடம் கலந்துரையாடினார். அப்போது மாணவர்களும் அரசியல் தொடர்பாக அவரிடம் கேள்விகளை கேட்டனர்.

ஒரு மாணவர் அவரைப்பார்த்து, நாடு சுதந்திரம் பெற்று எத்தனையோ ஆண்டுகளான பிறகும் முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த எவரும் இதுவரை பிரதமர் பதவியில் அமரமுடியவில்லையே என்று வேதனை தெரிவித்தார். அதற்கு பதிலளித்து ராகுல் காந்தி கூறியவை வருமாறு -

எந்த மதத்தைச் சார்ந்தவர் அல்லது எந்த சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதைப் பார்த்து பிரதமர் பதவிக்கு யாரும் தேர்வு செய்யப்படுவதில்லை. திறமை இருந்தால் யாரும் எந்தப் பிரிவினரும் இந்தப் பதவிக்கு வரலாம். தம்மிடம் போதிய திறமை இருந்தால் முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவரும் பிரதமர் பதவியில் அமரலாம்.

நமது பிரதமராக உள்ள மன்மோகன் சிங், சீக்கிய வகுப்பைச் சேர்ந்தவர் என்பதால் அந்த பதவி அவருக்கு கிடைத்ததா என்றால் இல்லை. அவரிடம் அசாத்திய திறமை உள்ளது. அதற்கான பரிசுதான் அவருக்கு அந்த பதவி.

முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர்களில் எத்தனை பேர் அரசியலில் உள்ளனர். குறிப்பாக சொல்லப்போனால் இளைய தலைமுறையினர் அதில் ஈடுபாடு காட்டுவதாகவே தெரியவில்லை. எனவே முஸ்லிம் வகுப்பில் உள்ளவர்கள் அரசியலில் ஈடுபாடு காட்டவேண்டும். அரசியலில் பிரகாசிக்கவேண்டும்.

சீக்கியர் ஒருவர் பிரதமராவார் என்று யாரும் கனவிலும் நினைத்து பார்த்திருக்கவில்லை. எண்ணிக்கை கொண்ட நமது நாட்டில் சீக்கியருக்கு அந்தப் பதவி கிடைத்துள்ளது. பரந்து விரிந்த நமது நாட்டில் மிகக் குறைந்த சதவீதத் தினரே சீக்கிய சமுதாய மக்கள்.

# அயோத்தியில் ராமர் கோவில் கட்ட அனுமதி கோரி ரயில் மறியல்போர்!

## இந்து முன்னணியினர் கைது

அயோத்தியில் ராமர் கோவிலை கட்டுவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி சென்னை ரயில் நிலையத்தில் ரயில் மறியல் செய்ய முயன்ற இந்து முன்னணி அமைப்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

அயோத்தியில் ராமர் கோவிலை கட்டுவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்து முன்னணி அமைப்பு சார்பில் சென்னை புறநகர் ரயில் நிலையத்தில் மறியல் போராட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதையொட்டி ரயில் நிலையத்தில் பொலிஸ் படை குவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மு.ப. 10 மணியளவில் நூற்றுக்கணக்கான இந்து முன்னணியினர் புறநகர் ரயில் நிலையம் வழியாக பிளாட்பாரத்திற்குள் நுழைய முயன்றனர். பொலிஸார் அவர்களை ரயில் நிலையத்திற்குள் செல்ல விடாமல் தடுத்தனர்.

இதைத் தொடர்ந்து புறநகர் ரயில் நிலையம் அருகில் இந்து முன்னணி மாநில துணைத்தலைவர் கார்த்திக்கேயன் தலைமையில் போராட்டம் நடைபெற்றது. மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் கண்ணன், மாவட்ட தலைவர் எஸ்.எஸ்.முருகேசன் உட்பட நூறுக்கும் மேற்பட்டவர்கள் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.

போராட்டம் குறித்து கார்த்திகேயன் கூறும்போது, கடந்த காலங்களில் இந்துக்களின் கோவில்கள் தரை மட்டமாக இடிக்கப்பட்டுள்ளன. அதை அவர்களால் மீட்டுத் தர முடியுமா? அயோத்தி, மதுரா, காசி ஆகிய இடங்களில் இந்துக் கோவில் கட்டுவதற்கு மத்திய அரசு எங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும். இதை வலியுறுத்தித்தான் போராட்டம் நடைபெறுகிறது - என்றார்.

# அரசியலில் இறங்க வேண்டாம்; விஜய்க்கு அஜித் ஆலோசனை!



விஜய் அரசியலில் இறங்கக் கூடாது. அவரை அரசியல் நிம்மதியாக இருக்க விடாது. அதற்காக அவரைக் கட்டாயப்படுத்தவில்லை. அவருக்கு என்ன விருப்பமோ அதைச் செய்யட்டும் - என்று அஜித் கூறியுள்ளார்.

சமீபத்தில் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்த அஜித் மேலும் கூறியவை வருமாறு-

அரசியல் எனக்கு வேண்டாம். சரி வராது. விஜய்யின் அரசியல் பிரவேசம் அவர் தனிப்பட்ட விடயம். என்னைப் பொறுத்தவரை அவர் அரசியலுக்கு வர வேண்டாம்.

அரசியலுக்கு வருவதால் அவரது குடும்பம், நண்பர்கள் மற்றும் ரசிகர்கள் வேண்டுமானால் சந்தோஷப்படலாம். ஆனால் மற்றவர்களுக்கு அதில் எந்த அளவு சந்தோஷமிருக்கும் என்று தெரிய வில்லை.

அவருடன் நிறையப் பேசி பழகியிருக்கிறேன். அவரது நலன் விரும்பியே இதை நான் சொல்கிறேன். ஆனால் அரசியலில் ஈடுபடும் முடிவு அவரது சொந்த விருப்பம்.

என்னைப் பொறுத்தவரை இனி படங்களின் தரத்தில் அதிக கவனம் செலுத்தப் போகிறேன். எனக்கும் 40 வயது ஆகப் போகிறது. இந்த வயதில் வாழ்க்கையும் தரமாக இருக்க வேண்டும், படங்களும் தரமாகத் தர வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளக்குடியமர்ந்தோர் பிரச்சினைகள் குறித்து யாழ். வந்துள்ள தூதுவர்கள் விரிவாக ஆராய்வு

## பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடினர்

யாழ்ப்பாணம், டிசெ .8

யாழ். குடாநாட்டில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக பிரிட்டிஷ், நோர்வே தூதர்கள் பல தரப்பினரையும் நேரில் சந்தித்து விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

இருநாள் விஜயமாக நோர்வேத் தூதர் ரோரா ஹட்ரீம், பிரிட்டிஷ் தூதர் கலாநிதி பீற்றர் ஹைஸ் ஆகியோர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள மக்களின் தற்போதைய நிலைமை அவர்களின் தேவைகள் குறித்து அறிந்து கொள்வதற்கே அவர்கள் வருகை தந்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் நயினாதீவுக்குச் சென்ற இவர்கள் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம், நாகதீப விகாரை ஆகியவற்றுக்குச்சென்று வழிபாடுகளில் கலந்து கொண்டனர்.

நேற்றுக் காலை யாழ்.செயலகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, யாழ். அரச அதிபர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

குடா நாட்டில் மீள் குடியமர்ந்துள்ள மக்களுக்காக அரசு மேற்கொண்டுள்ள மறுவாழ்வுத்திட்டங்கள், 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டுள்ள திட்டங்கள் ஆகியன தொடர்பாக தூதர்கள் கேட்டறிந்தனர் என்று அரச அதிபர் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து யாழ். ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகத்துடன் குடாநாட்டில் தற்போதைய நிலைமைகளைக் கேட்டறிந்தனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், அரசசார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள், ஐ.நா. முகவர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் தூதர்கள் கலந்துரையாடினர்.

படை அதிகாரிகளுடனும் தூதர்கள் பேச்சுக்களை நடத்தினர்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகளை 'கியூடெக்' அலுவலகத்தில் நேற்று மாலை தூதர்கள் சந்தித்து அவர்களுடன் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்ந்தனர். (ஒ-1)



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட பிரிட்டிஷ், நோர்வே தூதர்கள் வடக்கு ஆளுநர், யாழ். அரச அதிபர் ஆகியோரை செயலகத்தில் சந்தித்தபோதும் யாழ். ஆயர் இல்லத்தில் ஆயரை சந்தித்தபோதும் எடுக்கப்பட்ட படங்கள். *(படங்கள்: லக்ஸ்மன், உமா)*

## பரிசளிப்பு விழா

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

கல்லூரி அதிபர் வி.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சுச் செலாளர் ஆர். இளங்கோவன் கலந்து கொள்வார்.வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஒ-1)

## பிறந்த தினத்தன்று பிரசாரத்தை ஆரம்பிக்கின்றார் பொன்சேகா

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிடும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தமது 59 ஆவது பிறந்த தினமான எதிர்வரும் 18 ஆம் திகதி தமது தேர்தல் பிரசார நடவடிக்கையை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கின்றார்.

அவர் அன்றைய தினம் கண்டி தலதா மாளிகைக்குச் சென்று விசேட வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் சோதிடர்களால் குறித்துத் தரப்பட்டிருக்கும் சுப நேரத்தில் தமது பிரசார நடவடிக்கைகளை தொடங்குவார்.

இந்த வைபவத்தில் அவரை ஆதரிக்கும் எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பைச் சேர்ந்த தலைவர்களும் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும், தமது பிறந்த தினமான டிசெம்பர் 18 ஆம் திகதிக்கு முன்னதாக ஏனைய எதிரணித் தரப்புகளான ஜே.வி.பி., ஐ.தே. முன்னணி போன்றவை அவரை ஆதரித்து நடத்தும் பிரசாரக் கூட்டங்களில் சரத் பொன்சேகா கலந்துகொள்வார். (அ-சி)

## நியமனம் பெற்ற உதவி ஆசிரியர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், டிசெ.8

வடமராட்சி கல்வி வலயத்தில் புதிதாக நிய மனம் பெற்ற சகல உதவி ஆசிரியர்களையும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வடமராட்சி ஆசிரிய நிலையத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## நலன்புரி முகாம்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும், கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச செயலர் பிரிவிலும் மீளக் குடியமர்த்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பூநகரி, துணுக்காய் பகுதிகளில் 25 ஆயிரத்து 500 பேரும், ஒட்டுசுட்டான், வவுனியா வடக்கு, கரைச்சிப் பகுதிகளில் 17 ஆயிரம் பேரும் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

வன்னிப்பகுதியில் மீளக்குடியமர்த்தப்பட்ட அகதிகள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இல்லை. துணுக்காய் பஸ் டிப்போவைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அங்கு மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு இலவச போக்குவரத்து வசதி வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று அப்பகுதிக்குக் கடமைக்குச் செல்லும் யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த அரச ஊழியர்களுக்கும் இலவச பஸ் சேவை வசதி வழங்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்த்தப்படாத பகுதிகளில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. ஒரு நாளுக்கு 5 ஆயிரம் சதுர மீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுவருகின்றன. ஏ-9 பாதை ஊடாக வாகனங்கள் தடையின்றிச் சென்று வருவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

சங்குப்பிட்டிப் பாலம் பிரிட்டன் அரசின் உதவியுடன் புனரமைக்கப்படவுள்ளது. புனரமைப்புப் பணிகள் ஜனவரியில் ஆரம்பமாகவுள்ளன. சாட்டி கடற்கரைப் பகுதியில் பெரிய ஹோட்டல்களும் அமைக்கப்படவுள்ளன. சர்வதேச வங்கியான எச்.எஸ்.பி.சி. வங்கி தனது கிளையை யாழ்ப்பாணத்தில் விரைவில் திறக்கவுள் ளது. இதன் மூலம் சர்வதேசத்தின் பார்வை யாழ்ப்பாணத்தின் மீது திரும்பியுள்ளது என்றார் ஆளுநர்.

யாழ். நகரப்பகுதியில் உள்ள பிரபல ஹோட்டல்கள் பல பாதுகாப்புத்தரப்பினரின் பாவனையில் உள்ளன. அவை விடுவிக்கப்படுமா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஆளுநர், பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக எதுவும் கூறமுடியாதெனத் தெரிவித்தார். (ஒ-50-111)

## அரசின் பக்கத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரைத் தொடர்ந்து ஐ.தே.கட்சியின் எம்.பிக்கள் பலரும் மற்றும் அக்கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் பலரும் அரசுடன் இணைவர் என்றும் அவர் மேலும் சொன்னார்.

தாஜ் சமுத்திரா ஹோட்டலில் அவர் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''ரணில் விக்கிரமசிங்க 2017 ஆம் ஆண்டுவரை கட்சித் தலைவராகத் தாம் இருக்க வேண்டும் என்பதற்காக அக்கட்சியின் எதிர்காலத்தைக் கேள்விக்குள்ளாக்கி விட்டார். சரத் பொன்சேகாவை எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக நிறுத்துவதற்கு அவர் இணங்கியதன் மூலம் அக்கட்சி பெரும் சீரழிவைச் சந்தித்துள்ளது.

### ரணில் விக்கிரமசிங்காவே காரணம்

எப்போதும் இராணுவ ஆட்சியையே விரும்பியிருக்கும் ஜே.வி.பியும் இந்தக் கூட்டமைப்பில் இணைந்துள்ளது. இதற்கு நாம் இடமளிக்க முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் கூட்டமைப்பாக இணைந்து பொது வேட்பாளர் ஒருவரை இறக்கியதன் மூலம் ஜே.வி.பிக்குத்தான் நன்மை அதிகம்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி. தனித்துப் போட்டியிட்டால் ஆகக் கூடியது இரண்டு ஆசனங்களைத்தான் பெற்றுக்கொள்ளும். ஆனால், இந்தக் கூட்டமைப்பில் இணைந்து போட்டியிடும் போது 34 ஆசனங்களையாவது ஜே.வி.பி. பெற்றுக்கொள்ளும். இதன் மூலம் ஐ.தே.க தான் பாதிக்கப்படப்போகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி இந்நிலைக்குத் தள்ளப்படுவதற்கு ரணில் விக்கிரமசிங்கதான் காரணம். அக்கட்சியின் செயற்குழுவும், அரசியல் விவகாரக்குழுவும் ரணிலின் விருப்பத்தின்படியே தீர்மானமெடுக்கின்றன. அக்குழுக்களில் இருப்பவர்கள் ரணிலால் நியமிக்கப்பட்டவர்கள். அங்கு ஜனநாயகம் அறவே கிடையாது.

ரணிலின் சர்வாதிகார நடத்தை காரணமாகவே மிகவும் முக்கியமானவர்கள் எல்லாம் கட்சியை விட்டு விலகிச் சென்றனர். கட்சியின் யாப்பின்படி தலைவரை நீக்க முடியாது. இது ஒரு சர்வாதிகாரப் போக்கு.

நான் இந்த முடிவெடுத்தமை ஐக்கிய தேசியக் கட்சியை அழிப்பதற்கல்ல. பாதுகாப்பதற்குத்தான். இந்த நாட்டில் மஹிந்த ராஜபக்ஷதான் மீண்டும் ஜனாதிபதியாக வருவார். அவரின் வெற்றிக்காக நான் கடுமையாக உழைப்பேன்.

### பொன்சேகாவால் வெற்றி பெறமுடியாது

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகளின் ஆதரவை சரத் பொன்சேகா பெற்றிருப்பதால் அவர் ஒரு பலமான வேட்பாளர்தான். ஆனால், அவரால் வெற்றி பெற முடியாது. மஹிந்த ராஜபக்ஷ 5 லட்சம் மேலதிக வாக்குகளால் வெற்றி பெறுவார்.

மஹிந்த ராஜபக்ஷவிற்கான மக்கள் ஆதரவு அதிகரித்துக்கொண்டு வருகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் அரசு பேச்சு நடத்தி வருகின்றது. ஆகவே, மஹிந்தவின் வெற்றியை எவராலும் தடுக்க முடியாது.

நான் அரசுடன் இணைவதற்கு நிபந்தனைகள் எவற்றையும் விதிக்கவில்லை. அமைச்சுப் பதவி பெறுவது பற்றியும் நான் ஜனாதிபதியுடன் பேசவில்லை. நாடாளுமன்றத் தேர்தலுக்கு இரண்டு, மூன்று மாதங்கள் இருக்கும் நிலையில் அமைச்சுப் பதவிகளை எடுத்துப் பிரயோசனமில்லை - என்றார். (அ-சி)

## ஜனாதிபதித் தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் பொது வேட்பாளராகத் தமிழர் ஒருவரை நிறுத்தும் திட்டம், கூட்டமைப்புக்குள் ஆதரவு இழந்து போன நிலையில், இரு பிரதான வேட்பாளர்களில் யாரை ஆதரிப்பது என்ற வினாவே கூட்டமைப்பு வட்டாரங்களில் முக்கியமாக ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றது.

இத் தேர்தலில் வெற்றி - தோல்வியைத் தீர்மானிக்கும் விடயமாகத் தமிழர்களின் வாக்குகள் மாறலாம் என்று கணிப்பிடப்படும் சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெறும் தீவிர முயற்சியில் இரு பிரதான வேட்பாளர்களின் தரப்புகளும் ஈடுபட்டுள்ளன.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தனுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் ஏற்கனவே இத்தேர்தல் தொடர்பாகத் தனித்த னியே பேசியிருந்தனர் என்பது தெரிந்ததே.

நேற்று முன்தினம் இரவு இரா.சம்பந்தனுடன் ஜெனரல் பொன்சேகா விரிவான பேச்சுகளில் ஈடுபட்டார். இரவு எட்டு மணிமுதல் நள்ளிரவு பன்னிரண்டு மணிவரை நீடித்த இந்தப் பேச்சுகளின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியான கரு ஜயசூரியவும் உடனிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பேச்சுகள் எதிர்பார்த்ததை விட மிகவும் நம்பிக்கை ஊட்டுவனவாக இருந்தன என்ற சாரப்பட இரா.சம்பந்தன் தமது கூட்டமைப்பின் ஏனைய முக்கிய தலைவர்களிடம் தகவல் வெளியிட்டார் என அறியவந்தது.

சம்பந்தர் எழுப்பிய பல்வேறு வினாக்கள் தொடர்பில் சரத் பொன்சேகா அளித்த பதில்களும் உறுதிமொழிகளும் சம்பந்தருக்குத் திருப்தி தருவனவாக அமைந்தன என்று குறிப்பிட்டு அவற்றைப் பட்டியலிட்டன கூட்டமைப்பு வட்டாரங்கள்.

இதேவேளை, கடந்த வாரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசியிருந்த [illegible] பின் பெறுபேறுகள் தொடர்பில் தமது [illegible] சகாக்களிடம் சற்று அவநம்பிக்கை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், மறுபுறத்தில் , நேற்று முன்தினம் இரவு தமிழ்க் கூட்டமைப்பின் மற்றொரு தலைவரான சுரேஷ் பிரேமச்சந்திரனுடன் பஸில் ராஜபக்ஷ எம்.பி. சுமார் ஒன்றரை மணி நேரம் பேச்சு நடத்தினார் என அறியவந்தது. இந்தச் சந்திப்பின் போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் இரா.யோகராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்த அரசுத் தலைமை தொடர்பாகவும், அதன் போக்குத் தொடர்பாகவும் தமிழ் மக்களுக்கும் கூட்டமைப்புக்கும் உள்ள ஆதங்கங்கள், அதிருப்திகள், கோபங் கள் குறித்து இந்தச் சந்திப்பின்போது சுரேஷ் பிரேமச்சந்திரன் பஸிலிடம் விரிவாக விளக்கினார் எனத் தெரிகின்றது.

யுத்த வெற்றியின் பின்னர் சாந்தி, சமாதானம், சமரசம் ஆகியவற்றை வலியுறுத்திய அசோக மன்னன் போல - ஒரு சகாப்தத்தின் உன்னத தலைவராக - மிளிரவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்புகிறார் என்று இந்தப் பேச்சுகளின்போது குறிப்பிட்ட அவரின் சகோதரர் பஸில் ராஜபக்ஷ, இந்தத் தேர்தலிலும் வென்று அதன் மூலம் தமிழர்களுக்கு உரியதைத் தாமே வழங்கி - செய்து - காட்ட ஜனாதிபதி விரும்புகின்றார் என்றும் குறிப்பிட்டார் எனத் தெரிகின்றது.

அதற்காக, ஜனாதிபதிக்கு வாய்ப்பு வழங்கி ஒத்துழைக்கக் கூட்டமைப்பு முன்வரவேண்டும் என்றார் பஸில்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உடனடியாகவும், நீண்டகால் அடிப்படையிலும் எவையெவற்றைச் செய்யவேண்டும் எனத் தமிழ்க் கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றதோ அவற்றையெல்லாம் பட்டியலிட்டுத் தருமாறும் - தாம் ஜனாதிபதியுடன் நேரடியாகப் பேசி அவற்றில் செய்யக்கூடியவை பற்றிய தகவலைக் கூட்டமைப்புக்குத் தெரியப்படுத்துவார் எனவும் -

பஸில் ராஜபக்ஷ, சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் கூறியிருக்கின்றார்.

இவைபற்றித் தொடர்ந்து பேச்சு நடத்தவும் இந்தச் சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் தேர்தல் பணிக்காக 3 தூதர்கள் நாடு திரும்புகின்றனர்

கொழும்பு, டிச. 08

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் கடமையாற்றும் மூன்று தூதுவர்கள் ஜனாதிபதியின் விசேட அழைப்பின்பேரில் நாட்டுக்குத் திரும்பி வருகின்றார்கள் எனத் தெரியவருகின்றது.

ஈரானுக்கான இலங்கைத் தூதுவர் எம்.எம்.சுஹைர், மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் நியூட்டன் குணரட்ண, பிலிப்பைன்ஸிற்கான இலங்கைத் தூதுவர் வடு நாவலகே பென்னெற் கூரே ஆகியோரே இவ்வாறு திரும்பி வருபவர்கள் ஆவர்.

இவர்களை நாட்டுக்குத் திருப்பி அனுப்பிவைக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிவிவகார அமைச்சுக்குப் பணித்திருந்தார் என்று கூறப்பட்டது.

இவர்கள் இலங்கையில் இப்பணிக்காகத் தங்கியிருக்கும் காலப் பகுதியிலும் கூட வெளிநாடுகளிலுள்ள இலங்கையின் தூதுவர்கள் என்ற வகையில் இவர்களுக்கான வெளிநாட்டுக் கொடுப்பனவுகள், வெளிநாட்டுப் படிகள், சம்பளங்கள் போன்றவற்றைத் தவறாது வழங்குமாறு வெளிவிவகார அமைச்சர் றோஹித போகொல்லாகம அமைச்சின் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்காகத் தேர்தலை ஒட்டி வேலைசெய்யும் நாள்களில் நியூட்டன் குணரட்ண ஜனாதிபதியின் ஊடகப் பிரிவில் கடமையாற்றுவார் என்றும், ஏனைய இருவரும் ஜனாதிபதியின் கொழும்பு மாவட்டத்துக்கான இணைப்பாளர்களாகச் செயற்படுவார்கள் என்றும் கூறப்படுகின்றது. (சி)

# பிரதேச சபைத் தலைவர் துப்பாக்கிச் சூட்டில் தப்பினார்

கொழும்பு, டிச. 08

அநுராதபுரம் மாவட்டத்தில் நொச்சியாகம பிரதேச சபையின் தலைவர் சரத் குமாரஸ்ரீ நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை அவரை இலக்குவைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் மயிரிழையில் உயிர் தப்பினார் எனக் கூறப்படுகின்றது.

அவர் இரு சகபாடிகளுடன் ஜீப் ஒன்றில் பயணம் செய்துகொண்டிருந்தபோது அவரது வாகனத்தை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும், எனினும் தெய்வாதீனமாக ஜீப்பில் இருந்த அனைவரும் தப்பிப் பிழைத்தனர் என்றும் கூறப்பட்டது.

அநுராதபுரம் வைத்தியசாலைக்கு நோயாளி ஒருவரை அழைத்துச் சென்ற குமாரஸ்ரீ திரும்பி வந்து கொண்டிருந்த போது அநுராதபுரம் - புத்தளம் வீதியில் அமைந்துள்ள உலுப்பக்குளம் என்ற இடத்தில் வைத்து அவரது வாகனத்தை நோக்கி இத்துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டிருக்கிறது.

# இரு தரப்புகளுடனும் பேசிய பின்பே மலையக மக்கள் முன்னணி முடிவு

## கட்சித் தலைவர் அமைச்சர் சந்திரசேகரன் தகவல்

கொழும்பு, டிச. 08

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பிரதான இரு வேட்பாளர்களுடனும் பேச்சு நடத்திய பின்னரே மலையக மக்கள் முன்னணி தனது முடிவை அறிவிக்கும் என அக்கட்சியின் தலைவர் அமைச்சர் பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

பிரதான வேட்பாளர்களான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜெனரல் சரத் பொன்சேகா ஆகிய இருவருடனும் தங்கள் கட்சி, தனித்தனியாகப் பேச்சு நடத்த உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுகளின் போது மலையக மக்களின் பிரச்சினைகள் மற்றும் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு ஆகியவற்றை ஒட்டிய முக்கிய கோரிக்கைகளைத் தாங்கள் முன்வைப்பர் எனவும், அவை தொடர்பில் பிரதான வேட்பாளர்கள் வெளிப்படுத்தும் பிரதிபலிப்புகளின் அடிப்படையில் யாரை ஆதரிப்பது என்பது குறித்துத் தாங்கள் தீர்மானிப்பர் எனவும் அவர் மேலும் கூறினார்.

# லொறியின் கூடாரத்தில் பயணித்தவர் தூக்கி வீசப்பட்டுக் காயம்

லொறியின் கூடாரத்தில் அமர்ந்து பயணித்தவர் வீதியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த கயிற்றில் சிக்கி தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் நெல்லியடி - சாவகச்சேரி வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சாவகச்சேரியைச் சேர்ந்த எம். பாயிஸ் (வயது - 21) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஒ-207)

# கொவிசெத சுவீப் முடிவுகள் இவை

யாழ்ப்பாணம், டிசெ. 8

நேற்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட கொவிசெத 732 ஆவது சீட்டிழுப்பில் M மற்றும் 29, 57, 60, 65 என்பன வெற்றி இலக்கங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

அதன் பிரகாரம் நான்கு இலக்கங்களையும் சரியாக வரிசைப்படுத்திய ஒருவருக்கு 2 மில்லியன் ரூபா பரிசாகக் கிடைக்கும்.

ஆங்கில எழுத்துடன் மூன்று இலக்கங்களைச் சரியாக வரிசைப்படுத்திய 11 பேருக்குத் தலா இருபதாயிரம் வழங்கப்படும்.

மூன்று இலக்கங்களைச் சரியாக வரிசைப்படுத்திய 339 பேருக்குத் தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கும்.

ஆங்கில எழுத்துடன் இரண்டு இலக்கங்களைச் சரியாக வரிசைப்படுத்திய 633 அதிர்ஷ்டசாலிகளுக்கு தலா ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

இரண்டு இலக்கங்களைச் சரியாக எழுதிய 15,892 பேருக்கு தலா ஐம்பது ரூபா வீதம் வழங்கப்படும்.

ஆங்கில எழுத்து ஒரு இலக்கத்தைச் சரியாக எழுதிய 9010 பேருக்கு தலா நாற்பது ரூபா பரிசாகக் கிடைக்கும்.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாக எழுதிய 2,26,362 பேருக்கு இருபது ரூபா வீதம் பரிசாக வழங்கப்படும்.

ஆங்கில எழுத்தை மாத்திரம் சரியாக எழுதிய 35,679 பேருக்குத் தலா இருபது ரூபா கிடைக்கும். (அ)

# புதிய மணிக்கோபுர கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், டிசெ.08.

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலயத்தில் புதிய மணிக்கோபுர கும்பாபிஷேகம், புதிய மணி ஒலிப்பு, வாணி விழாப் போட்டிகளின் பரிசளிப்பு, புதிய புத்தகம் வழங்கல், வருடாந்த மாணவர் தேர்ச்சி அறிக்கை வழங்கல் ஆகிய நிகழ்வுகள் நாளை புதன்கிழமை காலை 7.30 மணியளவில் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் மு. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வடமாகாண சாரண ஆணையாளர் ரி.என்.போஜன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஒ-1)

# முன்னாள் புலி உறுப்பினர்கள் 100 பேர் இம்முறை பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகினர்

கொழும்பு, டிசெ. 8

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த 100 முன்னாள் உறுப்பினர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் வழிகாட்டல்களின் காரணமாக குறித்த இளைஞர்கள் உயர்தரப் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பரீட்சைக்குத் தோற்றிய முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களில் 100 பேர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் உள்ளிட்ட நாட்டின் பல்கலைக்கழகங்களில் தமது கல்வியை இவர்கள் தொடர உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்கள் நீண்ட காலத்திற்கு தடுத்து வைக்கப்படுகிறார்கள் என்ற சில விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் வகையில் அரசு இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகக் கருதப்படுகிறது.

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு அரசு அதிக முனைப்பு காட்டி வருவதாக நீதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

## யாழ். வேம்படி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு யாழ். இந்துக்கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, கண்டி புஸ் பதான மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் மாணவர்களின் கலாசார நிகழ்ச்சிகளும் தொடர்ந்து பாடநூல் வழங்கலும் இடம்பெறும்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து யாழ். மத்திய கல்லூரியின் துணை நூல் விற்பனை நிலையத்தைத் திறந்து வைக்கும் கல்வி அமைச்சர் பிரேமஜயந்த சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் "இசுறு" திட்டக் கட்டடத்திற்கான அடிக்கல்லை நடுவார்.

அதையடுத்து பிற்பகல் 4மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வழிபாட்டில் கலந்துகொண்ட பின்னர் அமைச்சர் கொழும்பு திரும்புவார். (ஒ-1)

## அவசரகால....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவெடுத்துள்ளது என அறிய முடிகிறது.

நாடாளுமன்ற நடவடிக்கைகளை ஜனாதிபதித் தேர்தல் நிறைவடையும் வரையிலும் தற்காலிகமாக இடைநிறுத்திவைப்பதற்கு அரசு கலந்தாலோசித்த போதிலும், அவசரகாலச்சட்டத்தை நீடித்துக்கொள்ள வேண்டியிருப்பதனால் இன்று சபை கூடுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற பிரதான இரு வேட்பாளர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளமையை அடுத்து ஆளும் தரப்பு, எதிர்க்கட்சிகள் தங்களது பிரசார நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளன. அரசில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளின் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற, மாகாண, பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், அமைப்பாளர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பிரசாரத்தைத் தீவிரமாக முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒருமாதத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதம் வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்திற்குப் பின்னர் ஆரம்பித்து மாலை 3.30 மணி வரை நடைபெறும் என அறியமுடிகிறது.

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சார்பில் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் ஆணையாளர் அலுவலகத்துக்கு நேற்றுக்காலை சென்று கட்டுப்பணமாக ரூபா 50 ஆயிரத்தைச் செலுத்தினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அதற்கான கட்டுப்பணத்தை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை தேர்தல் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை ஆறு பேர் சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

## வங்கிக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு புதிய கிளை திறக்கப்படுகின்றது. சர்வதேச வங்கிகளும் தமது கிளைகளை அங்கு ஆரம்பிக்கலாம்.

இலங்கை மத்திய வங்கி கிளிநொச்சியில் தனது கிளையைத் திறக்கவுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்கான முகாம்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வங்கிக் கிளைகளில் அந்த மக்கள் சுமார் இருநூறு கோடி ரூபாவரை வைப்பிலிட்டுள்ளனர்.

வவுனியா முகாம்களில் பல வங்கிகளின் நடமாடும் கிளைகள் உள்ளன.

இடம்பெயர்ந்த மக்கள் கைகளிலும் கால்களிலும் காசுகளை மறைத்து வைத்தபடி இந்த நடமாடும் வங்கிச் சேவைகளுக்கு வருகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்கள் அதிகளவில் மீள்குடியமர்த்தப்பட்ட பின்னர் அவர்களுக்கு வரும் வெளிநாட்டு நாணயத்தின் அளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம் - என்று அவர் குறிப்பிட்டார். (அ-சி)

## மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ழக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளன.

வீரசிங்கம் மண்டபத்தில் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை இந்த நிகழ்வுகள் இடம்பெறும்.

அதைத் தொடர்ந்து முத்தமிழ் சங்கமத்துடன் மக்கள் பேரணி இடம்பெற்று மாலை 6.30 மணிக்கு தீபமேற்றும் நிகழ்வு நடைபெறும்.

இந்த நிகழ்வுகளில் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, ஜனநாயக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான மனோகணேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.அரியநேத்திரன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் த.சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பத்மநாபா பிரிவுத் தலைவர் எஸ். சிறீதரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

யாழ். நகரில் ஒரே மேடையில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஒன்று கூட விருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-1)


விடுமுறை காலவகுப்பு
சடமும் கதிர்ப்பும்
By: M.கருணாநிதி
Mon - Fri 1.30 pm
ஆரம்பம்: 10.12.2009
N.E.W
ஆனைப்பந்தி (குருகுலம் அருகில்)
விடுமுறைகாலத்தில் அலகு பூர்த்தியாக்கப்படும்.

புதிய நியூட்டன் அக்கடமி
கோண்டாவில்
புதிய கல்வியாண்டு 2010
தரம் 1 முதல் O/L வரை
சகல வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன
ஆரம்பம் :- 12.12.2009 SAT 3.00 PM
புதிய அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

மாபெரும் மலிவு விற்பனை
50 வருட பூர்த்தியை முன்னிட்டு
20% - 40% வரையான விசேட கழிவு
எங்களிடம் எல்லாவிதமான அப்பியாசக் கொப்பிகள், பாடப்புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், சிறுவர்களுக்கான நாலுறூள், இரட்டை றூள் கொப்பிகள் (160,80 பக்கங்களில்) மற்றும் எழுதுகருவிகள் அனைத்தையும் ஒரே கூரையின்கீழ் தெரிவுசெய்து குறைந்த விலையில் தரமான பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம். தரம் குறைந்த கொப்பிகளைப் பெற்று பிள்ளைகளின் தரத்தைக் குறைக்காதீர்கள்.
2500 ரூபா பெறுமதிக்கு அதிகமாக கொள்வனவு செய்பவர்களுக்கு அழகிய (My Clear Bag - Rexion) இலவசமாக வழங்கப்படும்.
சனி, ஞாயிறு தினங்களில் முழுமையாக எமது நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றும் என்பதனை அறியத்தருகின்றோம்.
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

அதிரடி விலைக்கழிவு
எமது ஸ்ரூடியோவில் படம் பிடித்திட......
அடையாள அட்டைப் படம் 80 /=
(4x6)அளவிலான படங்கள் 30/=
பிரதியாக்கம் (ஸ்ரூடியோ மட்டும்) 9/=
பனர், ஸ்டிக்கர் 70/=
மூர்த்தி டிஜிடல் கலர் லாப், யாழ்ப்பாணம்.

ஐடியல் அக்கடமி
புதிய பிரிவுகள் ஆரம்பம்
10.12.2009 (வியாழன்)

| சீரணிச்சந்தி, சண்டிலிப்பாய். | இடைப்பிட்டி, காரைநகர். | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | பிரதான வீதி, மானிப்பாய். |
|---|---|---|---|
| 6 AM | 9.30 AM | 3 PM | 8 AM |

"ஐடியல்" No 1 நிறுவனம் என்று நாம் சொல்வதில்லை கல்விச்சமூகம் தான் சொல்கிறது.
சொல்வோம் ! செல்வோம் ! வெல்வோம் !
கணித ஆசானும் நிர்வாகியும் V.Nபத்மநாதன்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org